# இராமலிங்கரும் தமிழும்



ஊரன் அடிகள்

இருந்தமிழே உன்ஞல் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்ருலும் வேண்டேன்.

—தமிழ்விடுதூது.

தமிழ்மொழிக் குயர்மொழி தரணியில் உளதெனின்
வெகுளியற்றிருப்போன் வெறும் புலவோனே.

—தண்டபாணிசுவாமிகள்.

# இராமலிங்கரும் தமிழும்

ஆசிரியர்

சன்மார்க்க தேசிகன்

என்னும்

ஊரன் அடிகள்

சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம்

சமயபுரம் அஞ்சல்—திருச்சிராப்பள்ளி மாவட்டம்

31—12—1967

முதற் பதிப்பு. 31—12—1967
All Rights Reserved

விலை ரூ. 1—25
உயர்ந்த பதிப்பு ரூ. 1—50

ஜோதி பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி-2.

# நற்ருய்க்கு உரிமை நவிற்சி

''அன்னேயும் பிதாவும் முன்னறி தெய்வம்''

எமது பாட்டனும் முதற் குரவருமாகிய மண்ணச்ச நல்லூர் உபாத்தியாயர் திரு ஆ. சுப்பா பிள்ளை அவர் களுக்கு ஒரே மகளாய் 12—5—1919 சித்தார்த்தி-ஞு சித்திரை-மீ 30உ திங்கட்கிழமையன்று பிறந்து, எம்மைப் பாலூட்டித் தாலாட்டி வளர்க்கின்ற காலத்தே, உயிரிரக் கத்தையும் தெய்வ பக்தியையும் ஊட்டிப் பின்னர்ப் பிள்ளைப்பருவத்தே தனது தந்தையாரிடத்தில் தான் கற்ற பாடங்களையெல்லாம் சொல்லியும் படித்த புத்தகங்களைக் காட்டியும் எம்மைச் செந்தமிழால் வளர்த்துக் குறுகிய காலமாகிய நாற்பதாண்டுகள் இந் நிலவுலகில் அன்பே வடிவாய், இரக்கமே உயிராய், ஆசிரியர் மகள் என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்து 23—9—1958 விளம்பி-ஞு புரட்டாசி-மீ 7உ செவ்வாய்க் கிழமையன்று இவ்வுலக வாழ்வை நீத்த எமது பூர்வா சிரம நற்ருய்

நாகரத்தினம் அம்மையார்

அவர்களின் நன்னினைவாக இந்நூல் நின்று நிலவுக.

தாய்மொழிச் சிறப்பைக் கூறும் இந்நூல் தாய்க் குரிமையாதல் திருவருளின் பொருத்தமேயன்ருே !

'' தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை,''

# பொருளடக்கம்


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| தமிழ் | ... | 1 |
| இராமலிங்க அடிகள் | ... | 4 |
| அடிகளின் அருளிச் செயல்கள் | ... | 9 |
| தம்மைத் தமிழகத்திற் பிறப்பித்தமைக்காக அடிகள் இறைவனுக்கு நன்றி கூறல் | .... | 11 |
| தமக்குத் தமிழ்ப்பற்றை உண்டாக்கியதற்காக அடிகள் இறைவனுக்கு நன்றி கூறல் | .... | 15 |
| தமிழ் என்னும் சொல்லுகிட்ட உரை | ... | 19 |
| உலகெலாம் என்னும் மெய்ம்மொழிப் பொருள் விளக்கம் | ... | 26 |
| வடகலைக்கும் தென்கலைக்கும் உறுகணக்கு | ... | 32 |
| செந்தமிழால் வளர்க்கின்றாய் | ... | 35 |
| அடிகள் பதிப்பித்த நூல்கள் | ... | 37 |
| அடிகள் இயற்றிய நூல்கள் | ... | 47 |
| அடிகள் போற்றிய அருள் நூல்கள் | .... | 54 |
| திருவருட்பா வெளிவந்த வரலாறு | ... | 75 |
| அருட்பா மருட்பா போர் | ... | 77 |
| அடிகள் நிறுவிய பாடசாலைகளும் பத்திரிகையும் | ... | 82 |
| அடிகள் தமிழ்ச் சிங்கம் | ... | 85 |
| சமகாலப் புலவர்களும் பெரியோர்களும் | ... | 87 |
| நாம் செய்யவேண்டுவன | ... | 89 |

# முன்னுரை

இராமலிங்க அடிகள் தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் செய்துள்ள தொண்டு பெரிது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ் வளர்ச்சியில் அடிகட்கு இன்றியமையாததோர் இடமுண்டு. அடிகளின் தமிழ்த்தொண்டுகளை அறிய முற்படுமுன் பத்தொன்பதாம் நூற்றாண்டினது தமிழ்நிலையை முன்னர் அறிந்து கொள்ளவேண்டும்.

காய்த லுவத்த லகற்றி ஒருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்றகுணந் தோன்றாத தாகும் உவப்பதன்கண்
குற்றமும் தோன்றாக் கெடும்.

— அறநெறிச்சாரம் 42

என்ற ஆராய்ச்சி இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழும் ஆராய்ச்சிப் பேரறிஞர் திரு மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ்நிலை, வளர்ச்சி வரலாறுபற்றிப் 'பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்' என்னும் சிறந்ததோர் நூலை எழுதியுள்ளார்கள். அன்பர்கள் அதனைப் பயில்வது பெரிதும் பயனுடைத்தாம்.

சேக்கிழார் பெருமான் நூலாசிரியரும், உரையாசிரியரும், போதகாசிரியரும், ஞானசிரியரும் ஆவரெனத் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சேக்கிழார் பிள்ளைத் தமிழுட் கூறுகின்றனர்.

நாடிய விரிநூல் சொற்றிடு திறனால்
நன்னூலா சிரியன்

நகுபா சுரமுத லுரைசெய் தலினால்
நவிலுரை யாசிரியன்

நீடிய பரசம யக்குழி வீழ்ந்தவர்
நீப்பப் போதனைசெய்

நிலையாற் போத காசிரி யன்னிவை
நிகழ்தொறு நிகழ்தோறும்

ஆடிய ஞானத் திறனுற லான்ஞா
ஞசிரி யனுநீயென்
ருன்ரேர் பலரும் புகழப் படுபவ
வகில மெலாஞ்சென்று
கூடிய புகழ்சால் குன்றத் தூரன்
கொட்டுக சப்பாணி
கொற்றச் சேவையர் காவல நாவல
கொட்டுக சப்பாணி.

— சப்பாணிப் பருவம் 9

இராமலிங்க அடிகள் நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர், ஞாஞசிரியர் ஆகிய நால்வகை யாசிரியரோடு பதிப்பாசிரியரும் ஆவார். மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் ஆகிய நூல்களை இயற்றியமையான் நூலாசிரியரும், ஒழிவிலொடுக்கப் பாயிர விருத்தி முதலியவற்றைச் செய்தமையான் உரையாசிரியரும், பலருக்குப் பாடஞ் சொன்னமையான் போதகாசிரியரும், ஒழிவிலொடுக்கம், தொண்டமண்டல சதகம், சின்மய தீபிகை ஆகிய நூல்களைப் பதிப்பித்தமையான் பதிப்பாசிரியரும், உலகர் அனைவர்க்கும் திருவருண் ஞானத்தை வாரி வாரி வழங்கியமையான் ஞாஞசிரியரும் ஆவார் என்க.

தமிழ் நாட்டில் முதல் முதலாகத் திருக்குறள் வகுப்பினைப் பொதுமக்களுக்காகத் தொடங்கி நடத்தியவரும், முதியோர் கல்விக்கு முதன் முதலாகப் பாடசாலை நிறுவியவரும், முதன் முதலாக மும்மொழிப் பாடசாலை (தமிழ், வடமொழி, ஆங்கிலம்) நிறுவியவரும் அடிகளேயாவர்.* முதன் முதலாகக் கல்வெட்டுக்களை ஆராயத்தொடங்கிய தமிழ்ப் பெரியாரும் அடிகளேயாவர்.

தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் தொண்டாற்றிய அடிகளைத்தமிழுலகம் இன்னும் நன்கறியவில்லை. அடிகளது தமிழ்த்தொண்டுகளை ஒருவாறு அறிவிப்பதே இந்நூலாகும்.

---

* அடிகள் அமைத்தது இம்மூன்று மொழிகளையும், விரும்பியோர்க்குக் கற்பிக்கும் பாடசாலையாம். இதனைத் தற்போது பேசப்பட்டு வரும் மும்மொழிப் பாடத்திட்டத்துடன் சேர்த்துக் குழப்பிக்கொள்ளக் கூடாது.

1968 ஜனவரி 3—10 வரை சென்னையில் நிகழவிருக்கும் இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கில் (IInd International Conference Seminar of Tamil Studies. Sponsored by the International Association of Tamil Reserch and the Government of Madras) ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று படிக்க வேண்டி கருத்தரங்குக் குழுவினர் எம்மை அழைத்தார்கள். அவ்வழைப்பிற் கிசைந்து, 'இராமலிங்க அடிகளின் தமிழ்த் தொண்டுகள்' (Saint Ramalingar's contribution to Tamil Language and Literature) என்னும் ஓர் ஆராய்ச்சிக்கட்டுரையை ஆங்கிலத்திலெழுதி அனுப்பியுள்ளோம். அஃது கருத்தரங்கில் எம்மால் படித்தாராயப்படவிருக்கிறது.

அடிகளது தமிழ்த்தொண்டுகளைக் குறித்து 'இராமலிங்கரும் தமிழும்' என்றொரு நூலெழுதவேண்டுமெனப் பலகாலமாகவே கருதியிருந்ததால் அதற்கான குறிப்புகளை நாளடைவில் தொகுத்து வந்தேம். அக்குறிப்புகளை நூலாக்கி இப்போது வெளியிடுதற்கு உலகத் தமிழ்க்கருத்தரங்கின் அழைப்புத் துணை செய்தது. இதனை விரிவாக எழுதத்திட்டமிட்டு மிகப்பல குறிப்புகளைத் தொகுத்து வைத்திருந்தேம். கருத்தரங்கினை ஒட்டி விரைவில் நூலை வெளிப்படுத்தக் கருதியமையின் அவற்றைச் சுருக்கிச் சிறிய வடிவில் இந்நூல் அமைக்கப்பெற்றது. இரண்டாம் பதிப்பு விரிவாக எழுதப்பெறும்.

இந்நூல் அச்சிடுங்காலத்து, சைவசித்தாந்த மகா சமாஜத்தின் செயலாளராகவும், துணைத் தலைவராகவுமிருந்த ஆராய்ச்சிப் பேரறிஞர் கடலூர் திரு தி. கி, நாராயணசாமி நாயுடு அவர்கள், பிஷப்ஹீபர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், திரு வித்துவான் மு. கணபதி அவர்கள், இந்து சமய அறநிலையப் பாதுகாப்புத் துறையின் கீழ் திருச்சிராப்பள்ளியில் சமயப் பரப்புநராகப் பணியாற்றும் திரு பழ. தரும. ஆறுமுகம் அவர்கள், திரு புலவர் அ. சம்பந்தமூர்த்தி அவர்கள் ஆகிய நால்வரும் உடனிருந்துதவினர். காவியப் புலவராகத்திகழும் திரு மு. கணபதி அவர்கள் சிறந்த ஓவியப் புலவரும் (Fully qualified Artist) ஆவார். இந்நூலுக்கு அழகான அட்டையை அமைத்துத்தந்தவர் அவரே. பொன்மலை திருவருட்பா விளக்கஉரையாளர் திரு

புலவர் வீ. இளங்கண்ணனூர் அவர்கள் இந்நூற்கு ஓர் அணிந்துரை அளித்தனர். இவர்கள் அனைவர்க்கும் எமது வணக்கமும் வாழ்த்தும், நன்றியும் உரிய.

இந் நூலின் இறுதியில் 'நாம் செய்யவேண்டியன' என்ற தலைப்பின் கண்ணே கூறப்பட்டுள்ளனவற்றைச் செய்தற்கு சென்னை இராமலிங்க மிஷன் தலைவர் திரு நா. மகாலிங்கம், B SC. M. I E. அவர்கள் ஓர் ஏற்பாட்டினைச் செய்யக் கருதியுள்ளார்கள். அவ்வேற்பாடு அமையுங் காலம் வெகு தொலைவிலில்லை.

இப்பணியில் எம்மை ஆட்படுத்திய திருவருளையும், வள்ளற் பெருமானது பெருங்கருணையையும் போற்றி வழிபடுகின்றோம்.

வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே!

சமயபுரம்,
31-12-1967.

ஊரன்.

பொன்மலை திருவருட்பா விளக்கவுரையாளர்

**திரு புலவர் வீ. இளங்கண்ணனார்**

அவர்கள் அளித்த

# அணிந்துரை

"இருந்தமிழே உன்னா லிருந்தேன் இமையோர்
விருந்தமிழ் தமென் றாலும்வேண் டேன்".

"இராமலிங்கரும் தமிழும்" என்னும் இந்நூல் செந்தமிழ் மொழியின் சிறப்பினை வள்ளற் பெருமான் உணர்ந்தவாறு உணர்த்துவது. நம் அருமைத் தாய்மொழியாம் தமிழினைப் போற்றிச் சிறப்பித்த சான்றோர்களுள் இராமலிங்க அடிகளே முன்னிற்பவராவர். அடிகள் தாய்மொழியினிடத்துப் பற்றுக் கொண்டு தமிழைச் சிறப்பித்தமை போன்று பிறரெவரும் சிறப்பித்திலர். தம்மைத் தமிழ் நாட்டின் கண்ணே தமிழராகப் பிறப்பித்த திருவருட் பெருங்கருணையைப் போற்றிப் பெருமை யுறுகின்றனர். "தமிழ் என் கிளவி இனிமை செப்பும்" என்பதற்கு மேலாக ஒரு தத்துவ உரையும் செய்துள்ளனர். திருவாசகம் போன்ற அருள் இலக்கியங்கள் வடமொழி வேதங்களிலும் உயர்ந்தவை என்பதைத் தம் பாட்டாலும் உரையாலும் நிலைநிறுத்துகின்றனர்.

இவ்வண்ணம் இராமலிங்க அடிகள் செந்தமிழின் திட்ப நுட்பம் பற்றி வண்ணவண்ணமாகக் கூறும் சீரிய கருத்துக் களையெல்லாம் தொகுத்தும், வகுத்தும், விரித்தும், தம் ஆய்வுத் திறனாலும், வள்ளலாரின் அருட்டிறனாலும், "இராமலிங்கரும் தமிழும்" என்னும் இந்நூலினைத் தவத்திரு ஊரன் அடிகள் ஆக்கியளித்துள்ளார்.

இந்நூலாசிரியர், திருச்சிராப்பள்ளி மாவட்ட சமரச சன் மார்க்க சங்கத்தின் தலைவராகவும், திருச்சிராப்பள்ளி இளைஞர் இலக்கிய மன்றத்தின் தலைவராகவும் சென்னை இராமலிங்க மிஷனின் கௌரவ ஆலோசகராகவும், அதன் முத்திங்களிதழின் ஆசிரியராகவும் விளங்கிப் பல்வேறு சன்மார்க்கப்பணிகளைப் புரிந்து வருபவர் ஆவார். தம் உறைவிடத்தில் ''சமரச சன் மார்க்க ஆராய்ச்சி நிலையம்'' ஒன்றினை நிறுவித் தமக்கே உரிய நுண்மாண் நுழை புலத்துடன் திட்பமும் நுட்பமும் செறிந்த ஆராய்ச்சியும் செய்து வருகின்றார். இவ்வாராய்ச்சியின் பயனாக எழுந்ததே ''வடலூர் வரலாறு'' என்னும் வரலாற்று நூலாகும். இராமலிங்கரும் தமிழும் என்னும் இந்நூல், ஆசிரியரின் இரண்டாவது படைப்பு. இந்நூலின்கண் தென் மொழி என்பதற்கு அறிவுமொழி என்று உரை கண்டு, எளிய எடுத்துக் காட்டுடன் ஆய்ந்திருப்பது தமிழ் நலம் சான்றோர் வியக்கத்தக்கதாம்.

திருவரங்கம், வேலூர், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங் களில் நகரமைப்பு ஆய்வராகப் (Town Planning Inspector) பல்லாண்டுகள் பணியாற்றிய நைட்டிக பிரமச்சாரியாகிய, இந்நூலாசிரியர், அவ்வலுவல் தன் சன்மார்க்கத் தொண் டிற்குத் தடையெனக்கருதி, அதனை நீத்துத் துறவு பூண்டுள் ளார். மேலும் பல ஆராய்ச்சி நூல்களை எழுதியுள்ளார். அவைகளையும் திருவருள் வலத்தால் விரைவில் வெளியிடுவா ராகில் மயக்கமுற்றிருக்கும் சன்மார்க்கவுலகம் தெளிவடையும் என்பது மிகையன்று.

செந்தமிழின் மாட்டுத் தணியாக் காதல்கொண்டுள்ள ஆசிரியரின் இந்நூல், தமிழகச் சான்றோர்களுக்குச் சிறந்த தோர் விருந்தாகவும் ;

''தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனையென்
தாய் தடுத்தாலும் விடேன்''.

என்னும் பாவேந்தரின் பாடலை உன்னி, வீறுகொண்டு குமுறிக் கொண்டிருக்கும் இக்கால இளைஞர் உலகுக்கு ஓர் எரிமலை யாகவும் திகழும்.

சென்னையில் நடக்கும் உலகத் தமிழ் மாநாட்டின்போது இந்நூல் வெளிவருவது சாலப் பொருந்தும்.

இத்தகைய மாண்புற்று இலங்கும், ''இராமலிங்கரும் தமிழும்'' என்னும் இந்நூல் ஒவ்வொரு தமிழர் இல்லத்திலும் இருக்கவேண்டியது இன்றியமையாததாகும்.

இத்தகைய ஆய்வு நூல்கள் மேலும் பல வெளியிட்டுச் சன்மார்க்கப் பணிபுரியத் திரு ஊரன் அடிகட்கு வள்ளற் பெருமான் திருவருள் பாலிப்பாராக!

பொன்மலை.
31—12—67

வீ. இளங்கண்ணனார்.



திருவருட்பிரகாச வள்ளலார்

**இராமலிங்க அடிகள்**



இறுக்கம் இரத்தின முதலியார்க்கு அடிகள்
எழுதிய கடிதம் ஒன்றின் கையொப்பம்

சிதம்பரம்<br>இராமலிங்கம் என இரண்டு வரிகளாக எழுதியும்
அடிகள் கையொப்பமிடுவர்.

# இராமலிங்கரும் தமிழும்

## தமிழ்

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருள்கடியு—மாங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.

—தண்டியலங்காரம், மேற்கோள்.

கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ.

—திருவிளையாட்டற்புராணம்

இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்.

—தமிழ் விடு தூது.

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்
இனிதாவதெங்கும் காணோம்.

—பாரதியார்.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்று பல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

—மனோன்மணீயம்.

தமிழ், உயர் தனிச் செம்மொழி ; இயற்கை மொழி ; இனிய மொழி ; எளியமொழி ; தூயமொழி ; பழையமொழி ; இலக்கியச் செழுமை மிக்க மொழி ; நிரம்பிய இலக்கண வரம்புடைய மொழி ; தெய்வத்தன்மை படைத்த மொழி ; எல்லாப்பொருள் களும் ஒருங்கே அமைந்த மொழி ; அன்பு நெறியை அடிப்படை யாகக்கொண்ட மொழி ; அருள் பெறுவதற்கான நல்வழியைக் காட்டும் மொழி ; இறையியலேயும் உயிரியலேயும், உலகியலே யும் உள்ளவாறே உணர்த்தும் மொழி ; இம்மைக்கும் மறுமைக் கும் உதவும் நன்மொழி. வேற்று நாட்டவரும் வேற்றுமொழி யினருமான கால்டுவெல் (Right Rev. Robert caldwell L. L. D., D. D ,), வீரமாமுனிவர் (Father C. J Beschi), தத்துவ போதகர் (Robert De Nobili), ஸீகன்பால்கு (Barthalomew Zieganbalg), எல்லிஸ் (F. W. Ellis), பெர் ஸிவல் (Rev. Pater Percival), வின்ஸ்லோ (Rev. Dr. Winslow), துரு (Rev. W. H. Drew), போப் (Rev. G. U . Pope M. A., D. D.) போன்ற பேரறிஞர்களேக் கவர்ந்து, போற்றிப்படித்து மகிழச் செய்த இன்மொழி. பெஸ்கியை வீரமா முனிவராகவும், ராபர்ட் நோபிலியைத் தத்துவ போதக சுவாமியாகவும் மாற்றிய அருமை மொழி.

டாக்டர் போப் தம்மைத் தமிழ் மாணவன் என்றே சொல் லிக் கொள்வார். தமது கல்லறையின்மீது ' இங்கு ஒரு தமிழ் மாணவன் கிடக்கின்றான் ' (Here lies a Student of Tamil) என்று பொறிக்க வேண்டுமென்பதே அவரது இறுதி ஆசை. ' ஞாலமளந்த மேன்மைத் தமிழ் ' என்று சேக்கிழார் பாராட்டு வது எத்துணே பேருண்மை ?

இயலிசை நாடகமெனப்பிரிந்து யாவரையும் ஈர்க்கும் இத் தமிழ்மொழியின் பெயரைக் கூறும்போதெல்லாம் புலவர்களும் பெரியோர்களும் அருந்தமிழ், அருட்டமிழ், இன்றமிழ், ஒண் டமிழ், கன்னித்தமிழ், சங்கத் தமிழ், சீர்த்தமிழ், செந்தமிழ், நற்றமிழ், நறுந்தமிழ், தண்டமிழ், திருநெறித் தமிழ், தீந் தமிழ், தென்றமிழ், தெய்வத்தமிழ், பழந்தமிழ், பசுந்தமிழ், பூந்தமிழ், பைந்தமிழ், முத்தமிழ், வண்டமிழ் என அடை யுடுத்தே வழங்குவர்.

வடநூற்கடலுங் தமிழ்நூற்கடலுநிலை கண்டுணர்ந்த சிவஞான முனிவர் தமிழ் மொழியின் இலக்கணச் சிறப்பைத் தொல்காப்பியப் பாயிர விருத்தியுள், ' தமிழ் மொழிப் புணர்ச்சிக்கட்படும் செய்கைகளும், குறியீடுகளும், வினைக் குறிப்பு, வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம் புறம் என்னும் பொருட் பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப் பாகுபாடுகளும். அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுளிலக்கணமும், இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படா '', என்று கூறுவர்.

இறை மாண்பில் தமிழ்மொழி சிறந்த தென்பதனைப் பேராசிரியர், தெ. பொ மீனுட்சி சுந்தரனுர் அவர்கள் "If Latin is the language of law, Hebrew the language of ethical Religion. Sanskrit the language of philosophy. English, French and German are languages of science, Tamil is the language of the poetry of Divine experience" எனக் கூறுவர்.

நனி சிறந்த இத் தமிழ் மொழியை, இயற்கை உண்மைச் சிறப்பியல் மொழி என்பர் இராமலிங்க அடிகள். அடிகளது தமிழ்த்தொண்டு பெரிது. அடிகள் தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் ஆற்றிய தொண்டுகளைக் கூறுவதே இந்நூல்.

# இராமலிங்க அடிகள்

திருவள்ளுவர், திருமூலர், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், பட்டினத்தார், தாயுமானவர் என வாழையடி வாழையாக வரும் திருக்கூட்ட மரபில் சென்ற நூற்றாண்டினிடையே நந்தமிழகத்தில் வந்துதித்த செந்தமிழ் ஞானி திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள் (*1823 — 1874*) ஆவார்.

அடிகள் பிறந்த திருவூர் தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரத்திற்கு வடமேற்கே சற்றேறக்குறையப் பத்துக்கல் தொலைவிலுள்ள மருதூர் என்னும் சிற்றூர். அடிகளை மகனாகப் பெறும்பேறு பெற்றோர் இராமையபிள்ளை, சின்னம்மாள் என்போர். இவர்கள் குலம் சைவ வேளாளர் குலம்; மரபு கருணீகர் மரபு. இப்பெற்றோர்களுக்கு ஐந்தாவது மகவாக அடிகள் 5—10—1823-ல் பிறந்தார். தந்தையார் இராமைய பிள்ளை, கிராமக்கணக்கர். பிள்ளைகளைக்கூட்டிப் பாடஞ்சொல்லும் கணக்காயராகவும் அவர் விளங்கினார். அடிகள் பிறந்த ஓராண்டுக்குள் இராமைய பிள்ளை காலமானார். குடும்பத்துக்கு வேறு ஆதரவின்மையால் சின்னம்மையார் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு தாம் பிறந்து வளர்ந்த ஊராகிய பொன்னேரிக்குக் குடியேறினார். சில காலம் பொன்னேரியில் வாழ்ந்தனர். பின்பு மூத்த மகன் சபாபதி பிள்ளையின் தலைமையில் குடும்பம் சென்னைக்குக் குடியேறியது. சபாபதி பிள்ளை, காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாரிடம் கல்வி கற்றுப் புராணப் பிரசங்கம் செய்வதைத் தொழிலாகக் கொண்டு குடும்பத்தை நடத்தி வந்தார்.

அதுகாலை சிறுவராயிருந்த இராமலிங்கர்க்குத் தாமே கல்விப் பயிற்சியைத் தொடங்கிவைத்தார். பின்பு பள்ளிக்கு அனுப்பப்பட்டபோது இராமலிங்கர் பள்ளி செல்ல மறுத்துவிட்டார். உலகியற் படிப்பில் அவருக்கு நாட்டமில்லை. கற்கவேண்டுவனவற்றை இறைவனிடமே கற்றார். கேட்க

வேண்டுவனவற்றை இறைவனிடமே கேட்டார். அடிகளின் கல்வியும் கேள்வியும் இறைவனிடத்துப் பெற்றதேயொழிய வேறு எவ்வாசிரியரிடத்தும் பெற்றதல்ல. இறைவன் அடிகளைப் பள்ளி பயிற்ருது தானே கல்வி பயிற்றினுன். இங்ஙனம் ஓதாதே உற்ற கலைகளை எல்லாம் உணர்ந்தார்.

சிறுவராயிருந்த போதே அடிகள் அருட்பாடல்களைப் பாடத் தொடங்கினுர். சென்னைக் கந்த கோட்டத்தில் கோயில் கொண்டருளும் முருகப் பெருமானைப்பற்றிப் பற்பல பாடல்கள் பாடித் துதித்தார். தெய்வமணிமாலையும் கந்தர் சரணப் பத்தும் அடிகளால் அச்சிறு பருவத்தே கந்தகோட்டத்தில் முதன் முதலிற் பாடப் பெற்றவை. கந்த கோட்டத்திற்கு இன்றுள்ள பேரும் புகழும் செல்வமும் சிறப்பும் அன்றில்லை. அடிகளால் பாடப்பெற்ற பின்பே அது பேரும் புகழும் செல்வமும் சிறப்பும் பெற்றது. கந்த கோட்ட வழிபாட்டில் ஈடுபட்ட அடிகள் தமது வீட்டில் மாடியறையில் தனித்திருந்தும் முருக உபாசனை செய்தார். இககாலத்தில் அடிகட்கு அகவை ஏழு அல்லது எட்டாண்டாகலாம். ஒன்பதாம் ஆண்டில் இறைவனல் ஆட்கொள்ளப்பட்டார். பன்னிரண்டாம் ஆண்டு முதல் முறையான ஞான வாழ்வைத் தொடங்கினுர்.

இதன் பின் நாடோறும் சென்னையிலிருந்து திருவொற்றியூர் சென்று தியாகப் பெருமானையும் வடிவுடையம்மையையும் இனிய பாமாலைகள் பாடி வழிபடுவாராயினர் தாம் தொடுக்கும் பாமாலைகளோடு மணிவாசகரின் திருவாசகம் முதலிய தெய்வப்பாக்களையும் பாடியுருகுவார். ஓர் இரவில் திருவொற்றியூரிலிருந்து காலங்கடந்து திரும்பிய அடிகள் பசியோடு திண்ணையிற் படுத்தயர்ந்தபோது வடிவுடையம்மை அது கண்டு பொறுக்கப் பெருது அடிகளின் அண்ணியார் வடிவில் தோன்றி உணவளித்து மறைந்தார். இவ்வாறு அம்மையின் அருள் பெற்ற அடிகள் பல பதிகங்களை ஒற்றியூரின் மேற் பாடிப் பரவினர். அவை பிற்காலத்தில் திருவருட்பாவின் இரண்டாவது மூன்ருவது திருமுறைகளாக அமைந்தன.

அடிகளைப் பலர் வந்தடுத்தனர். தொழுவூர் வேலாயுத முதலியார் அடிகளிடம் வந்து மாணவரானுர் மற்றும் சிலர் அடிகளிடத்துப் பாடங் கேட்டனர். அன்பர் சிலரின் வேண்டுகோளுககிணங்க ஒழிவிலொடுக்கம் (1851), தொண்ட மண்டல சதகம் (1855), சின்மய தீபிகை (1857) என்னும் மூன்று நூல்களை அடிகள் பதிப்பித்தனர். உரை நடை நூல் கள் மிக அரிதாகத் தோன்றத் தொடங்கிய அக்காலத்தில், பெரிய புராணத்துள் வரும் மனுச் சோழர் வரலாற்றை 'மனு முறை கண்ட வாசகம்' என உரைநடை நூலாக எழுதி யருளினர். வசன நூல்களுக்கோர் வழிகாட்டியாக அது புலவர்களாற் போற்றப்பட்டது. பல நூற்பகுதிகளுக்கு உரை எழுதினர். சென்னையிற் கூடிய பெருங்கூட்டத்தினிடையே அரிய பெரிய விரிவுரைகள் பலவற்றைச் செய்தனர். இங்ஙனம் அடிகள் அருட் கவிஞராய், ஞானசிரியராய், போதகாசிரியராய் நூலாசிரியராய், உரையாசிரியராய், பதிப் பாசிரியராய், வியாக்கியான கர்த்தராய் சென்னையிற் சிறந்து விளங்கினர்.

திருமணம் செய்து கொள்ளுமாறு குடும்பத்தாரும் பிறரும் அடிகளை வற்புறுத்தினர். முதலில் அடிகள் சற்றும் இசைந் தாரிலர். பின்னர் வற்புறுத்தலுக்காளாகி தமது தமக்கையார் உண்ணுமுலையம்மையாரின் மகள் தனதம்மாளைத் திருமணம் செய்துகொண்டார். எனினும் அடிகள் இல்வாழ்வில் ஈடுபட வில்லை. இல்வாழ்வில் ஈடுபடாத அடிகள் பாடும் பணியே பணியாகக்கொண்டு திருவலிதாயம் திருமுல்லை வாயில் முதலிய தலங்கள் தோறும் சென்று பாமாலை சாத்தி வழி பட்டு வந்தார்கள். நாளடைவில் அடிகளைப் பெருங் கூட்டம் சூழ்ந்தது. அமைதியை விரும்பிய அடிகட்கு அவ்வாரவாரச் சூழ்நிலை அமைதியைத் தருவதாயில்லை. சென்னை வாழ்வு தமது ஞான வாழ்க்கைக்கு இசைந்து வாரா தென்பதை உணர்ந்தார்கள். குடும்பத்தாருடன் கூடியிருப்பதும் அடி கட்கு ஒருவித இன்னலாக இருந்திருக்கக் கூடும். இவற்றின் விளைவாகச் சென்னை வாழ்வை நீத்துத் தாம் பிறந்த ஊராகிய மருதூர்ப் பக்கம் நோக்கிப் புறப்பட்டார்கள்.

வடலூர்க்கு அருகிலுள்ள கருங்குழி என்னும் ஊரில் மணியக்காரர் ரெட்டியார் வீட்டில் அடிகள் தங்கினார்கள். அது முதல் கருங்குழியே அடிகளின் உறைவிடமாயிற்று. கருங்குழியில் உறையத் தொடங்கிய காலம் 1858-ஆம் ஆண்டாகும். இதன் பின்பு அடிகள், சிதம்பரம் சென்று வழிபட்டு வருவதை வழக்கமாகக் கொண்டார்கள். தில்லையைக்குறித்து ஆயிரக்கணக்கான அருட்பாடல்களைப் பாடியருளினார்கள். அடிகளது சமரச சன்மார்க்கக் கொள்கைகள் அவர்களிடத்தே தோன்றி உருப்பெறத் தொடங்கிய காலம் இதுவே.

கடவுள் ஒருவரே ; அவர் அருட்பெருஞ் சோதியர் ; அவரை உண்மையான அன்பால் வழிபட வேண்டும்; சிறு தெய்வ வழிபாடு கூடாது ; அத் தெய்வங்களின் பேரால் உயிர்ப்பலி முதலியன கூடாது ; புலால் உண்ணக் கூடாது ; சாதி, சமயம் முதலிய எவ்வித வேறுபாடும் கூடாது ; ஏழைகளின் பசி தவிர்த்தலாகிய சீவகாருண்ய ஒழுக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல் ; எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணியொழுக வேண்டும் ; எதிலும் பொது நோக்கம் வேண்டும் ; இறந்தவரைப் புதைக்க வேண்டும் ; எரிக்கக் கூடாது ; கருமாதி, திதி முதலிய பொருளற்ற சடங்குகள் வேண்டா; என்பன அடிகளின் சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கைகளாம். இக் கொள்கைகளைப் பின்பற்றவும் பரப்பவும் 1865-ஆம் ஆண்டில் 'சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்' என்ற ஒரு சங்கம் அடிகளாரால் நிறுவப்பெற்றது. அற்றார் அழி பசி தீர்த்தலாகிய சீவகாருண்ய ஒழுக்கத்தை நடத்தும் பொருட்டு வடலூரில் சத்திய தருமச் சாலையை 1867-ஆம் ஆண்டில் அடிகள் நிறுவியருளினார்கள். தருமச் சாலையை அமைத்தபின் அடிகள் அதனையே உறைவிடமாகக் கொண்டார்கள்.

தருமச் சாலையில் வர வரக் கூட்டம் பெருகவே அடிகள் தனித்திருக்கக் கருதி 1870-ஆம் ஆண்டில் வடலூருக்குத் தெற்கே இரண்டு கல் தொலைவிலுள்ள மேட்டுக்குப்பம் என்னும் சிற்றூரில் குடிசையொன்றை அமைத்துக் கொண்டு உறையத் தொடங்கினார்கள். அக் குடிசைக்கு அவர்கள்

இட்ட பெயர் 'சித்திவளாகம்' என்பது. 'சித்திவளாகத் திருமாளிகை' என அன்பர்கள் வழங்குவர்.

எல்லாச் சமயத்தாரும் வேறுபாடின்றிப் பொதுவாக இறைவனை ஒளி வடிவில் வழிபடுவதற்காக வடலூரில் சத்திய ஞானசபையை 1872-ஆம் ஆண்டில் அடிகள் அமைத்தார்கள். இதன் பின்னர் ஆயிரத்தெண்ணூற்றெழுபத்து நான்காம் ஆண்டு ஜனவரித் திங்கள் முப்பதாம் நாளில் (30—1—1874) அடிகள் சித்திவளாகத் திருமாளிகையில் தமது அறைக்குள்ளே புகுந்து மறைந்து இறைவனோடிரண்டறக் கலந்தார்கள்.

அடிகள் வடலூரின் கண்ணே நிறுவிய நிலையங்களும் சித்திவளாகமும் 'திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையங்கள்' என்ற பெயருடன் இன்றும் வழிபடப்பட்டு வருகின்றன.

## அடிகளின் அருளிச்செயல்கள்

அடிகளின் பாடற்றொகுதிக்குத் 'திருவருட்பா' எனப் பெயர். திருவருட்பாப் பாடல்களைத் தவிர பிறபலவற்றையும் அடிகள் ஆக்கியருளியுள்ளார்கள். ஆயினும் திருவருட்பாப் பாடல்கள் பரவியுள்ள அளவுக்கு அடிகளின் ஏனைய ஆக்கங்கள் பரவவில்லை. பரவாத காரணம் அவைகளுக்கு நல்ல ஆராய்ச்சிப் பதிப்புகளும் விளக்கங்களும் வெளி வராமையே யாகும். பின் வருபவை அடிகளின் ஆக்கங்களாம்.

(Complete Works)

1. **பாடல்கள்** — ஆறு திருமுறைகளாக வகுக்கப் பெற்றவை
2. **பாடல்கள்** — ஆறு திருமுறைகளிலும் சேராதவை.
3. **விண்ணப்பங்கள்** — அடிகள் இறைவனிடத்துச் செய்து கொண்டவை (உரை நடை)
4 **கட்டளைகள்** — தாம் நிறுவிய நிலையங்களின் நடைமுறைபற்றி எழுதியவை.
5 **பத்திரிகைகள்** — சுற்றறிக்கைகளும் அழைப்பிதழ்களும்.
6. **கடிதங்கள்** — அடிகள் தம் கைப்பட எழுதியவை
7 **உபதேசங்கள்** — உடன் கூட்டத்தாராலும் கேட்டவர்களாலும் எழுதி வைக்கப் பட்டுள்ள குறிப்புகள்.
8. **உரைநடை நூல்கள்** - 1. மனுமுறை கண்ட வாசகம்.
   2. ஜீவகாருண்ய ஒழுக்கம்.

**9. உரைகள்** — 1. 'தமிழ்' என்ற சொல்லுக்கு வரைந்த உரை.

2 பெரியபுராணம், முதற்பாடல், முதற்சொல்லாகிய 'உலகெலாம்' என்பதற்கு வரைந்த விளக்க உரை.

3. ஒழிவிலொடுக்கப்பாயிர விருத்தி.

4. தொண்ட மண்டல சதகத்தின் கடவுள் வாழ்த்துப் பாடலுக்குச் செய்த உரை.

5. பொன்வண்ணத் தந்தாதியின் இருபத்திரண்டாம் பாடலுக்குச் செய்த உரை.

6. வேதாந்த தேசிகரின் குறட்பா ஒன்றுக்கு வரைந்த உரை.

**10. பதிப்பித்த நூல்கள்** - 1, ஒழிவிலொடுக்கம் (1851)

2. தொண்ட மண்டல சதகம் (1855)

3 சின்மய தீபிகை (1857)

**11. பிற** — பிறரது நூல்களுக்கும் பதிப்புகளுக்கும் வழங்கிய சாற்றுக்கவிகள், மருந்துச் சரக்குகளின் குண அட்டவணை உள்ளிட்ட பல.

## தம்மைத் தமிழகத்திற் பிறப்பித்தமைக்காக அடிகள் இறைவனுக்கு நன்றி கூறல்.

ஞான பூமியாகிய தமிழகத்தில் தாம் பிறந்தமைக்காக அடிகள் பெருமிதமுறுகின்றார்கள். இறைவா! என்னைத் தமிழகத்தில் பிறப்பித்தாயே! நின் கருணையை என்னென் பேன்! இதற்கு எவ்வாறு நன்றி கூறுவேன்! என்று இறைவ னிடம் விண்ணப்பிக்கின்றார்கள்.

அடிகள் இறைவனிடத்துச் செய்துகொண்ட உரைநடை விண்ணப்பங்கள் நான்கு நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவற்றுள் இரண்டாவதாக வைத்தெண்ணப்படுவது சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம் என்பதாகும். இதனை அடிகள் தமது திருக்கரத்தாலேயே எழுதியுள்ளார்கள். இதனுள் தன்னைத் தமிழ் நாட்டிற் பிறப்பித்தமைக்காக அடிகள் இறைவனுக்கு நன்றி கூறி இறும்பூதெய்தும் பகுதி வருமாறு:

> " சுத்த சன்மார்க்க லக்ஷிய சத்தியஞானக் கடவுளே! ஜீவர்களாற் கணித்தறியப்படாத பெரிய உலகின் கண்ணே. பேராசை, பெருங்கோபம், பெருமோகம், பெரு மதம், பெருலோபம், பேரழுக்காறு, பேரகங்காரம், பெரு வயிரம், பெருமடம், பெருமயக்கம் முதலிய பெருங் குற்றங் களை பெரும்பாலும் விளைவதற் குரிமையாகிய மற்றை யிடங்களிற் பிறப்பியாமல், குணங்களை பெரும்பாலும் விளைதற்குரிய இவ்விடத்தே, உறுப்பிற் குறைவுபடாத உயர் பிறப்பாகிய இம் மனிதப் பிறப்பில் என்னைப் பிறப் பித்தருளிய தேவரீரது பேரருட் பெருங் கருணைத் திறத்தை யென்னென்று கருதி யென்னென்று துதிப் பேன்!"

நம்மால் அளவு கணித்தறியப்படாத இப்பெரிய உலகின் கண்ணே, தமிழகம் ஒன்றே குணங்கள் விளைதற்குரிய இட மெனவும், தமிழகந்தவிர மற்றை இடங்கள், பேராசை-பெருங்

கோபம் – பெருமோகம் – பெருமதம் – பெருலோபம் – பேரழுக்காறு – பேரகங்காரம் – பெருவயிரம் – பெருமடம் – பெருமயக்கம் முதலிய பெருங் குற்றங்களே விளைதற்குரியவை யெனவும் அடிகளார் கூறுவதைக் காண்க.

தமிழ் நாட்டில் தன்னைப் பிறப்பித்தமைக்காக அடிகள் இறைவனுக்கு நன்றி கூறுவாராயின், தமிழ் மண்ணின்மீது கொண்டிருந்த பேரன்பையும் பெரு மதிப்பையும் என்னென்பது?

## தென்னாட்டின் சிறப்பியல்

அடிகளின் அன்பர் இறுக்கம் – இரத்தின முதலியார் என்பவர் சென்னையில் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். அவர் சென்னை வேலையைவிட்டு வடக்கே நெல்லூர்க்குப் போக முயன்றபோது அதனை அறிந்த அடிகள், நெல்லூர்க்குப் போவது சரியல்ல என்றும் சென்னையை விடுத்தால் சென்னைக்குத் தெற்கே அலுவல் பார்ப்பதே சிறந்தது என்றும் இரத்தின முதலியார்க்குக் கடிதம் எழுதினார்கள். அக்கடிதத்தின் ஒரு பகுதி வருமாறு.

"இது நிற்க. அவசியம் தெரிந்து கொள்ளவேண்டுவது ஒன்று. என்னெனில் தாங்கள் சென்னபட்டணத்தை விட்டு நெல்லூர்க்கு உத்தியோக விஷயமாகப் போகக் கருதி பிரயத்தினம் செய்வதாயும் தற்கால அலுவல் தானே நீங்கிவிடுவதாயும் கேள்விப்பட்டேன். கேட்ட நாள் தொடங்கி மனஞ் சஞ்சலித்துக் கொண்டேயிருக்கின்றது. ஆனால் என்ன செய்வது. திருவருள் நடத்த நடக்கின்றதென்று சமாதானஞ் செய்து கொண்டாலும் என் மனம் அமைதி பெறவில்லை ஆகலில் அவ்வாறு நேரிடில் முன்னதாக எனக்குத் தெரிவிக்க வேண்டும். நான் கடவுளைப் பிரார்த்திக்கிற தென்னெனில் சென்னப்பட்டணத்தை விடுத்தால் பட்டணத்துக்குத் தென் பாகத்தில் அலுவல் நேரிட வேண்டுமென்று பிரார்த்திக்கிறது தான். என் பிரார்த்தனை திருச்செவிக்கு ஏறுமோ

ஏருதோ தெரிந்ததில்லே. என்ன செய்வேன். எப்படி யாஞலும் ஆகட்டும். எனக்கு உடனே பிரயாணத்தின் உண்மை இன்மை தெரிவிக்க வேண்டும்."

இக்கடிதத்தைத் திருவருட்பா திருமுகப் பகுதியில் (பக்கம் 57) பாலகிருஷ்ண பிள்ளேயவர்கள் 'தென்னுட்டின் சிறப்பியல்' என்ற தலேப்புடன் பதிப்பித்திருக்கிறுர்கள்.

### வடக்கிலும் தெற்குச் சிறந்தது

அடிகளார் செய்த மிகப்பல தத்துவ உபதேசங்களில் திசைகளேப்பற்றிய குறிப்பொன்றும் காணக்கிடக்கிறது. அக் குறிப்பு,

> "வடக்குப்பாகம், நக்ஷத்திரப்பிரகாசம். கிழக்குப் பாகம், சந்திரப் பிரகாசம். மேற்குப்பாகம், சூரியப் பிர காசம். தெற்குப் பாகம். அக்கினிப் பிரகாசம். கிழக்குத் திக்கை நோக்கித் தியானம் செய்கிறது யோக சித்தியைப் பெறுகிறதற்கு மேற்கு, மேற்படி சொர்ண சித்தியைப் பெறுகிறதற்கு. தெற்கு, சாகாக்கலேயை,— நித்திய தேகத்தையும் ஞானசித்தியையும் — பெறுகிறதற்கு வடக்கு சித்த சுத்தியைப் பெறுகிறதற்கு. வடக்கு காற் புறம். தெற்கு தலேப்பாகம். இதஞல் தான் தெற்கு ஞானத்தில் சிறந்தது; வடக்கு அஞ்ஞானத்தில் அழுந் தியது."

என்பதாகும். அடிகளின் உபதேசத்தைக் கேட்ட ஒருவரால் இது எழுதி வைக்கப்பட்டுள்ளதால் இதன் நடையைப்பாராது பொருளேயே கொள்ளவேண்டும் தெற்கு ஞானத்தில் சிறந் தது; வடக்கு அஞ்ஞானத்தில் அழுந்தியது என்பது அனுபவ உண்மை. திருவள்ளுவர் முதலான மாபெரும் ஞானிகள் இங்கேதான் தோன்றிஞர்கள். ஞானிகளே விளேவிக்கின்ற மண் தமிழ் மண். "யாமறிந்த புலவரிலே கம்பனேப் போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங் கணுமே பிறந்ததில்லே உண்மை, வெறும் புகழ்ச்சியில்லே"

என்ற பாரதியின் வாக்கினை நோக்குக. இவ்வகையில் பரந்த இவ்வுலகில் தமிழகம் ஒன்றே நன்செய் நிலம்; மற்றவை யெல்லாம் புன்செய் நிலங்களே

இத்தென் திசையை, 'மாதவம் செய்த தென் திசை'. 'தேசம் எல்லாம் விளங்கிய தென்திசை', எனச் சேக்கிழாரும் கூறுவர். இத்தென்னாடுடைய சிவனே எந்நாட்டவர்க்கும் இறை என்பது மணிவாசகரின் மணிவாக்கன்றோ!

இத்தகைய தென்னாட்டிற் பிறந்த நாம், திருவள்ளுவர் முதல் வள்ளலார் வரை வாழையடி வாழையாக ஞானிகள் தோன்றித் தொண்டாற்றிய ஞான மண்ணிற் பிறந்த நாம், இங்கு பிறந்ததன் பயனைப் பெற அவர்களைப் பின்பற்று வோமாக.

## தமக்குத் தமிழ்ப்பற்றை உண்டாக்கியதற்காக அடிகள் இறைவனுக்கு நன்றிகூறல்

பற்றற்ற பரம ஞானியாகிய இராமலிங்க அடிகள் தமிழின் மாட்டுத் தணியாத பற்றுக் கொண்டிருந்தார்கள். அகப்பற்று, புறப்பற்று இரண்டையும் அறவே அறுத்த அடிகள் தமிழ்ப்பற்றை அறுத்தார்களில்லை. மற்றைப் பற்றுகளை விடற்கும் பற்றற்றான் பற்றினைப் பற்றுதற்கும் தமிழ்ப் பற்று ஓர் துணையாதலான்போலும் அடிகள் மற்றெல்லாப் பற்றுகளைத் துறந்தும் தமிழ்ப் பற்றைத் துறவாதவராயினர். தமிழ்ப் பற்றைத் தமக்கு இறைவனே தந்தான் என்பர். தம்மைத் தமிழ் நாட்டிற் பிறப்பித்தமைக்காக இறைவனுக்கு நன்றி கூறும் அடிகள், தமக்குத் தமிழ்ப்பற்றைத் தந்தமைக் காகவும் இறைவனைப் பாராட்டிப் போற்றித் துதித்து நன்றி யும் கூறுவர். அடிகள் தமது சத்தியப் பெருவிண்ணப்பத் தில், தமக்குத் தமிழ்ப்பற்றை உண்டாக்கியதற்காக இறை வனுக்கு நன்றி கூறும் பகுதி வருமாறு :

> "எல்லா மானவராயும் ஒன்று மல்லாதவராயும் எல்லா அண்ட சராசரங்களின் அகத்தும் புறத்து நிறைந்து விளங்குகின்ற தனித் தலைமைக் கடவுளே !
>
> *  *  *  *  *  *  *  *
>
> இடம்பத்தையும் ஆரவாரத்தையும் பிரயாசத்தையும் பெருமறைப்பையும் போது போக்கையும் உண்டு பண்ணுகின்ற ஆரிய முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்லவொட்டாது, பயிலுதற்கு மறிதற்கும் மிகவு மிலேசுடையதாய்ப் பாடுதற்கும் துதித்தற்கு மிகவு மினிமையுடையதாய் சாகாக் கல்வியை இலேசி லறிவிப்பதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென் மொழி யொன்றனிடத்தே மனம் பற்றச் செய்து அத் தென்மொழிகளாற் பல்வகைத் தோத்திரப் பாட்டு களைப் பாடுவித் தருளினீர்."

தமிழ் மொழியினிடத்தே மனம் பற்றச் செய்ததற்கு இறைவனைப் பாராட்டும் அடிகள் ஆரிய முதலிய மொழிகளில் ஆசை செல்லவொட்டாது தடுத்தற்காகவும் பாராட்டுகின்றார்கள். தமிழின் இனிமையைக் கூறுகின்றவர்கள் ஆரிய முதலியவற்றின் இன்னாமையையும் இயம்புகின்றார்கள். இதனின்றும் பின்வரும் செய்திகள் தெளிவாகப் பெறப்படும்.

ஆரியம் முதலிய மொழிகள் :

,, இடம்பத்தை உண்டு பண்ணுவன.
— தமிழில் இடம்பம் இல்லை

,, ஆரவாரத்தை உண்டுபண்ணுவன.
— தமிழில் ஆரவாரமில்லை

,, பிரயாசத்தை உண்டுபண்ணுவன.
— தமிழில் பிரயாசை இல்லை

,, பெருமறைப்பை உண்டு பண்ணுவன.
— தமிழ் மறைப்பில்லாதது. உள்ளதனை உள்ளபடி உணர்த்துவது

,, போது போக்கை உண்டுபண்ணுவன
— தமிழில் போது போக்குக்கு இடமில்லை

தமிழ் பயிலுவதற்கு மிகவும் இலேசுடையது.
— ஆரியம் முதலியவை பயிலுவதற்கு இலேசுடையனவல்ல

தமிழ் அறிதற்கு மிகவும் இலேசுடையது.
— ஆரியம் முதலியவை அறிதற்கு இலேசுடையனவல்ல

தமிழ் பாடுதற்கு மிகவும் இனிமையுடையது.
— ஆரியம் முதலியவை பாடுதற்கு இனிமையுடையனவல்ல

தமிழ் துதித்தற்கு மிகவும் இனிமையுடையது.
— ஆரியம் முதலியவை துதித்தற்கு இலேசுடையனவல்ல

தமிழ் சாகாக் கல்வியை இலேசில் அறிவிப்பது.

ஆரியம் முதலியவை சாகாக் கல்வியை அறிவிக்கா.

தமிழ் திருவருள் வலத்தாற் கிடைத்தது.

ஆரியம் முதலியவை திருவருள் வலத்தாற் கிடைத்தனவல்ல.

தமிழில் மனம் பற்றச் செய்ததற்கு அடிகள் மகிழ்கின்றார்கள். ஆரிய முதலியவற்றில் ஆசை செல்ல ஒட்டாது தடுத்ததற்கும் மகிழ்கின்றார்கள். தென் மொழியினிடத்தே மனம்பற்றச் செய்து என்று கூறாது தென்மொழி ஒன்றனிடத்தே எனக் கூறுவதால், அடிகள் தமிழ் மொழி ஒன்றிலேயே பற்றுக் கொண்டிருந்தார்களென்பது பெறப்படும். தமிழ் தவிர ஏனைய மொழிகளில் பற்றில்லாதவர்களேயொழிய அறிவில்லாதவர்களல்ல. அடிகளின் அறிவு பேரறிவு, முற்றறிவு. அடிகள் மொழித் திறமுற்றுணர்ந்தோராவர். அவர்களது புலமை பன்மொழிப் புலமையும் பல்கலைப் புலமையும் ஆகும். அருட்புலமை கைவீரப்பெற்ற அடிகட்கு மொழிப் புலமை எம்மட்டு ?

தமிழைத் தென் மொழி என அடிகள் ஈண்டுக் குறிக்கின்றனர். தெற்கில் வழங்குவதால் தமிழ் தென் மொழியாயிற்று. தென் என்ற சொல்லுக்குச் சதுரகராதியில் காணப்படும் பொருள் – அழகு, இசை, கறுப்பு, தெற்கு, தென்னமரம் என்பனவாம். அறிவு என்னும் பொருளிலும் தென் என்ற சொல் வழங்குவதைக் காண்கிறோம். 'தென் படுகிறதா'? என்ற ஆட்சியை நோக்குக. புலப்படுகிறதா? அறியப்படுகிறதா? என்ற பொருளில் 'தென்படுகிறதா' என்று வினவுகிறோம். ஈண்டுத் 'தென்', என்பதற்குப், 'புலம், அறிவு, என்பது பொருளன்றோ? எனவே தென் மொழி என்பது அறிவு மொழியும் ஆம்.

2

ஞானமொழியாகிய தமிழினிடத்தில் தனக்குப் பற்றுண்டாக்கியதற்காக அடிகள் இறைவனுக்கு நன்றி கூறுவாராயின், நம் போலியர் நிலையை என்னென்பது. முற்பிறப்புத் தவத்தாற்போலும் நாம் தமிழகத்தில் தமிழனாய்ப் பிறந்தோம். இதற்கு நாம் பெருமகிழ்வடைதல் வேண்டும். தமிழகத்தே தமிழனாகப் பிறப்பித்தமைக்காக நாம் இறைவனுக்கு நன்றிகூற வேண்டும். நன்றி வாய்மொழியோடமைந்துவிடக் கூடாது. தமிழைத் துறைபோகக் கற்றுத் தமிழின்பத்திற்றிளைத்து அது காட்டும் இறையின்பத்தையும் பெற்றுய்யவேண்டும். இதுவே நன்றியும் கடனுமாம்.

# 'தமிழ்' என்னும் சொல்லுக்கிட்ட உரை

அடிகள் சென்னையிலிருந்த காலத்தில், அக்காலத்திய சங்கராசாரிய சுவாமிகள், "சமஸ்கிருதமே எல்லா மொழிக்கும் தாய்மொழி" என்று கூறினராம். இதனைக் கேள்வியுற்ற அடிகள் சங்கராசாரியரின் அக்கூற்றினை மறுத்து, "சமஸ்கிருதமே எல்லாமொழிக்கும் தாய்மொழி" யாயின், "தமிழ் எல்லா மொழிக்கும் தந்தை மொழி" என்று கூறி விளக்கினர். தாம் கூறிய விளக்கத்தின் தொடர்பாகத் தமிழ்மொழியின் பெயராகிய 'தமிழ்' என்னும் சொல்லுக்கு ஒரு உரையும் செய்தருளினர்.

அடிகள் செய்த அவ்வுரை விளக்கம் முதன் முதலாக 21—8—1897-இல் "உண்மை விளக்கம்" அல்லது "சித்தாந்த தீபிகை" என்னும் திங்களிதழில் "தமிழ் -ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளால் எழுதப்பட்டது" என்னும் தலைப்போடு அச்சிடப்பட்டது. பின்னர் "சித்தாந்தம்" 1913ஆம் ஆண்டு ஜூலைத்திங்கள் இதழிலும் வெளியிடப்பட்டுள்ளது. சமரச பஜனை ச. மு. கந்தசாமி பிள்ளை அவர்களது திருவருட்பா (1924) பதிப்பிலும் இது காணப்படுகிறது. 'தமிழ்' என்னும் சொல்லுக்கு அடிகள் அருளிய அவ்வுரை வருமாறு.

> "தமிழ் என்பது த்—அ—ம்—இ—ழ் என்னும் ஐந்து அலகு நிலையுடைத்து. த், ம், ழ்: ஜடசித்கலை. அ, இ: சித்கலை.
>
> அ அகண்டாகார சித்தை விளக்கும் ஓங்கார பஞ்சாக்கரத்துள் பதிநிலை யக்கரமாம்.

இ பதியை விட்டு நீங்காத சித்தை விளக்கும் வியவகாரத்தால் அனந்தாகார வியஷ்டி பேதங் காட்டும் ஜீவ சித்கலை யக்கரமாய்.

பதி சிதாத்ம கலைகளுக் காதாரமாகி உயிரினுக் குடலையொத்துக் குறிக்கப்படும் த், ம், ழ்: எழுத்துக் களுக்குரை:

த் ஏழாவதுமெய்;

ம் பத்தாவதாகும்;

ழ் கரு-வது இயற்கை யுண்மைச் சிறப்பிய லக்கரமாம்.

ஐந் தலகு நிலையும் உபய கலை நிலையும் மூன்று மெய்நிலையும் அமைந்துள்ளதும், சம்பு பக்ஷத் தாரால் அநாதியாய்—சுத்தசித்தாந்த ஆரிஷ ரீதிப் படி கடவுள் அருளாணையால் — கற்பிக்கப்பட் டதும், எப் பாஷைகளுக்கும் பிதுர்பாஷையென்று ஆன்றோர்களால் கொண்டாடப்பட்டதும், இனிமை யென்று நிருத்தம் சித்திக்கப் பெற்றுள்ளதுமான தமிழ் என்னும் இயற்கை யுண்மைச் சிறப்பியல் மொழிக்குச் சுத்த சித்தாந்த பத உரை:—

த்-அ: தத்வ ரூபாதி சிவபோகாந்தமான தசகாரிய இயற்கை யுண்மைக் கட்டளை நிலையில், முன் அலகு நிலைப் பொருள் கூறிய விடத்துக் குறித்த ஏழாவது நிலையாகிய த் என்பது சிவ ரூப இயற்கை யுண்மைக் கட்டளையாம். அ அகண்டா கார சித்கலா ரூப ஓங்காரத் துட்பொருட் பிரதம விலக்கிய வியக்தி யக்கரம். பன்னிருயிர் நிலையிற் றலையாய முத லக்கரமாதலில், அதுவே பிரமாதி பரசி வாந்த நவ நிலைக்கும் அநாதி யாதி காரணமா யுள்ள இயற்கை யுண்மைப் பரிபூரணப்

பொருளிலக்காம். என்னவே, சிவ ரூப மாகும் தகராகாசத்தில் சுத்த சிவ மாகும் அருட் ஜோதி யிணைந்துள்ள பூரணனந்த ஸ்வரூப பரபதி வியக்த மாயிற்று.

ம்—இ : சங்கார ப்ரணவ மாகிய மகாரம் முக்தான்மாக்களுக்கு ஒளி வண்ணச் சதானந்த மாயும் பெத்தானமாக்களுக்கு இருள் வண்ண மலரூப மாயும் இருந்து, கற்பாந்தப் பிரளய முடிவின் சிருஷ்டி திதியாதிகளில் சிதான்ம சக்தி யாகிய ஜீவனுக்கு அதிகரணமாகவும் முற்குறித்த பத்தாவது நிலையமாகிய ஆனமாதாரமாகியு முள்ளதெனப் பொருளாம். இ—பன்னீருயிர் நிலை களில் மூன்றும் நிலை யுயிராகிய இகாரம் திரிகலா ஆன்ம வருக்கத்தில் அபரமாகிய சகலாகலரையும் பரமாகிய பிரளயாகலரையும் கீழ்ப்படுத்தி அவ்விரு கூட்டத்தாருக்கும் மேற்பட்டு நின்ற சுத்த விஞ்ஞான கலராகிய சிதாத்மாக்களைச் சுட்டு கின்றதாம். என்னவே, ஆதார ஆதேயக் கூட்டுற வால் என்றுந் தோன்றி விளங்கும் சிதான்ம வருக்கங்கள் பரபதி லக்ஷியமாகிய பூரணனந்தத் திற்கு அநுபவிகளாக வுரியவர்க ளெனக் குறிக் கொள்ளல் வேண்டும்.

ழ் : இந்தச் சிறப்பிய லக்கரம் பதினெண் மெய்களில் பக்ஷ முடிபின் எண் குறிப்பில் நின்று, சிவயோக பூமியாகிய பரத கண்டத்தில் பௌராணிக தத்துவத்தாற் குறிக்கப்பட்ட ஐம்பத் தாறு தேசங்களுள் சுதேசந் தவிர மற்ற ஐம்பத் தைந்து தேச பாஷைகளிலு மில்லாததாயும் பதினெண்ணிலமாகக் குறிக்கப்பட்ட செந்தமிழ் கொடுந்தமிழ் என்னும் இருமைக்கும் ஒற்றுமை யுரிமையாயும், முத்துறைத் தமிழுக்குள் முதன்மைத் துறையானதும் இருக்கு யஜுர் சாம மென்னும்

சமஸ்கிருத வேதத் திரயப் பொருள் அநுபவத்தை யெளிதில் கற்றுணர்ந்து தெளிந்து அநுபவித்தற்குப் பரமேசுரனது திருவருளைப் பஞ்சாக்ஷர முத்தொழிற் காரியமான பஞ்ச தசாக்கரியால் பிரத்தியக்ஷாநுபவம் சித்திக்கச் செய்யும் நிலயமானதும் ஸ்ரீ மாணிக்கவாசகர் சம்பந்தர் நாவரையர் சுந்தரர் திருமூலர் முதலிய மகாபுருஷர்களால் சாத்திர தோத்திரங்களாக அருளிச் செய்யப்பட் டிருக்கும், திருவாசகம், தேவாரம், திருமந்திரம் என்னும் பரமார்த்த ரகசியங்களையுடையதும் — பலநாள் நைஷ்டிக அதிகரணம் பூண்டு போதகாசிரியர் சந்நிதியில் தாழ்ந்து சகபாடிகளோடு சூழ்ந்து சுர ஒலி பேதங்களைத் தேர்ந்து உழைப்பெடுத்து ஓதினாலும் பாடமாவதற்கு அருமையாயும் பாடமானாலும் பாஷியம் வியாக்கியானம் டீக்கா டிக்கா டிப்பணி முதலிய உரைகோள் கருவிகளைப் பொருள் கொளளத் தேட வேண்டியதாயும் அவ்வவைகளையும் தேடிக் கைவரினும் அக்கருவிகளால் போதகம் பெற வேண்டியதற்குப் பாஷியகாரர்கள் வியாக்கியான கர்த்தர்கள் டீக்கா வல்லபர்கள் டிக்கா சூசகர்கள் முதலிய போதக உபபோத காசாரியர்கள் கிட்டுவது அருமையில் அருமையாயும் இருக்கிற ஆரியம் மகாராட்டிரம் ஆந்திரம் என்ற பற்பல பாஷைகளைப் போலாகாமல்—பெரும் பாலும் கற்பதற்கு எண்ணளவு சுருக்கமாயும் ஒலி யிலேசாயும் கூட்டென்னுஞ் சந்தி அதிசுலபமாயும் எழுதவும் கவிசெய்யவும் மிக நேர்மையாயும் அக்ஷர ஆரவாரம் சொல்லாடம்பரம் முதலிய பெண்மை அலங்கார மின்றி எப்பாஷையின் சந்தசுகளையும் தன் பாஷையுள் ளடக்கி ஆளுகையால் ஆண்டன்மையைப் பொருந்தியதுமான தற்பாஷைக்கே அமைவுற்ற ழ் ற் ன் என்னும் முடி நடு அடி சிறப்பிய லக்கரங்களில் முடிநிலை இன்பாநுபவ சுத்த

**மோனாதீதத்தைச் சுட்டறச் சுட்டும் இயற்கை யுண்மைத் தனித் தலைமைப் பெருமைச் சிறப்பிய லொலியாம்.**

உரை கூறிப் போந்த சுத்த சித்தாந்த ஆரிட ரீதி முப்பதவுரைப் பொழிப்பு: மருளியற்கை மல இருளைப் பரிபாக சத்தியால் அருளொளி யாக்கி, அதற்குள் ளீடான சிதாத்ம சிற்கலாசத்தியென்னும் சுத்த ஆன்மாவானது தகர ககன நடன அருட் பெருஞ்ஜோதி யென்னுஞ் சுத்த சிவானந்த பூரணத்தை சுத்த மோன தீத வியலால் அனுபவிக் கும் இயற்கை யுண்மையே தமிழ் என்னும் சொற் பொருள் சுட்டினவாறு காண்க.

இதன் கருத்து யாதெனில்: தமிழ்ப் பாஷையே அதி சுலபமாகச் சுத்த சிவானுபூதியைக் கொடுக்கு மென்பதாம்.

இவ்வுரை, இலக்கண நுட்பத்துடன் தத்துவநுட்பங் களையும் கொண்டதாக அமைந்துள்ளது. அகரத்தைப் பதிநிலை அக்கரம் என்பதைக் காண்க. 'அகர முதல எழுத்தெல்லாம்' என்றவாறு அகரம் எல்லா எழுத்துக் களுக்கும் முதலில் நிற்பதாய் முதல்வனுகிய பதிபோன்ற தாதலின் பதிநிலையக்கரம் எனப்பட்டது.

'இனிமை என்று நிருத்தம் சித்திக்கப்பட்டுள்ளதுமான தமிழ்' என்றவதனுல் தமிழின் இனிமைச் சிறப்பு சொல்லப்பட்டது. 'தமிழ்' என்னும் சொல்லுக்கு இனிமை எனப் பொருளுண்டு. 'இனிமையு நீர்மையுந் தமிழெ்ன லாகும்' என்பது பிங்கல நிகண்டு. சிந்தாமணியுள்ளும் 'தமிழ் தழீஇய சாயலவர்' எனத் 'தமிழ்' இனிமைப் பொருளில் வந்துள்ளமை காண்க.

தமிழை, இயற்கை உண்மைச் சிறப்பியல் மொழி எனக் கூறும் அடிகள், அதன் கண்ணுள்ள 'ழ்' என்னும்

எழுத்தை இயற்கை உண்மைச் சிறப்பியல் எழுத்தென்பர். 'ழ்' என்ற எழுத்தின் ஒலியை இயற்கை உண்மைத் தனித் தலைமைப் பெருமைச் சிறப்பியல் ஒலி என்பர். சிறப்பிய லெழுத்தாகிய இந்த 'ழ்' தமிழ் தவிர மற்றை மொழிகளில் இல்லை என்பார், 'சிவயோக பூமியாகிய பரத கண்டத்தில் பௌராணிக தத்துவத்தாற் குறிக்கப்பட்ட ஐம்பத்தாறு தேசங்களுள் சுதேசந் தவிர மற்ற ஐம்பத்தைந்து தேச பாஷைகளிலுமில்லாத தாயும்' என்கின்றனர். பரத கண்டத்தைச் சிவயோக பூமி என்றதனை நோக்குக.

ஆரியம், மகாராட்டிரம், ஆந்திரம் முதலிய பிற மொழிகளைக் கற்க விருமபுவோர் பல நாள் நைட்டிக பிரமச்சரியம் பூண்டு கற்பிக்கும் ஆசிரியரிடம் பணிவிடை செய்து ஒழுகி, உடன் கற்கும் மாணுக்கர்களோடு கூடிக் கூச்சலிட்டு ஓத வேண்டுமென்றும், அப்படி ஓதினும் பாடமாவது அருமையென்றும், அப்படிப் பாடமாயினும், பாஷியம், வியாக்கியானம், டீக்கா, டுக்கா, டிப்பணி, முதலிய உரைகோள் நூல்களைத் தேடிப்பிடித்துப் படிக்க வேண்டு மென்றும், தேடிய அவை கையிற் கிடைத்துப் படித்தாலும், அவற்றைப் பயன்படுத்திக் கற்பதற்கு பாஷ்யகாரர்கள், வியாக்கியானகர்த்தர்கள் கிடைப்பது அருமையென்றும், அடிகள் கூறுவதனின்றும் ஆரிய மொழிகளின் இயல்பை அறியலாம். ஆரியம் வழக்கு வீழ்ந்த மொழியென்பதை அடிகள், உரைகோள் கருவி களும் போதகாசிரியர்களும் கிட்டாமையைக் கூறுவதால் அறியலாம்.

இனித் தமிழின் சிறப்பைக் கூறுவார், தமிழெழுத் துக்கள் கற்பதற்கு எண்ணளவு சுருக்கமானவையென்றும் தமிழ் ஒலி இலேசானதென்றும், தமிழில் கூட்டு என்னுஞ் சந்தி அதி சுலபமானதென்றும், தமிழ் உரை நடையி லெழுதவும் கவி செய்யவும் மிக நேர்மையானதென்றும், எழுத்தாரவாரம் சொல் ஆடம்பரம் முதலிய பெண்மைக் குணங்கள் இல்லாததென்றும், எம்மொழியின் ஒலிகளையும் தன்னுட் கொண்டதென்றும் கூறுகின்றனர்.

உரையை முடிக்கும்போது, 'தமிழ்ப் பாஷையே அதி சுலபமாகச் சுத்தசிவானுபூதியைக் கொடுக்குமென்பதாம்' என முடிக்கின்றனர். இறையின்பத்தைக் காட்டுவிப்பதும் கூட்டுவிப்பதும் தமிழ் மொழியே என்பது பெரியோர் கொள்கை. அவர்களது அனுபவமும் அதுவேயாம். தமிழே இறையின்பத்தைக் கொடுப்பதென்பதனைச் சீகாழித் தாண்டவராயரும் திருவாசக அனுபூதி உரையில் 'இத் திருவாசகம் தமிழால் துதிப்பது ஏதென்னில், பரமசிவன் சுத்தாத்துமாக்களுக்குத் தமிழாலன்றி வேறொரு பாடையாலும் நிரதிசய இன்பம் பிறவாதென்ற அருமை பற்றியேயாகும்' எனக் கூறுவர்.

# 'உலகெலாம் என்னும் மெய்ம் மொழிப் பொருள் விளக்கம்

அடிகளார் மூன்று மெய்ம்மொழிப் பொருள்களைக் கண்டார்கள். தமது பாடலொன்றில் அம்மூன்றையும் கூறுகின்றார்கள்.

திருவளர் திருஅம்பலத்திலே அந்நாள்
செப்பிய மெய்ம்மொழிப் பொருளும்
உருவளர் திருமந்திரத்திரு முறையால்
உணர்த்திய மெய்ம்மொழிப் பொருளும்
கருவளர் அடியேன் உளத்திலே நின்று
காட்டிய மெய்ம்மொழிப் பொருளும்
மருவிஎன் உளத்தே நம்பிநான் இருக்கும்
வண்ணமும் திருவுளம் அறியும்.

பிள்ளைப்பெரு விண்ணப்பம் 118.

பாடலின் முதல் மூன்றடிகளில் அவை கூறப்படுகின்றன.

1. திருவம்பலத்திலே அந்நாள் செப்பிய மெய்ம் மொழிப் பொருள்.
2. திருமந்திரத் திருமுறையால் உணர்த்திய மெய்ம் மொழிப்பொருள்
3. அடிகளின் உள்ளத்திலே நின்று காட்டிய மெய்ம் மொழிப்பொருள்.

திருவம்பலத்திலே அந்நாள் செப்பிய மெய்ம்மொழிப் பொருளாவது தில்லைச் சிற்றம்பலத்தின் கண்ணே சேக்கிழார்க்கு இறைவன் 'உலகெலாம் உணர்ந்தோதற்கரிய

வன்' என்று அடியெடுத்துக் கொடுத்ததாகும். திருமந்திரத்திருமுறையால் அடிகளுக்கு இறைவன் உணர்த்திய மெய்ம்மொழிப் பொருள், அடிகளின் உள்ளத்திலே இறைவன் நின்று காட்டிய மெய்ம்மொழிப் பொருள் ஆகிய இரண்டும் இன்னதெனத் தெரியவில்லை.

இம்மூன்று மெய்ம்மொழிப் பொருள்களையும் விளக்கி 'மெய்ம் மொழிப்பொருள் விளக்கம்' என்னும் நூலை அடிகள் செய்யத் தொடங்கி, ஒரு பகுதியைச் செய்து முடித்திருக்கிறார்கள். நமக்குக் கிடைக்கும் அப்பகுதி 'உலகெலாம் என்னும் மெய்ம்மொழிப் பொருள் விளக்கம்' என்ற தலைப்புடன் காணப்படுகின்றது. திருமந்திரத் திருமுறையால் உணர்த்திய மெய்ம்மொழிப் பொருளையும் உள்ளத்திலே நின்று காட்டிய மெய்ம்மொழிப் பொருளையும் விளக்கும் பகுதிகள் அடிகளாரால் செய்யப்படாமலேயே தவிர்ந்து போயினவா, அன்றிச் செய்யப்பட்டுப் பிற்காலத்தில் கிடைக்காது போயினவா என்பது அறியக்கூடவில்லை. அப்பகுதிகளும் செய்யப்பெற்றிருந்து இன்று கிடைக்கப் பெறின் நாம் பெறும் பயன் பெரிதாகும்.

உலகெலாம் என்னும் மெய்ம்மொழிக்குப் பொருள் விளக்கம் செய்யுமிடத்து அடிகள், வேதம், ஆகமம் முதலியவற்றிலிருந்து எடுத்துக் காட்டுகள் கொடுக்க வேண்டுமா எனின், வேண்டா என்று கூறி வேதாகமங்களின் இழிதகவையும், ஞானிகளது செந்தமிழ் வாக்குகளின் உயர்வையும் கூறுகின்றார்கள். அப்பகுதி வருமாறு:

"இனி இம் மெய்ம்மொழிக்குப் பொருள்விளக்கம் செய்யுமிடத்துக் காட்சியும் கருதலும் இன்றியும் உரை அளவையும் வேண்டுங்கால் வேதம் ஆகமம் முதலிய குறித்தல் வேண்டுமாலெனின், குறித்தல் வேண்டா. எவனை எனின் :—

"இங்ஙனம் வருணாசிரம மானத்தால் பந்தப்பட்டு ஏகதேசத்தால் வழங்குகின்ற வேதம், வருணாசிரம மானத்தால் பந்தப்படாது யாண்டும் பூரணத்தால் வழங்கும் மெய்ம்மொழிக்குப் பிரமாணம் ஆகா என்க. அன்றியும் வேதங்கள் ஓர் காலத்தில் உருத்திரனாலும் வேறோர் காலத்தில் விண்டுவாலும் பிறிதோர் காலத்தில் பிரமனாலும் மற்றோர் காலத்தில் பராசரன் வியாசன் முதலிய முனிவராலும் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் பலவாறு விகாரப்படுகின்றனவாய்; தாதுக்கள், பிரத்தியயங்கள், பிராதிபத்தியங்கள் முதலிய இயலுறுப்பும், வர்ணம் பதம் ஜடை முதலிய இயல் விசேடவுறுப்பும, உதாத்தம் அநுதாத்தம் சுரிதகம் முதலிய இசையுறுப்பும், சிக்ஷை, கற்பம, வியாகரணம், நிருத்தம், சோதிடம், சந்தம் முதலிய அங்கவுறுப்பும், ஆயுள்நூல், தநுநூல், காந்தருவநூல், முதலிய உப உறுப்பும் உடையனவாய்; பஞ்சப் பிரம்ம மந்திரம் தத்துவத்திரய மந்திரம் முதலிய மந்திர சாமாநியவிசேடங்களும், ஸ்நாநம், சந்தி, ஜெபம், ஓமம், தர்ப்பணம், வைசுவதேவம், இட்டி, அக்கினிட்டோமம், பசுபந்தம், திரையாக்நியம் முதலிய நித்திய கன்மங்களும், வருட கன்ம விசேடம், அயன கன்ம விசேடம், மாத கன்ம விசேடம், பருவ கன்ம விசேடம் முதலிய நைமித்திக கன்மங்களும், அசுவமேதம், ராஜசூயம், பௌண்டரீகம் முதலிய காமிய கன்மங்களும், சுராபானம், பரதார கமனம், அசத்திய வாசகம் முதலிய நிஷேத கன்மங்களும், அநசநம், சாந்திராயணம், கிருச்சிரம் முதலிய பிராயச்சித்த கன்மங்களும், சூரிய உபாசனை, பிரம உபாசனை, விண்டு உபாசனை, ருத்திர உபாசனை, பிரணவ உபாசனை முதலிய உபாசன கன்மங்களும் ஆகிய கன்ம சாமாநிய விசேஷங்களும, சமயத்தார் சாதியார் பலர்க்கும் ஒத்தவண்ணம் வரைதற்கும் ஓதற்கும் உணர்தற்கும் இடங்கொடாமையும் பலவாறு விகற்பித்துக் கூறும் மயக்கமுமுடையனவாய்; தாம் திருவருட்பரவிந்துவ சத்தியான அபரவிந்துவின்கண் உற்பத்தியாய் அதனிடத்தே லயம் ஆதலில் ஆதியும் அந்தமும் உடைத்தாயிருந்தும், அங்ஙனங் கோடல் இன்றி

உற்பத்தி இன்மையும் லயம இன்மையும் ஆகிய அநாதி என்றும் நித்தியம் என்றும் தம்மைத் தாமே விபரீதத்தால் மீக் கூறுகின்ற மதமும் அகங்காரமும் பெற்றிருத்தலும் அன்றியும் ;

"கருமை கடினம் எளிதின் உருகாமை புலால்நாற்ற முடைமை முதலிய வன்மைக் குணங்களால் வெளிப்பட்டு மண்வெட்டி கோடரி அரிவாள் முதலிய அற்பக் கருவியை விரும்பினோர் எளிதிற் பெறத் தான் பரிணமித்தலே யன்றி, மகுடம் குண்டலம் முதலிய விசேடக் கருவிகளை விரும்பி னோர்க்குத் தன் உண்மைக் குணமாய சுவர்ணத் தன்மை யை நெடுஞ் செய்மைக்கண் மறைத்து அரிதிற் பெற இருந்த அயலோக ஞாயம்போல், மாயா சத்தார்த்தப் பிரபஞ்ச காரிய சித்த விருத்தியாகிய வன்மைக் குணங் களான் வெளிப்பட்டு, பூலோக போகம், சுவர்க்க லோக போகம் முதலிய அனித்திய போகங்களை விரும்பினோர் எளிதிற் பெறத் தாம் மந்திர தந்திரங்களால் பரிணமித் தலே அன்றி, அருட்போகம் ஆனந்தபோகம் சிவபோகம் முதலிய நித்திய போகங்களை விரும்பினோர்க்குத் தமது உண்மைக் குணமாகிய உபதேச லக்ஷியத் தன்மையை நெடுஞ் சேய்மைக்கண் மறைத்து அரிதிற் பெறவிருத்த லானும் ; தன் பலத்தை விரும்பினோர்க்கு நின்று கரநீட்டித் தலினாலும் ஏற்றுக் கருவி முதலியவற்றாலும் கை கூடுதலின்றி மேல் இவர்ந்து அரிதின் தலைக்கண் நின்று தன் காய்களைக் கவர்ந்தும் அந்நிலைக்கண் அனுபவித்தற்கும் வேறோர் கருவி வேண்ட நின்ற விலாங்கலி விருக்ஷஞாயம் போல், உபதேச லக்ஷியத் தன்மையைப் பெறத் தொடங்கிய சாதகர்க்குத் தம்தம் பருவத்திற்கு அடுத்த உணர்வானும் பல்வகைச் சாதகத்தாலும் கைகூடுதல் இன்றித் தெய்வ கதியால் முன்பு நோக்கி அத் தலைக்கண் அமைந்த பொருளைக் கவர்ந்தும் அந் நிலைக்கண் அனுபவித்தற்கும் வேதாந்த விசாரம் முதலிய வேறோர் கருவி வேண்ட இருத்தலானும் மனிதர் மொழி, தேவர் மொழி, முனிவர் மொழி, அரி பிரமாதியர் மொழி, உருத்திராதியர் மொழி

என்பவைக்குப் பெரும்பாலும் பிரமாணமாகி நிற்பன அன்றித் திருவருட் பரவயிந்துவத் துரிய மொழிக்கு ஒரு வாற்ருலும் பிரமாணம் ஆகா என்க.

"ஆகமங்களுள் சில ருக்குவேதம் போல் மந்திர கலையைக் குறித்தும் சில தயித்திரீய வேதம் போல் தந்திர கலையைக் குறித்தும் சில சாமவேதம் போல் உபயமும் குறித்தும் சில அதர்வண வேதம் போல் உலகியலைக் குறித்தும் வருதலின் வேத சம்மதமாகியும், சில ஏகான்ம விரோதம் சாதித்தலின் வேத விரோதமாகியும், உபய மாயா காரியங்களைப் பெரும்பாலும் விரித்து விளக்கலான்; மயேசுர சதாசிவாதி மொழிக்குப் பெரும்பாலும் பிரமாண மாம் அன்றி இத் துரிய மொழிக்குப் பிரமாணம் ஆகா என்க.

"இதனால், வேதாகமங்கள் சகளத்தில் சகுணமாகத் தோன்றிய ஈசுர வாக்கியங்கள் என்பதும் உலகெலாம் என்பது பூரண நிஷ்களத்தில் நிர்க்குணமாகத் தோன்றிய பரசிவ வாக்கியம் என்பதும் உணர்ந்து ஓதற் கரியவன் என்பது ஏகதேச நிஷ்களத்தில் நிர்க்குணமாகத் தோன்றிய பரசிவ வாக்கியம் என்பதும் அறிக என்க.

"ஆயின் இம் மெய்ம்மொழிக்கு உரைப் பிரமாணம் வேறு இன்ருலோ எனின்: தற் சுதந்தரத்தானும் தற்புகழ்ச்சி யானும் தன் மேம்பாடு வெளிப்படுத்து நிமித்தத்தானும் ஈசுராதிகளால் உபசரித்து உரைக்கப்பட்ட வேத ஆகமாதி கள் இங்ஙனம் மெய்ம்மொழிப் பிரமாணம் ஆகா என்ற தன்றி, சிவசுதந்திரத்தாலும் நிர் அகங்காரத்தாலும் சிற்சத்தி ஆநந்தசத்தித் துவாரமாக நாதாந்தத் திருந்து சிவஞானி கள் மோனந் ததும்ப மொழிந்தருளிய திருவருள் துரிய மொழிகளைப் பிரமாணம் ஆகா என்கிலம். ஆகலின் உரை அளவை வேண்டுங்கால் அச்சிவஞானிகளது திருவருள் துரிய மொழிகளுள் குறிக்க வேண்டுவன, குறிக்குதும் என்க."

அடிகளின் இவ்விளக்கத்தால் வேதாகமங்களின் இழி நிலையும், சிவஞானிகளது திருவருள் துரியமொழிகளின் (திருமுறைகள், சாத்திரங்கள், ஞான நூல்கள்,) உயர் நிலையும் விளங்கும்.

வேதாகமங்கள் என்று வீண்வாதம் ஆடுகின்றீர்
வேதாகமத்தின் விளைவறியீர் — சூதாகச்
சொன்ன அலால் உண்மைவெளி தோன்ற உரைக்கவிலை
என்ன பயனோ இவை.

என்பது அடிகள் திருவாக்கு.

# வடகலைக்கும் தென்கலைக்கும் உறுகணக்கு

வடகலையின் முதற்கலைக்கும் தென்கலைக்கும் உள்ள தொரு கணக்கை அடிகள் காட்டுகின்றார்கள்.

"இலைக்குளநீ ரழைத்ததனில் இடங்கர்உற அழைத்ததன்
வாய்த்
தலைக்குதலை மதலை உயிர் தழைப்பஅழைத் தருளியநின்
கலைக்கும்வட கலையின்முதற் கலைக்கும்உறு கணக்
குயர்பொன்
மலைக்கும்அணு நிலைக்கும்உரு வன்தொண்டப்
பெருந்தகையே."

வடகலை என்பது வடமொழியாகிய சமஸ்கிருதம். அதன் முதற்கலை, வேதம். தென்கலை என்பது தமிழ்; தமிழிலுள்ள தேவார திருவாசகமாதி அருள் நூல்கள். மேற்பாடலின் முதலிரண்டடிகளில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலைவாயினின்றும் பிள்ளையை அழைத்த வரலாறு கூறப்பட்டது. அழைத்தருளிய நின்கலை, என்றது சுந்தரர் தேவாரத் திருப்பதிகத்தை. சுந்தரர் திருவாக்காகிய தென் கலைக்கும், வடகலையின் முதற்கலையாகிய வேதத்திற்கும் உறுகணக்கு; தென்கலையைப் பொன்மலை என்றும், வடகலையை அணுவின் நிலை என்று கூறினும் உருது எனப் பின்னிரண்டடிகளில் அடிகள் கூறுகின்றார்கள். உயர்ந்த தொன்றையும் தாழ்ந்த தொன்றையும் ஒப்பிடும் போது மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு என்று கூறுதல் வழக்கு. இங்கே அடிகள் மலையைப் பொன்மலை என்று கூறுகின்றார்கள். கல்மலை அளவினால் மட்டுமே உயர்ந்தது. பொன்மலை அளவினால் மட்டுமின்றி மதிப்

பினும் உயர்ந்தது. ஆதலாற்றான் மலை என்றது பொன்மலை என்றார்கள். இது பொன்மலர் நாற்றமுடைத்து என்பது போலாம். மடுவைக்கூறுது அணுவைக் கூறினர் கள். இப்படிக் கூறினும் பொருத்தமில்லை; இன்னும் சிறிய தொன்றினைக் கூறவேண்டும் என்பார் 'உருது' என்ற சொல்லைப் பெய்தனர். மேற்பாடலில் 'உரு' என்ற சொல் லாட்சியை உற்று நோக்குக.

ஆரிய வேதத்திலும் தமிழ்த் திருவாசகம் சிறந்ததென் பதைச் சிவப்பிரகாச சுவாமிகளும் நால்வர் நான்மணி மாலையுட் கூறுவர். அவையும ஈண்டுக் காணத் தக்கன வாம்.

"விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனு மாரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதையுலகின் மற்றைய ரிலரே."

"திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தின்
நீழல்வா யுண்ட நிகரிலா னந்தத்
தேன்றேக் கெறியுஞ் செய்யமா ணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரு மோது மியற்கைத் தாதலின்
பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கு மதுர வாசகம்

ஓதின் முத்தி யுறுபயன்
வேத மோதின் மெய்ப்பய னறமே."

—நால்வர் நான்மணிமாலை 4, 32.

திருக்குறள், திருமந்திரம், தேவாரம், திருவாசகம், திருவருட்பா ஆகிய தமிழ் அருள் நூல்கள் ஆரிய வேதங்களிலும் உயர்ந்தனவென்பது இவற்றுற்போதரும். வடகலையினும் தென்கலை உயர்ந்ததென்பது வெள்ளிடைமலை.

# செந்தமிழால் வளர்க்கின்றாய்

## செந்தமிழால் வளர்க்கின்றாய்

தன்னைச் செந்தமிழால் இறைவன் வளர்க்கின்றான் என்பதனை அடிகள் 'மெய்யடியார் சபை நடுவே எந்தை உனைப் பாடி மகிழ்ந்தின்புறவே வைத்தருளிச் செந்தமிழில் வளர்க்கின்றாய்' என வாயாரப்பாடி மகிழ்கின்றனர்.

## இறைவன் தமிழால் அருளுதல்

செந்தமிழால் தன்னை வளர்ப்பதாகக்கூறும் அடிகள், இறைவன் தமிழால் அன்பருக்கு அருள்கின்றான் என்பதையும் கூறியருளுகின்றார்கள். ஒற்றியூர்ப் பெருமானைப் பாடுவார், 'வடிக்குறும் தமிழ் கொண்டு அன்பருக்கருளும் வள்ளலே, ஒற்றியூர் வாழ்வே,' என்று பாடுகின்றார்கள். 'வடிக்குறும் தமிழ் கொண்டு அன்பருக்கருளும் வள்ளலே' என்பது அடிகளுக்கும் பொருந்தும். அடிகளுக்கு வள்ளலார் என்பது பெயரன்றோ? தமிழ் கொண்டு நமக்கருளும் வள்ளலாகவே அடிகள் திகழ்கின்றார்.

## தமிழ்க் கவிதையின் சாந்தம்

ஒற்றியூரிலுள்ள நந்தி ஆச்சிரமம் சாந்தம் மிக்கது என்பதைக் கூறும் அடிகள் 'தண்டமிழ்க் கவிதைபோல் சாந்தம் மிக்கது' எனப்பாடுகின்றார்கள்.

கண்டவர் உளமெலாங் கட்டு கின்றது
தண்டமிழ்க் கவிதைபோற் சாந்த மிக்கது
விண்டயன் பதமுதல் விரும்பத்தக்கது
எண்டருந் தவமரசிருக்குஞ் சீரது.

— குடும்பகோஷம் 14.

தமிழ்க் கவிதையின் சாந்தத்தை அடிகள் அனுபவித்தது தான் என்னே! என்னே!!

## தமிழ் மாலை

தாம்பாடும் பாமாலைகளைத் 'தமிழ்ப்பூமாலை', 'சீர்த்தமிழ் மாலை', 'மதன இன் தமிழ்மாலை', என்பர் அடிகள். கலைமகளார் திருப்பதிகத்தில் 'சங்கம் வளர்ந்திட வளர்ந்த தமிழ்க்கொடி' எனக் கலைமகளைப் போற்றுகின்றனர்.

# அடிகள் பதிப்பித்த நூல்கள்

அடிகள் சென்னையிலிருந்த காலத்தில் ஒழிவிலொடுக்கம், தொண்டமண்டல சதகம், சின்மயதீபிகை ஆகிய மூன்று நூல்களைப் பதிப்பித்தார்கள். இம்மூன்றும் முறையே 1851, 1855, 1857 ஆகிய ஆண்டுகளிற் பதிப்பிக்கப் பெற்றன. இவற்றை ஒவ்வொன்றாகக் காண்போம்.

## ஒழிவிலொடுக்கம்

கண்ணுடைய வள்ளலாரால் அருளிச் செய்யப்பெற்ற ஒழிவிலொடுக்கம் என்னும் நூலை, திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் அருளிச் செய்த உரையுடன் அடிகள் 1851-இல் பதிப்பித்தார்கள். இப்பதிப்பின் முகப்புப் பக்கத்திற் காணப்படுவன பின் வருமாறு:

> "உ திருச்சிற்றம்பலம் – ஒழிவிலொடுக்கம் – சீகாழி திருஞான சம்பந்த சுவாமிகள் திருவருள் பெற்ற கண்ணுடைய வள்ளல் திருவாய் மலர்ந்தருளிச் செய்தது. இஃது திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகளால் அருளிச்செய்த உரையுடன்சிதம்பரம் இராமலிங்க பிள்ளையவர்களால் பார்வையிடப்பட்டு மண்ணிப்பாக்கம் சபாபதி முதலியாரவர்களால் முத்தமிழ் விளக்க அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப் பட்டது. விரோதி கிருது ஹ-ஐப்பசி மீ முதல் பதிப்பு."

## நூலாசிரியரும் நூலும்

சைவ சித்தாந்தத்தை வளர்த்த சுத்த சைவ ஆதீனங்கள் பதினெட்டென்பர். அவற்றுள் சீர்காழி வள்ளலாராதீனமும் ஒன்று. இதன் முதற்குரவர் திருஞான சம்பந்தர்

என்பர். திருஞான சம்பந்தரின் திருவடிக்கன்பு பூண்ட வள்ளலார் அறுபத்து நால்வர் என்பர். வள்ளலார் சந்தானத்தில் பல வள்ளல்கள் இருந்திருக்கின்றனரேனும் சிலரைப்பற்றிய விவரங்களாதல் நன்கு தெரியவில்லை. வள்ளலார் சந்தானத்துள் ஒருவராகிய சிவஞான வள்ளலார் என்பவர் சத்திய ஞானபோதம், முதலிய இருபது ஞான சாத்திரங்களை அருளிச் செய்திருக்கின்றார். இவை வேதாந்த சித்தாந்த சமரச ஞான நூல்களாம். இவ்விருபதும் ஒன்றாகத் தொகுக்கப்பெற்று 'வள்ளலார் சாத்திரம்' என்ற பெயரில் வழங்கி வருகிறது. சட்டைநாத வள்ளல் என்பவர் 'சதாசிவரூபம்' என்றொரு நூலை அருளிச் செய்திருக்கின்றார்.

ஒழிவிலொடுக்கம் என்னும் ஞான நூலை அருளிச் செய்தவராகிய கண்ணுடைய வள்ளலாரும் சீகாழிப்பதியினரே. இவர் திருஞான சம்பந்தரை உபாசனா குருவாகக் கொண்டவர். ஒழிவிலொடுக்கம், வேதாகமப் பொதுவிலுபதேசம், சத்திநிபாதத் துத்தமரொழிவு, யோகக்கழற்றி, கிரியைக்கழற்றி, சரியைக்கழற்றி, விரத்தி விளக்கம், துறவு, அருளவத்தைத்தன்மை, வாதனை மண்டார் தன்மை, நிலை இயல்பு எனப் பத்தியல்களையுடையது. இது வேதாந்த சித்தாந்த சமரச ஞான நூல். ஆன்மா பாசோபாதியினீங்கி அருளில் அழுந்தித் தூய்மையுறுதற்குக் கருவியான ஒரு நூல். இது அறுவகைச் சமயங்களுள் வைத்துச் சிவாத்துவிதம் போதிப்பதென்றும் சித்தாந்த சைவத்துக்கு அயன்மை பூண்டு நிற்பதென்றும் கூறுவர். சுத்த சைவ நூல் என்பாரும் உளர்.

'திருநெறி விளக்கம்' என்னும் ஒரு நூல் கண்ணுடைய வள்ளலார் செய்ததாக வழங்குகிறது. 'வள்ளல் ஞான சாரம்' என்றொரு நூல் உளது. இதனைச் செய்தார் யாரெனத் தெரியவில்லை. வள்ளலார் சந்தானத்துள் யாரேனுமொருவராக இருக்கக்கூடும். இவ்விரு நூலின் ஏடுகள் தஞ்சை சரபோஜி மன்னரின் சரசுவதி மகால் நூல்

நிலையத்தில் உள்ளன.[1] கண்ணுடைய வள்ளலாருடைய வரலாறுக வேறொன்றும் தெரியவில்லை, இற்றைக்கு நாற்பத்தாண்டுகட்கு முன்பு, திரு. ப. அ. முத்துத் தாண்டவராய பிள்ளை என்பார் 'செந்தமிழ்ச்செல்வி' யில் கண்ணுடைய வள்ளலாரின் வரலாற்றை எழுதியுள்ளார். அதனுட் சில செய்திகளே காணப்படுகின்றன. கண்ணுடைய வள்ளலாரின் வரலாறு அறிஞர்களால் இனி ஆராயப்படவேண்டியவொன்றாகும்.

**உரையாசிரியர் :**

இவ்வொழிவிலொடுக்கத்திற்கு உரை செய்தார் திருப்போரூர் சிதம்பர சுவாமிகளாவர். இவர் பூர்வா சிரமத்தில் சிதம்பர கவிராயர் என்ற பெயருடன் வித்துவானாக விளங்கினார். விருத்தாசலம் குமார தேவ சுவாமிகளால் ஆட்கொள்ளப்பெற்றும் சாந்தலிங்க சுவாமிகளிடம் உபதேசம் பெற்றும் துறவியானார். சாந்தலிங்க அடிகளார் அருளிச் செய்த கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார் ஆகிய நான்கு நூல்களுக்கும் அவ்வடிகளாரது கட்டளைப்படி உரை யெழுதினார். ஒழிவிலொடுக்கத்திற்கு உரை செய்யுமாறு இவருக்குக் கட்டளையிட்டவர்களும் சாந்தலிங்க அடிகளேயாவர். சிதம்பர சுவாமிகளது உரைகள் மிகவும் அருமை வாய்ந்தவை. அருள் நூல்களுக்கு உரை வரைதலில் சிதம்பர சுவாமிகள் வல்லவரென்பது அவரது இவ்வுரைகளாற் பெறப்படும் உண்மையாகும்.[2]

---

1. திருநெறிவிளக்கத்தையும் வள்ளல் ஞானசாரத்தையும் திரு தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்கள் தஞ்சை சரஸ்வதி மகால் நூல்நிலைய ஏடுகளினின்றும் எடுத்து சித்தாந்தம் இதழ்களில் (1959 ; 60 ; 61) வெளிப்படுத்தினர். பின்னர் அவ்விரண்டும் சரஸ்வதி மகால் நூல்நிலையத்தாரால் 1963, 1962 ஆண்டுகளில் உரையுடன் அச்சிடப்பட்டன.

2. திருவாசகத்திற்கு சிதம்பர சுவாமிகள் உரை செய்திருக்கின்றனர். அது இன்னும் அச்சிடப்படவில்லை. அதன் மூல ஏட்டுப்பிரதி விருத்தாசலம் குமாரதேவ சுவாமிகள் மடத்தில் உள்ளது. அச்சாகி விரைவில் வெளிவர இறைவன் அருள்வானாக.

ஒழிவிலொடுக்கத்தைச் சிதம்பர சுவாமிகள் உரையுடன் பதிப்பித்த அடிகள், நூலின் சிறப்புப்பாயிரச் செய்யுளுக்கு மட்டும் ஒரு விருத்தியுரை செய்து தம் பதிப்பிற் சேர்த்திருக்கின்றார்கள்.

இப்பாயிர விருத்தியில் அடிகள் கந்தரந்தாதி, கல்லாடம், சித்தியார், திருவாசகம், திருக்குறள், புறப்பொருள் வெண்பாமாலை, தொல்காப்பியம் ஆகிய நூல்களினின்றும் மேற்கோள் காட்டியுள்ளனர்.

சிதம்பர சுவாமிகளின் உரையில் வரும் அருஞ்சொற்கள் சிலவற்றிற்குப் பொருளெழுதி அதனை 'இந்நூலுரை பாடத்திற் சிற்சில இடங்களிலுள்ள மறை சொற்பொருட்குத் தெளி சொற் பொருள்' என்ற தலைப்புடன் பாயிரவிருத்தியை அடுத்து அச்சிட்டிருக்கின்றார்கள். நூலுள் ஆங்காங்கே அடிக்குறிப்புகளையும் அமைத்துள்ளனர். நூலிறுதியில் 'அமைத்துக்கொளல்' என்ற தலைப்பில் சிற்சில விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

அடிகளாற் பதிப்பிக்கப்பெற்ற நூல்களுள் இதுவே முதலாவதாகும். இதனைப் பதிப்பிக்கும்போது அடிகட்கு அகவை இருபத்தெட்டாகும். அவ்விளம்பருவத்திலேயே அடிகள் சிறந்த ஞான நூல்களை ஆராய்ந்து பதிப்பிக்கும் ஆற்றல் பெற்றிருந்தனரென்பது இதனாலும் அவர்கள் 1857-இல் பதிப்பித்த சின்மய தீபிகைப்பதிப்பாலும் விளங்கும்.

## தொண்ட மண்டல சதகம்

இது தொண்டை மண்டலத்தின் சிறப்பைக் கூறும் நூல். செங்கற்பட்டு, வடஆர்க்காடு மாவட்டங்களும், தென் ஆர்க்காடு மாவட்டத்தின் ஒரு பகுதியும் சேர்ந்த நிலப்பரப்பு பண்டைக் காலத்தில் தொண்டை மண்டலம் என வழங்கப்பட்டது. சதகம் என்பது தமிழில் வழங்கும் தொண்ணூற்ளு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. அது நூறு

பாடல்களைக் கொண்டதாய் இயற்றப்பெறுவதின் சதகம் எனப்பெயர் பெற்றது. தமிழில் எத்துணையோ சதகங்கள் வழங்குகின்றன. அவை நீதி சதகங்கள், மண்டல சதகங்கள் என இருவகைப்படும். குமரேச சதகம், தண்டலையார் சதகம் முதலியன நீதி சதகங்களாம். தொண்டை மண்டல சதகம், சோழமண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம் ஆகியன மண்டல சதகங்களாம். மண்டல சதகங்களுள் சிறந்ததும் பெருவழக்கானதும் தொண்டை மண்டல சதகமே.

இதனை இயற்றியவர் படிக்காசுப் புலவர். இவரது காலம் இற்றைக்குச் சுமார் முந்நூறாண்டுகட்கு முற்பட்டது. இவர் பிறந்த ஊர் தொண்டைநாட்டுக் களத்தூர். களந்தை, தென்களந்தை, பொன்விளைந்த களத்தூர் என்றும் இவ்வூர் வழங்கப்பெறும். நளவெண்பாவைப்பாடிய புகழேந்திப் புலவரும், திருக்கழுக்குன்றத் தல புராணம், திருவாரூருலா முதலியவற்றை இயற்றிய அந்தகக்கவி வீரராகவரும், நேமிநாதம் என்னும் இலக்கண நூலை இயற்றிய குணவீர பண்டிதரும் இவ்வூரிற் பிறந்தவர்களே யாவர். இவர் செங்குந்தர் மரபினர்.

இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகரிடத்திற் பாடங்கேட்டவர். இவரது இயற்பெயர் இன்னதெனத் தெரியவில்லை. தில்லையில் இவருக்குக் கூத்தப்பிரான் பொற்காசுகளை அருளினமையின் இவர் படிக்காசுப்புலவர் எனப் பெயர் பெற்றார். வள்ளல் சீதக்காதியால் இவர் சிறப்பிக்கப்பெற்றவர். பாம்பலங்காரர் வருக்கக்கோவை, தண்டலையார் சதகம், புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் என்பன இவரால் இயற்றப்பெற்ற பிற நூல்களாம். பின்னாளில் இவர் தருமபுரமடத்தைச் சார்ந்து துறவு பெற்றுப் படிக்காசுத் தம்பிரான் என வழங்கப் பெற்றார்.

இவரது சிறப்பைச் சொக்கநாதப் புலவர் பாடிய பின்வரும் பாடலால் அறியலாம்.

"மட்டாருந் தென் களந்தைப் படிக்காசன் உரைத்தமிழ்
வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும்
பரிந்தவ் வேட்டைத்
தொட்டாலும் கைம்மணக்கும் சொன்னாலும் வாய்
துய்ய சேற்றில் [மணக்கும்
நட்டாலுந் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே பாட்டினது
நளினந் தானே."

சந்தப் பாடல்களைப் பாடுவதில் இவர் சிறந்தவ ரென்பது பின்வரும் தனிப் பாடலொன்றால் பெறப்படும்.

"வெண்பாவிற் புகழேந்தி பரணிக்குச் செயங்
கொண்டான்
விருத்தமென்னு
மொண்பாவுக் குயர்கம்பன் கோவையுலா வந்தாதிக்
கொட்டக் கூத்தன்
கண்பாவு கலம்பகத்திற் கிரட்டையர்கள் வசைபாடக்
காளமேகம்
பண்பாகப் பகர்சந்தம் படிக்காசலா தொருவர்
பகரொணாதே."

அடிகளது தொண்ட மண்டல சதகப்பதிப்பில் படிக் காசுப் புலவரைப் பற்றி ஒரு குறிப்பு தனியாக எழுதப் பட்டுள்ளது. அது வருமாறு.

"இத்தொண்டமண்டல சதகஞ் செய்த புலவர் செங்குந்த மரபிற்றோன்றிச் சிவானுக்கிரகத்தால் தமிழ்க்கலை முழுதும் பயின்று தெய்வீகம் விளங்கிய நல்வாக்கினைப் பெற்று சிதம்பரத்தில் நடேசர் பொன்பணம் ஐந்து பஞ்சாட்சரப் படியில் வைத் தருளக் கொண்டு அதனாற் படிக்காசுப் புலவரென்று பெயர் பெற்றவர்."

அடிகள் தொண்ட மண்டல சதகத்தை 1855 ஆம் ஆண்டிற் (இராட்சச, மார்கழி) பதிப்பித்தார்கள். அப் பதிப்பின் முகப்பேட்டிற் காண்பவை பின் வருமாறு:

> "உ - சிவமயம்-தொண்டமண்டலசதகம் இஃது படிக்காசுப் புலவரால் இயற்றப்பட்டது. கஅருச ஞு ஜனவரி மீ ம-ா-ா கனம்பொருந்திய தொண்ட மண்டலம் துளுவ வேளாளர்களேற்படுத்திய இயற் றமிழ்ப் போதகசாலை இரட்சகர்த்தராகிய கொண்ணூர் ஐயாசாமி முதலியாரவர்கள் கேட்டுக்கொண்டபடி சிதம்பரம் இராமலிங்க பிள்ளையவர்களாற் பரிசோதிக் கப்பட்டு இந்துபிரஸென்னும் அச்சுக்கூடத்திற் பதிப் பிக்கப்பட்டது. இராட்சச ஞு மார்கழி மீ "

அக்காலத்தில் 'தொண்டை மண்டலம்' என்ற பெயரைப்பற்றிப் புலவர்களிடையே ஒரு வாதம் எழுந்தது. 'தொண்டை மண்டலம்' என்று வழங்குவது சரியா அல்லது 'தொண்ட மண்டல'மென்று வழங்குவது சரியா என்பதே அது. 'டகரமா' அல்லது 'டகர ஐகாரமா' என்ற இவ்வாதம் இறுதியில் அடிகளிடம் வந்தது. அடிகள் 'தொண்ட மண்டலம்' என்பதே சரியென, நிறுவித் தம் கூற்றை விரித்து 'நூற்பெயர் இலக்கணம்' என்ற தலைப்பில் எழுதித் தொண்ட மண்டல சதகத்தோடு சேர்த்துப் பதிப் பித்தார்கள். அடிகளின் தொண்ட மண்டல சதகப் பதிப்பிற்கே இவ்வாதம் காரணமாயிருக்கலாம். நூற் பெயரிலக்கணத் திறுதியில் பின்வருமாறு கூறப்படுவதனின் றும் இதனை அறிகிறோம்.

> தொண்ட மண்டல மென்பதைத் தொண்டை மண்டல மென்று இச் சென்னை நகரிலிருக்கின்ற வித்துவான்களிற் சிலர் மாறாக வழங்க, அது குறித் துச் சில பிரபுக்களும் வித்துவான்களும் உபாத் தியாயர்களும் "இவ் விரண்டில் இலக்கண வமைதி யும் உலக வழக்கு முள்ளது யாது? அதனை யொரு

வாறு தெரிவிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டபடி சிதம்பரம் இராமலிங்க பிள்ளை யுவர் களாற் றெரிவிக்கப்பட்டது."

இந்நூற் பெயரிலக்கணத்துள் அடிகள், 'அவர் கூற் ருக விவகரித்தல்', 'அதனை மறுத்தல்' என இரு கூருக ஆராய்ந்தெழுதுபவை நமக்கின்பஞ் செய்வதாம். இறுதி யில் அடிகள், "இங்ஙன முணரமாட்டாதார் ஆதொண் டச் சக்ரவர்த்தி யென்பவர் தாமரசு செய்யுங் காலத்தில் தம்மாற் கட்டுவித்த ஆலயங்களிற் றம் பெயரிலச்சினை சிலையின்கட் பொறிப்பித்தனர்; ஆண்டும் ஆதொண்ட வென்றே இலக்கண வமைதி பெற்றிருக்கின்றது; இதனை திருவலிதாயம் திருமுல்லைவாயில் முதலிய சிவ தலங்களிற் சென்றேனுங் கண்டு தெளியக் கடவர்," என்று கல் வெட்டுச் சான்று காட்டி முடிக்கின்றனர். திருவலிதாயம் திருமுல்லைவாயில் கல்வெட்டுகளில் 'தொண்ட மண்டலம்' என்றே காணப்படுகிறது. அடிகள் கல்வெட்டுச் சான்று காட்டுவதனின்றும், அவர்கள் திருக்கோயில்களுக்குச் செல்லுங்காலங்களில் கோயிற் கட்டிடக்கலை சிற்பக்கலை, கல்வெட்டுகள் ஆகியவற்றையும் ஆராயும் வழக்கமுடைய வர்களென்பதனை அறிகிறோம்.

அடிகளுக்குச் சமகாலத்திலிருந்த பெரும்புலவர்களெல் லாம் கல்வெட்டுகளைப்பற்றி நினைந்ததும் இல்லை. சாசன ஆராய்ச்சி (Epigraphy) தொல் பொருளாராய்ச்சி (Archaeology) ஆகிய இரண்டும் மேலைநாட்டார் நமக்களித்த கருவூலங் களாம். பத்தொன்பதாம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் மேலைநாட்டு அறிஞர் சிலரது முயற்சியின் பயனுக இவ் விருதுறைகள் அரசாங்கத்தால் அமைக்கப்பட்டன. அறிஞர் பலர் தனித்த முறையிலும் இக்கலைகளுக்குப் பெருந்தொண்டாற்றியுள்ளனர். தமிழ்ப் புலவர்களெல்லாம் கல்வெட்டுகளிற் கவனஞ்செலுத்தாத காலத்தில் அடிகள் கல்வெட்டுகளை ஆராய்ந்தனரெனின் அடிகளது கலைப் புலமையை அளவிடுதலெங்ஙனமோ? அடிகள் தமிழ் நாட்டின் முதற் கல்வெட்டாராய்ச்சியாளர் ஆவர்.

தொண்டமண்டல சதகத்தின் காப்புச் செய்யுளாகிய கடவுள் வாழ்த்துப் பாடலுக்கு அடிகள் ஒரு விரிவுரை எழுதித் தம்பதிப்பிற் சேர்த்திருக்கின்றனர்.

அடிகளின் பதிப்புக்குக் காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாரவர்கள், புதுவை சுப்பராய முதலியாரவர்கள், புரசை அட்டாவதானம் சபாபதி முதலியாரவர்கள், விருத்தாசலம் தியாகராஜ கவிராயரவர்கள் ஆகிய நால்வர் சாற்றுக்கவியளித்துள்ளனர். அடிகளது பதிப்பில் சதகச் செய்யுள் ஒவ்வொன்றுக்கும மேற்கோளாக பழைய நூற் பாடல்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. சில செய்யுட் களுக்கு இரண்டு அல்லது மூன்று பாடல்கள் மேற் கோளாகக் காட்டப்பட்டுள்ளன. இம்மேற்கோட்பாடல்கள் சதகச் செய்யுள் ஒவ்வொன்றன்கீழும் அச்சிடப்பட்டுள்ளன. இம்மேற்கோட்பாடல்கள் அடிகளால் முதன்முதலாக எடுத்துக் காட்டப்பட்டனவா அலலது அவர்களுக்குக் கிடைத்த ஏடுகளில் இருந்தனவா என்பது தெரியவில்லை. யாமறிந்தவரை அடிகளுடைய தொண்ட மண்டல சதகப் பதிப்பே (1855) முதற் பதிப்பாகக் காணப்படுகிறது. அதற்கு முன்பு யாரும் பதிப்பித்துள்ளதாகத் தெரியவில்லை.

இவை எல்லாவற்றினுஞ் சிறந்ததோர் செய்தி அடிகளின் இப்பதிப்பு இலவச வெளியீடென்பதாகும். இதுபற்றி இப்பதிப்பிற் காணப்படும் குறிப்பு வருமாறு:

> "இந்தப் புத்தகம் வேண்டியவர்கள் சென்ன பட்டணம் பெத்திநாயகன்பேட்டை முல்லாதெரு வில் இயற்றமிழ்ப் போதகசாலை ஆமாத்தியர்களி லொருவராகிய சென்னப்ப நாயகன் குப்பம் பால சுப்பிரமண்ணிய முதலியாரிடத்தில் விலை கொடாமற் பெற்றுக் கொள்ளலாம். புறதேயத் திலுள்ளவர்கள் கடித மூலமாய் ஊர்ப்பெயரும் நாமதேயமும்-விபரமாகத் தெரிவித்தாற் கொடுத் தனுப்பப்படும். தபால்செலவு தாங்களே கொடுத்து வாங்கிக்கொள்ள வேண்டியது."

## சின்மய தீபிகை

சின்மய தீபிகை என்பது ஓர் அருமையான ஞான நூல். இதனை அடிகள் 1857, பிங்கள ஆண்டு கார்த்திகைத் திங்களில் முதன் முதலாகப் பதிப்பித்தார்கள். அப்பதிப்பின் முகப்புப் பக்கத்திற் காணப்படுவன பின்வருமாறு:

> "சிவமயம் திருச்சிற்றம்பலம் சின்மய தீபிகை, சிதம்பரம் இராமலிங்க பிள்ளை அவர்களால் பார்வையிடப்பட்டு மண்ணளிப்பாக்கம் சபாபதி முதலியார் பாக்குப் பேட்டை மதுரை முதலியார் இவ்விருவர்களால் முத்தமிழ் விளக்க அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. பிங்கள ஞ கார்த்திகை மீ முதற்பதிப்பு."

இந்நூலாசிரியரின் பெயர் அடிகளது பதிப்பில் குறிப்பிடப்படவில்லை. அடிகளாரின் இப்பதிப்பைப் பின்பற்றிக் காஞ்சிபுரம், இராமானந்தயோகி 1907ஆம் ஆண்டில் ஒரு பதிப்பை வெளியிட்டார். அதனுள் இந்நூலாசிரியர், 'விருத்தாசலம் குமாரதேவ சுவாமிகள் ஆதீனம் முத்தைய சுவாமிகள்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சின்மய தீபிகை நூற்றுப்பதினன்கு பாடல்களையும், ஐந்து பாயிரச் செய்யுட்களையும் கொண்ட சிறந்த ஞான நூலாகும்.

# அடிகள் இயற்றிய நூல்கள்

உரைநடை நூல்கள் அரிதாகத் தோன்றத் தொடங்கிய அக்காலத்தில், மனுமுறை கண்ட வாசகம், ஜீவ காருண்ய ஒழுக்கம் என்னும் இரண்டு உரைநடை நூல்களை அடிகள் எழுதியருளினர்கள்.

உரைநடையின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் பற்றி இங்கு சிறிது காண்பது பொருந்துவதாகும். சங்க நூல்கள் அனைத்தும் செய்யுட்களே. காப்பியங்களுள் செய்யுளோடு உரைநடையும் விரவி வருவதுண்டு. இது

> "தொன்மைதானே
> உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே"

என்னும் தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரத்தாற் பெறப்படும். இச்சூத்திரத்திற்கு உரையெழுதும் பேராசிரியர் 'தொன்மை யென்பது உரை விராஅய்ப் பழமையவாகிய கதைப் பொருளாகச் செய்யப்படுவது. அவை பெருந்தேவனராற் பாடப்பட்ட பாரதமும், தகடூர் யாத்திரையும் போல்வன' என்றெழுதுகின்றூர். 'சிலப்பதிகாரமும் இதன் பாற்படும்' என்றூர், நச்சினர்க்கினியர். பெருந்தேவனர் பாரதமும் தகடூர் யாத்திரையும் இறந்துபட்டன. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக இப்போது சிலப்பதிகாரம் ஒன்றே உள்ளது. சிலப்பதிகாரம் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்பதை

> "உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்
> உரைசாலடிகளருள மதுரைக்
> கூலவாணிகன் சாத்தன் கேட்டனன்"

என்னும் சிலப்பதிகாரப் பதிகச் செய்யுளடிகளால் அறியலாம். சிலப்பதிகாரம் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்

யுள் என்று கூறப்பட்டபோதிலும், அதன் உரைபெறு கட்டுரை, வாழ்த்துக் காதையின் உரைப்பாட்டுமடை ஆகிய சிறு பகுதி மட்டுமே உரைநடை. மற்றப் பெரும் பகுதி செய்யுளே. பெரும்பாலும் செய்யுளாகவும், மிகச் சிறு பான்மை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாகவும் அக்காலத்தில் நூல்கள் செய்யப்பட்டனவே தவிர தனி உரை நடை நூலாக யாதும் எழுதப்படவில்லை. இடைக் காலத்தில் சங்கநூல்களுக்கும், காப்பியங்களுக்கும், தொல் காப்பியம் முதலிய இலக்கண நூல்களுக்கும் உரைகள் எழுதப்பட்டன. மேலை நாட்டார் தமிழகத்திற்கு வந்த பின்னரே தனி உரைநடை நூல்கள் தோன்றத் தொடங்கின. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளரத் தொடங்கிற்று. மேலை நாட்டினின்றும் கிறித்துவ சமயத் தைப் பரப்புவதற்காக இங்கு வந்த பாதிரிமார்கள் சிறியன வும் பெரியனவுமான உரை நடை நூல்களை எழுதினர். அவர்களது சமயம் பரவ இது பெருந்துணையாயிருந்தது. இதன்பின் நம்மவர்களும் உரைநடை நூல்களை எழுதத் தலைப்பட்டனர். வின்ஸ்லோ என்னும் ஐரோப்பியர் எழு திய தமிழ், ஆங்கில அகராதியின் முன்னுரையில் அவர் அக்காலத்திய உரைநடையைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார். "தமிழில் உரைநடை இன்னும் உருவாகவில்லை. அதனைச் சரியாக உருப்படுத்துவதற்கு அறிஞர்கள் செய்துவரும் முயற்சிகள் நல்ல பயன் தரும். சுதேசிகள் விரைந்து செய்யுள் செய்பவராயிருந்தும் ஒரு பக்கமாவது உரைநடையெழுத இயலாதவர்களாயிருக்கின்றார்கள்." என அவர் கூறுவதனின்றும் பத்தொன்பதாம் நூற்றாண் டின் உரைநடை நிலையை நாம் அறியலாம். பிரதாப முதலியார் சரித்திரத்தின் ஆங்கில முன்னுரையில் ஆசிரியர் மாயூரம் வேதநாயகம் பிள்ளையவர்கள் தமிழ் உரைநடை யைப்பற்றிக் கூறுவனவும் ஈண்டறியத் தக்கதாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் உரைநடை வளர்ச்சி யில் ஆறுமுக நாவலரும், வேதநாயகம் பிள்ளையும் இராமலிங்க அடிகளும் குறிப்பிடத்தக்கோராவர். ஆறுமுக

நாவலர், பாலபாடம், சைவ வினாவிடை, பெரியபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் இலக்கண வினாவிடை, இலக்கணச் சுருக்கம் ஆகிய உரைநடை நூல்களைச் செய்தார். வேதநாயகம் பிள்ளை பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி சரித்திரம் என்னும் இரு நவீனக் கதைகளை (நாவல்) உரைநடையில் எழுதினர்.

அடிகள் மனுமுறைகண்ட வாசகம் ஜீவகாருண்ய ஒழுக்கம் என்ற இரண்டு உரைநடை நூல்களை எழுதியருளினார்கள். மனுமுறை கண்ட வாசகம் அடிகள் காலத்திலேயே பதிப்பிககப்பட்டது. ஜீவகாருண்ய ஒழுக்கம் அடிகளுக்குப் பின்னர் அச்சாயிற்று. அடிகள் தமது ஒழிவிலொடுக்கப்பதிப்பில் எழுதிய பாயிர விருத்தியும், தொண்டமண்டல சதகப்பதிப்பில் எழுதிய நூற்பெயரிலக்கணமும் உலகெலாம் என்னும் மெய்ம்மொழிப் பொருள் விளக்கமும் இன்ன பிறவும் அடிகளின் உரைநடைத் திறத்தைக் காட்டுவனவாம்.

## மனுமுறை கண்ட வாசகம்

மனுமுறை கண்ட வாசகம் என்பது, 'வாயிற் கடைமணி நடுநா நடுங்க ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத் தான் தன் அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோனு' கிய மனுச்சோழன் முறை செய்த வரலாற்றைக் கூறுவது. பெரிய புராணத்துள் வரும் மனுச்சோழர் வரலாற்றை விரித்து 'மனுமுறை கண்ட வாசகம்' எனற உரைநடை நூலை அடிகள் எழுதியருளினார்கள். இந்நூலுக்கு மனுமுறை கண்ட வாசகம் என அடிகள் பெயரிட்டதே அழகாகும். பெரிய புராணத்துள் 'திருநகரச்சிறப்பில' மனுச்சோழர் வரலாறு கூறப்படுகிறது. சில பதிப்புகளில் திருநகரச்சிறப்பு என்ற தலைப்புக்குப் பதிலாக 'மனுநீதி கண்ட புராணம்' என்ற தலைப்புக் காணப்படுகிறது. சமாஜப்பதிப்பில் 'திருநகரச் சிறப்பு' என்றே இருக்கிறது. *இப்பகுதியின் தலைப்பு மேற்குறித்த படியும் திருவாரூர்ச்

சிறப்பென்றும், மனுநீதி கண்ட புராணம் என்றும் பிரதிகளில் வெவ்வேருகக் காணப்படுகிறது' என்று சமாஜப் பதிப்பில் திருநகரச் சிறப்பின்கீழ் அடிக் குறிப்பெழுதப் பட்டுள்ளது. நாவலர் பதிப்பில் இது 'மனுநீதிகண்ட புராணம்' என்ற தலைப்புடன் காணப்படுகிறது. 'மநுநீதி', 'மநுநீதிச் சோழன்' என்பதே பெரு வழக்காயிருந்தும் அடிகள் மனுநீதி கண்ட வாசகம் என்னது மனுமுறை கண்ட வாசகம் எனப் பெயரிட்டது என்னெனில், நீதியை முறை என்பதே பண்டைத் தமிழ்ச்சான்றோர் வழக்காதலி னென்க.

" குறைவிலுடம்பரிந்த கொற்றவன் முன்வந்த
கறவை முறை செய்த காவலன் காணம்மானை."
—சிலப்பதிகாரம், அம்மானைவரி

" மகனை முறை செய்த மன்னவன் "
—மணிமேகலை, 22; 210

என்ற தொல்லோர் வழக்குகளைக் காண்க. திருவள்ளுவரும் அரச நீதியை 'முறை' என்றே கூறினர்.

" முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும் "

என்பது வள்ளுவர் வாக்கு. இவற்றையெல்லாம் நன்குணர்ந்த பெருமானுகிய அடிகள் தமது நூலுக்கு மனுமுறை கண்ட வாசகம் எனப்பெயரிட்டார்கள்.

இந் நூலை எழுதும்படி அடிகளைக் கேட்டுக்கொண்டவர்கள், சென்னை சாஸ்திர விளக்கச் சங்கத்தார் ஆவர். இது போன்ற நூற்ளெண்டுகள் பலவற்றை சாஸ்திர விளக்கச் சங்கத்தார் செய்துள்ளனர். சிதம்பர புராணத்தைப் பதிப்பிக்கும்படி மதுரை ஆதீனம் சிதம்பர சுவாமிகளைக் கேட்டுக்கொண்டவர்கள் இச் சாஸ்திர விளக்கச் சங்கத்தைச் சார்ந்த சைவ சித்தாந்த சபையார்களே யாவர்.

மனுமுறை கண்ட வாசகம் முதன் முதலாக 1854 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் அச்சிடப்பட்டது. அப் பதிப்பின் முகப்புப் பக்கத்திற் காண்பன பின்வருமாறு:

> " உ சிவமயம் திருச்சிற்றம்பலம் மனுமுறை கண்ட வாசகம் இஃது பலருக்கு முபயோக மாகச் சாஸ்திர விளக்கச் சங்கத்தார் கேட்டுக் கொண்டபடி மநுநீதி கண்ட புராணத்தை விரிவுள்ள வாசக நடையாகச் சிதம்பரம் இராமலிங்கப் பிள்ளையவர்களால் இயற்றப்பட்டு பாளையம் சுப்பராயச் செட்டியாரவர்களால் மேற்படி சங்கத்தாரவர்களது வித்தியானந்த அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பட்டது. ஆனந்த ஷு ஆனி மீ'."

மனுமுறை கண்ட வாசகத்திற்கும், பெரிய புராணத்தி லுள்ள மனுநீதி கண்ட புராணத்திற்கும் கதைப் போக்கில் சிற்சில வேறுபாடுகள் உள்ளன. வீதிவிடங்கன் உலாப் போனதாகப் புராணம் கூற, அவன் சிவதரிசனத்திற்குப் போனதாக வாசகம் கூறும். தேர்க்காலில் அடிபட்டிறந்த கன்றின் தாய்ப்பசு வருந்துவதைக் கண்டு வீதிவிடங்கன் பிராயச் சித்தம் செய்து கொள்ளச் சென்றான் என்று புராணங்கூற, கன்றிறந்து கிடக்குமிடத்தை விட்டு வீதிவிடங்கன் சென்ற பின்னரே, தாய்ப்பசு கன்றைத் தேடிவந்து வருந்தியது என்று வாசகம் கூறும். இன்னும் இது போன்ற சிறுவேறுபாடுகளும் உள்ளன. இவை நூலாசிரியர் என்ற முறையில் அடிகளால் புனைந்து கூறப்பட்டனவாகும். பெரிய புராணத்தில் திருநகரச் சிறப்புக் கூறப்புகுந்த சேக்கிழார் திருவாரூரிலிருந்து அரசோச்சிய மனுச்சோழர் வரலாற்றைச் சுருங்கக் கூறுகின்றார். அடிகள் அதனையே விரித்துத் தனி நூல் செய்யப் புகுந்தாராதலின் அதற்கு வேண்டிய சில மாறுதல்களைச் செய்து கொண்டார்களெனலாம். பெரிய புராணத்தின் மனுநீதி கண்ட புராணத்தை முதநூலாகக் கொள்ளின், அடிகளின் மனுமுறை கண்ட வாசகம் வழி

நூலாகும். அன்றிப் பழைய இலக்கியங்களில் மனுச் சோழர் வரலாற்றுக் குறிப்புகளாகக் காணப்படுவனவற்றை முதனூற் கருத்தாகக் கொள்ளின், சேக்கிழாரின் புராணத்தை வழி நூலாகவும் அடிகளின் வாசகத்தைச் சார்பு நூலாகவும் கொள்ளலாம். இங்ஙனம் கொள்ளல் சிறந்ததன்று. சேக்கிழாரின் புராணத்தை முதல் நூலாகவும், அடிகளின் வாசகத்தை வழி நூலாகவும் கொள்ளலே சிறந்ததாம். அடிகள் ஏற்படுத்திக்கொண்ட மாறுதல்கள் 'முன்னோர் நூலின் முடிபொருங்கொத்துப்பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி'யதாகும்.

இந்நூலுள், 'தீராக்குறைக்குத்தெய்வமே முடிவு';'இளங் கன்று பயமறியாது'; 'எண்ணம் பொய்யாகும், ஏளிதம் மெய்யாகும்'; 'கும்பகோணத்துப் பள்ளன் கொள்ளை கொண்டுபோக தஞ்சாவூர்ப் பார்ப்பான் தண்டங் கொடுத் தான்'; 'எழுத்தறியாதவன் ஏட்டைச் சுமந்தது போல'; 'காலம் போகும் வார்த்தை நிற்கும்'; 'எரியுங்கொள்ளியை ஏறத் தள்ளுவதுபோல'; 'எரியும் நெருப்பில் நெய் விடுவது போல'; 'கப்பல் உடைந்து கலங்கும் போது தெப்பமும் உடைந்தது போல'; 'கொண்ட மனையாளிருக்கக் கூலி வாங்க வந்தவளைத் தாலி வாங்கச் சொன்னதுபோல' என்னும் பழமொழிகளும் இவை போன்ற பிறவும் வந்து நமக்குப் பேரின்பம் பயப்பனவாம்.

இம்மனுமுறை கண்ட வாசகம், இளையரும், முதியோரும் சிற்றறிவினோரும் பேரறிஞர்களும் போற்றிப் படித்து மகிழ வேண்டிய தொன்றாகும்.

## ஜீவகாருண்ய ஒழுக்கம்

இது, அற்றார் அழிபசி தீர்த்தல், புலால் மறுத்தல் இவ்விரண்டையும் வற்புறுத்தி அடிகளால் அருளிச் செய்யப்பட்டதாகும். இதன் நடை சிறப்பு வாய்ந்தது. அடிகள் மறைவுக்குப்பின் ஐந்தாண்டுகள் கழித்து 1879இல்

இது முதன் முதலாக அச்சிடப்பட்டது. இதனை அச்சிட்டு வெளியிடக் கேட்டுக் கொண்டவர், அக்காலத்திலிருந்த 'கூடலூர் டிஸ்ட்ரிக்ட் – இஸ்கூல் இன்ஸ்பெக்டர் சீ. இரங்கசாமி பிள்ளை' என்பவராவார். அன்றே பாடசாலை இன்ஸ்பெக்டரைக் கவர்ந்த இதுவும், மனுமுறை கண்ட வாசகமும் 1958–59 ஆம் ஆண்டில் பல்கலைக் கழகத் தொடக்க வகுப்புக்குப் (Pre-University) பாடமாக வைக்கப்பட்டன.

# அடிகள் போற்றிய அருள் நூல்கள்

திருக்குறள், நாலடியார், தேவாரம், திருவாசகம், திருமந்திரம் ஆகிய அருள் நூல்களை அடிகள் மிகப் பெரிதும் போற்றுவர். இந்நூல்களின் கருத்துகளை அடிகள் தமது அருளிச் செயல்களுள் எடுத்தாண்டுள்ளனர். கருத்துகளேயன்றித் தொடர்களும் முழுப்பாட்டுகளும் பலவிடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளன. அங்ஙனமெடுத்தாளுமிடங்களில் அடிகள் முன்னுசிரியர்களைப் போற்றிச் சிறப்பிக்கும் அழகு நம்மனோர்க்குப் பேரின்பம் பயப்பதாகும்.

## திருக்குறள்

திருக்குறள் ஒரு ஞான நூல் என்பதும், திருவள்ளுவர் ஒரு ஞானி என்பதும் எம் கொள்கை.

தேவர் குறளும் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் — கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர். —ஔவையார்

ஞான நூல்கள் பலவற்றுள் சொல்லப்பெருத உண்மைகள் திருக்குறளிற் காணப்படும். ஞான நூல்களில் சுற்றிவளைத்தும் இலைமறை காயாகவும் கூறப்படும் உண்மைகள் திருக்குறளில் நேரிடையாகவும் வெளிப்படையாகவும் அழுத்தந்திருத்தமாகவும் கூறப்படும். திருக்குறள் ஞானச் சிறப்பில் திருமந்திரம், திருவாசகம் முதலியவற்றை ஒப்பது; பதினுயிரம் பகவத் கீதையிலும் உயர்ந்தது. திருக்குறளில் கடவுள் வாழ்த்து, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல், தவம், நிலையாமை ஆகிய அதிகாரங்களிற் காணப்படும் கருத்துகள் ஞான நூலுணர்வுடையாரை இறும்பூதெய்தச் செய்வன.

பின் வந்த புலவர்கள் மிகப்பலர் திருக்குறளைத் தத்தம் நூல்களுள் எடுத்தாண்டுள்ளனர். திருக்குறளை எடுத்தாளுவதும் மேற்கோள் காட்டுவதும் தமக்கும் தம் நூலுக்கும் ஒரு சிறப்பெனவே அவர்கள் கருதினர். புலவர்கள் மட்டுமின்றி ஞானிகளும் திருக்குறளை எடுத்தாண்டும் மேற்கோள் காட்டியும் உள்ளனர். பின்னூலாசிரியர் ஒருவர் முன்னூலொன்றை எடுத்தாள்வதும் மேற்கோள் காட்டுவதும் ஒரு வியப்பன்று. அது கவி மரபும் இலக்கிய வழக்கும் ஆம். ஆயினும் ஞான நூல் செய்யப் புகுந்த ஞானிகள் தாம் சொல்லும் ஞானக் கருத்துகளுக்கு அரணாகத் திருக்குறளை எடுத்துக் காட்டுகின்றனரெனின் திருக்குறளின் ஞானச் சிறப்பை என்னென்பது. இலக்கியங்களிற் சிந்தை செலுத்தாத ஞானிகளும் உள்ளத்தைத் திருக்குறளிடத்துப் பறிகொடுத்தனரெனின் திருக்குறளின் தெய்வச் சிறப்பை, அருட்சிறப்பை, ஞானச் சிறப்பை என்னென்போம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், சேரமான் பெருமாள், திருமூலர், உய்யவந்த தேவநாயனர், உமாபதி சிவாசாரியர் கண்ணுடையவள்ளலார், சிவப்பிரகாச சுவாமிகள் ஆகிய பெரியோர்கள் தமது அருளிச் செயல்களுள் திருக்குறட்பாக்களையும் தொடர்களையும் கருத்துகளையும் எடுத்தாண்டுள்ளனர்.

திருவள்ளுவர் ஞானிகளுக்கு ஞானி என்றும், திருக்குறள் ஞான நூல்களுக்கு ஞான நூல் என்றும் யாம் கூறின் அது மிகையாமோ? திருவள்ளுவர்க்கு வழங்கும் வேறு பெயர்களாகிய தெய்வப் புலவர், தேவர், நாயனர் என்பவையே அவர் ஒரு ஞானி, அருளாளர் என்பதைக் காட்டும். அவருக்குக் கோயிலெடுக்கப்பட்டதும் இது கருதியே. இஃதுணராது புறநானூற்றுப் புலவரோடொருவராய் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு முதலியவற்றைப் பாடிய பல நூறு புலவர்களுடன் திருவள்ளுவரையும் ஒருசேர வைத்து எண்ணுதல் அபசாரம். ஞானியாகிய திருவள்ளுவரைச் சமய ஞானியாகக் கொள்ளாது சமரச ஞானியாகவே கொள்ளவேண்டும். அவர் சமயங்

கடந்தவர். "சமயக் கணக்கர் மதிவழி கூறாதுலகியல் கூறிப் பொருளிது வென்ற வள்ளுவர்" என்னும் கல்லாடனூர் கருத்துரை காண்க.

இராமலிங்க அடிகள் தமது பாடல்களுள் பலவிடங் களிற் குறட்பாக்களையும் தொடர்களையும் கருத்துகளையும் எடுத்தாண்டுள்ளனர். அடிகள் அருளிய 'நெஞ்சறி வுறுத்தல்' திருவருட்பா முதற்றிரு முறையுள் இடம் பெற்றுள்ளது. இதனுள் அடிகள் தமது நெஞ்சுக்கு அறி வுறுத்தலாகப் பல குறட்பாக்களை எடுத்துக் கூறுகின்றார்கள். அவற்றைக் காண்போம்.

"கூத்தாட்ட வைசேர் குழாம் விளிந்தாற்போலுமென்ற
சீர்த்தாட் குறள் மொழியும் தேர்ந்திலையே"

நெஞ்சறிவுறுத்தல், கண்ணி—411.

இதனுள் அடிகளார்,

"கூத்தாட்டவைக் குழாத்தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அது விளிந் தற்று"

என்ற நிலையாமை அதிகாரக் குறட்பாவை எடுத்தாண் டுள்ளனர். 'குறள்மொழியும் தேர்ந்திலையே' எனத் தம் நெஞ்சுக்கு இடித்துரையும் கூறுகின்றனர்.

"செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனில் தீயதென்ற தெண்ணிலையே — மல்லல்பெறத்
தன்னைத்தான் காக்கில் சினங்காக்க என்றதனைப்
பொன்னைப்போல் போற்றிப் புகழ்ந்திலையே — துன்னி
அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல என்னுந்
திகழ்வாய்மையும்நீ தெளியாய் — இகழ்வாரை"

— நெஞ்சறிவுறுத்தல், — 433, 434, 435.

தொடர்ந்து வரும் இம்மூன்று கண்ணிகளிலும் மூன்று குறட்பாக்களை அடிகளார் எடுத்தாண்டுள்ளனர்.

"செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்அதனின் தீய பிற" (302)

"தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்" (305)

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை" (151)

என்னும் இம்மூன்று குறட்பாக்களையும் முறையே அம்மூன்று கண்ணிகளிலும் எடுத்தாண்டுள்ளமை காண்க. திருக்குறளைத் தம் நெஞ்சுக்கு எடுத்துரைக்கும் அடிகளார் 'அதனைப் பொன்னைப்போல் போற்றிப்புகழ்ந்திலையே' எனக் கேட்கின்றார்கள்.

"உறங்குவது போலுமென்ற ஒண்குறளின் வாய்மை
மறங்கருதி அந்தோ மறந்தாய் — கறங்கின்
நெருநல் உளனொருவன் என்னும் நெடுஞ்சொல்
மருவும் குறட்பா மறந்தாய் — தெருவில்"
— நெஞ்சறிவுறுத்தல் 466, 467

இக்கண்ணிகளில் அடிகள்,

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு" (339)

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு." (336)

என்னும் இரு குறட்பாக்களை எடுத்தாண்டுள்ளனர். குறட்பாக்களைத் தம் நெஞ்சுக்கு எடுத்துக்கூறி 'குறள் மொழியுந் தேர்ந்திலையே' 'எண்ணிலையே', 'பொன்னைப்போல் போற்றிப் புகழ்ந்திலையே', 'தெளியாய்', 'ஒண்குறளின் வாய்மை மறங்கருதி அந்தோ மறந்தாய்', 'நெடுஞ்சொல் மருவும் குறட்பா மறந்தாய்', என்றெல்லாம் அடிகள் இடித்துரைப்பதனை, நாம் நம் நெஞ்சுக்கும் கூறியதாகக் கொள்ளவேண்டும்.

**அடிகள் நடத்திய திருக்குறள் வகுப்பு**

பொதுமக்களுக்காக முதன் முதலில் திருக்குறள் வகுப்பு நடத்தத் தொடங்கியவர் இராமலிங்க அடிகளே. தமது மாணவர் உபயகலாநிதிப் பெரும்புலவர் தொழுவூர் வேலாயுத முதலியாரைக்கொண்டு அடிகள் திருக்குறள் வகுப்பை நடத்தினர்கள். வேலாயுத முதலியாரின் திருக் குறள் வகுப்பைப்பற்றிய சுவையான வரலாறென்றும் அறி யப்படுகிறது. கற்றூர், கல்லார் இளையோர், முதியோர் எனப் பலதரத்தினரும் வகுப்புக்கு வந்தனர். வேலாயுதனர் தமது இருமொழிப்புலமை, பரந்த நூலாராய்ச்சி, கவியாற்றல் ஆகியவற்றிற்கேற்ப, வகுப்பை மிக விரிவாக நடத்தினராம். மூன்று மாதமாகியும் மூன்று அதிகாரங்களேனும் முடிய வில்லையாம். போதிய அறிவு வலியில்லார் சிலர்க்கும் பாடத்தைப் பின்பற்றுவது கடினமாயிருந்ததாம். அவர்கள் அடிகளிடஞ் சென்று முறையிட, அடிகள், 'மூடமுண்ட வித்துவானைக் கூப்பிடும்' என்ருர்களாம். இதனைக் கேட் டார்களும் முறையிட்டவர்களும் முதலியாரை அடிகள் 'மூடம்', 'முண்டம்', எனச் சொல்லியதாகக் கருதி உள் நகை கொண்டனராம். முதலியார் வந்ததும் அடிகள் மூடமுண்டவித்துவான் என்பதற்கு மாணக்கர்களின் மூடத்தை உண்ட வித்துவான் என்பது பொருள் எனக் கூறி வகுப்பை எளிதாக நடத்துமாறு கட்டளையிட்டருளி ஞர்களாம்.

அடிகள் காலத்திலும் அதற்கு முன்பும் திருக்குறள் முதலிய நூல்களைத் தக்க பெரும்புலவர்கள், முறையாகப் பாடஞ் சொல்லுவதும் கேட்கும் தரத்திலுள்ளோர் பாடங் கேட்பதும் வழக்கமேயொழிய, கற்றூர், கல்லார் முதலிய எல்லாத் தரத்தினரையும் பொதுவாகக் கூட்டி வகுப்பு நடத்தும் வழக்கமில்லை. இதிகாச புராணச் சொற்பொழிவு களே பொதுமக்களுக்காகச் செய்யப்பட்டு வந்தன. அந் நிலையில் அக்காலத்தில் முதன் முதலாகப் பொது மக்களுக் காகத் திருக்குறள் வகுப்பு நடத்தத் தொடங்கியவர் இராமலிங்க அடிகளே.

## நாலடியார்

இது பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று. நானூறு பாடல்களையுடையது. அதனால் நாலடி நானூறு என்றும் வழங்கப்படும். இது சமண முனிவர்களாற் பாடப்பட்டதென்பர். நீதி நூல்களுள் தலையாயதும் முதலில் வைத்தெண்ணப்படுவதுமான திருக்குறளுக்கு அடுத்தபடியாக இது சிறப்பிக்கப்பெறும். "பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்", "ஆலும் வேலும் பல்லுக் குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி," என்னும் பழமொழிகள் இது திருக்குறளோடு ஒத்த சிறப்புடைய தென்பதைக் காட்டுவனவாம். நாலு என்பது நாலடியார். இரண்டென்பது திருக்குறள்.

அடிகள் தமது பாடல்களிலும் கடிதங்களிலும் நாலடி யார்ச் செய்யுட்களைக் குறிப்பிடுகின்றனர்.

நாலடியாரில் பெரியாரைப் பிழையாமை என்னும் அதிகாரத்திலுள்ள,

"பொன்னே கொடுத்தும் புணர்தற் கரியாரைக்
கொன்னே தலைக்கூடப் பெற்றிருந்தும்—அன்னோ
பயனில் பொழுதாக் கழிப்பரே, நல்ல
நயமில் அறிவினவர்"

என்னும் செய்யுளை அடிகள் தாண்டவராய சுவாமிகளுக் கெழுதிய,

"மின்னேர் சடைமுடித் தாண்டவ
ராய வியன்றவநின்
றன்னே ரடைதற் கெளிதாக
நான்பெற்றுந் தாழ்த்துகின்றேன்
பொன்னே கொடுத்து மெனுநா
லடியின் பொருட்கிலக்கா

யென்னே யிருந்துழ லென்னேழை
வன்மதி யென்மதியே."

என்னும் கடிதப் பாடலிற் குறிப்பிடுவது காண்க.

"நரைவரும் என்றெண்ணி நல்லறிவாளர்
குழவி யிடத்தே துறந்தார்;—புரைதீரா
மன்னு இளமை மகிழ்ந்தாரே கோல்ஊன்றி
இன்னுங் கெழுந்திருப் பார்."

என்னும் நாலடியார் இளமை நிலையாமைச் செய்யுள், அடிகளால், சிதம்பர புராணப் பதிப்புக்களித்த சாற்றுக் கவியுள் பதிப்பாசிரியர் சிதம்பர சுவாமிகளைப் பாராட்டுமிடத்தில்,

"வையமும் வானமு மறையுஞ் சைவமும்
உய்ய வோங்கிய வொருபெருங் குரவன்
ஞான சம்பந்த நாயக னருளால்
ஈன சம்பந்த மெல்லா மொழித்தோன்
நரைவரு மென்றெணி நல்லறிவாளர்
இரைவுறு குழவி யிடத்தே துறந்தார்
என்னு நாலடிக் கிலக்கிய மானவன்
மன்னுமா தவரெலாம் வழுத்து மருந்தவன்"

என்றெடுத்தாளப்பட்டுள்ளது.

"நல்லா ரெனத்தான் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லா ரெனினும் அடக்கிக் கொளல்வேண்டும்;
நெல்லுக் குமியுண்டு, நீர்க்கு நுரையுண்டு,
புல்லிதழ் பூவிற்கும் உண்டு."

என்ற (நட்பிற் பிழை பொறுத்தல்) பாடலின் முதலிரண்டடிகளை அடிகள் 15—2—1859ல் புதுவை வேலுமுதலியாருக் கெழுதிய கடிதமொன்றில், 'நல்லாரெனித்தான் நனி விரும்பிக் கொண்டாரை அல்லாரெனினுமடக்கிக்கொளல் வேண்டும்' என அப்படியே எடுத்தாண்டிருக்கின்றனர்.

## தேவாரம்

மூவர் அருளிச் செயலாகிய தேவாரத்தை 'நல் இசை நல்கிய மூவர்தம்பாடல்', மூவர்தம் பதிகச்செய்ய தீந்தமிழ்த் தேறல்' எனப் பாராட்டிப் போற்றுவர் அடிகள். அவற்றைத் தனித்தனியே சிறிது காண்போம்.

### திருக்கடைக்காப்பு (திருஞான சம்பந்தர்)

அடிகள் இளமையிலேயே திருஞான சம்பந்தரை வழிபடு (உபாசனு) குருவாகக் கொண்டார்கள். சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வர் மீதும் முறையே ஆளுடைய பிள்ளையாரருண்மாலை, ஆளுடைய அரசுகளருண்மாலை ஆளுடைய நம்பிகளருண்மாலை, ஆளுடைய அடிகளருண்மாலை என நான்கு பாமாலைகளைப் பாடியுள்ளார். இந்நான்கையும் சேர்த்து நாம் ஆளுடைய நால்வர் அருண்மாலை என வழங்கலாம். இதற்கொப்பாகப் பிறிதொன்றைச் சொல்ல வேண்டுமாயிற் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய நால்வர் நான்மணி மாலையொன்றையே சொல்லலாம்.

அடிகள் ஞான சம்பந்தப்பெருமானைக் குருவாகக் கொண்டார்களென்பதை ஆளுடைய பிள்ளையாரருண் மாலையில் 'ஞானசம்பந்தத் தெள்ளமுதாஞ் சிவகுருவே', 'ஞானசம்பந்தன் என்றோங்கு சற்குருவே', 'ஞான சம்பந்தச் செல்வமே எனது சற்குருவே', 'ஞானசம்பந்தன் என்னும் என் சற்குரு மணியே', 'ஞான சம்பந்த உத்தம சுத்த சற்குருவே', 'என்னுயிர்க்குயிர் எனுங் குருவே' எனக் கூறுவதாலறியலாம். ஞானசம்பந்தரைக் குருவாகக்கொண்ட அடிகள் முன்பு குறட்பாக்களை நெஞ்சுக்குக் கூறி குறட்பா மறந்தாய் என நெஞ்சைக் கேட்டது போன்றே, சம்பந்தரின் பொன் மொழிகளை மறந்தாய் என்று நெஞ்சுக்குக் கூறுகின் றார்கள். இதனை நாம் அடிகளின் 'நெஞ்சறிவுறுத்தலி'ற் காண்கின்றோம்.

" மறையோசை யன்றே மறந்தாய் — இறையோன்
புலனைந்தும் என்றருளும் பொன்மொழியை மாயா
மலமொன்றி அந்தோ மறந்தாய் — நிலனென்றி"
— நெஞ்சறிவுறுத்தல், கண்ணி - 470

புலனைந்தும் என்றருளிய பொன்மொழியாவது ஞான சம்பந்தரருளிச் செய்த 'புலனைந்தும் பொறி கலங்கி' என்னுந் தொடக்கத்தையுடைய தேவாரப் பாடலாம்.

" புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் (டு) ஐம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென் (று) அருள்
செய்வான் அமரும்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர
மழை என்றஞ்சித்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில்
பார்க்கும் திருவையாறே."

ஞானசம்பந்தரின் இப்பாடலை இறையோன் அருளும் பொன்மொழி என அடிகள் கூறுவது காண்க.

நெஞ்சறிவுறுத்தல் கண்ணி 525ல் அடிகள் நெஞ்சை நோக்கி,

" ................................................ சம்பந்தர்
அற்றவருக் கற்றசிவ னென்னுமப் பொன்மொழியை
மற்றைமொழி போன்று மறந்தனையே -........."

என்பர்.

'அற்றவருக்கற்ற சிவன்' என்பது ஞானசம்பந்தர் அருளிய 'வெற்றவே அடியார்' என்ற தொடக்கத்தை யுடைய திருவாலவாய்த் திருப்பதிகப்பாடலொன்றின் தொடராகும். அத்தொடருடைய தேவாரப்பாடல் பின் வருமாறு.

"வெற்றவே அடியார் அடிமிசை வீழும் விருப்பினன்
வெள்ளை நீ றணியும்
கொற்றவன் தனக்கு மந்திரி யாய குலச்சிறை
குலாவிநின் றேத்தும்
ஒற்றைவெள் விடையன் உம்பரார் தலைவன் உலகினில்
இயற்கையை ஒழித்திட் (டு)
அற்றவர்க் (கு) அற்ற சிவன்உறை கின்ற ஆலவாய்
ஆவதும் இதுவே."

'அற்றவர்க்கற்ற சிவன்' என்னும் சம்பந்தர் பொன் மொழியைத் தாயுமானுரும்,

"அற்றவர்கட் கற்றசிவன் ஆம் என்ற அத்துவித
முற்றுமொழி கண்டருளில் மூழ்குநாள் எந்நாளோ"

என்று போற்றுகின்றுர்.

திருநெறித் தமிழ்கொண்டு ஐய நீத்தது.

தமது குருவாகிய திருஞானசம்பந்தர் திருநெறித் தமிழாகிய தேவாரத் தைக்கொண்டு தமது ஐயத்தை நீத்தருளினுர் என்பர் அடிகள்.

"முன்புறு நிலையும் பின்புறு நிலையும்
முன்னிநின் றுளமயக் குறுங்கால்
அன்புறு நிலையால் திருநெறித் தமிழ்கொண்
டையநீத் தருளிய அரசே
என்புபெண் ணுருவோ டின்னுயி ரதுகொண்
டெழுந்திடப் புரிந்துல கெல்லாம்
இன்புறப் புரிந்த மறைத்தனிக் கொழுந்தே
என்னுயிர்க் குயிர்எனுங் குருவே."

திருக்கடைக்காப்பால் திருவுளங் காட்டியது

இறைவன், திருநெறி மெய்த் தமிழ்மறையாம் திருக்கடைக்காப்பதனுல் திருவுளங் காட்டினரென்றும், காட்டிய நாளில் தாம் அதனைத் தெரிந்திலரென்றும், பின்பு தமது உளத்திலிருந்து காட்டிய நாளில் அறிந்தனரென்றும், பிழைபடாத தெய்வமறை இதுவெனப் பின்னரே உணரப் பெற்றனரென்றும், நடராஜப் பெருமானைத் துதிக்கும் பாடலொன்றில் அடிகள் கூறுகின்றனர்.

"திருநெறிமெய்த் தமிழ்மறையாம் திருக்கடைக்காப் பதனுல்
திருவுளங்காட் டியநாளில் தெரிந்திலன் இச் சிறியேன்
பெருநெறிஎன் உளத்திருந்து காட்டியநாள் அறிந்தேன்
பிழைபடாத் தெய்வமறை இதுவெனப்பின்
புணர்ந்தேன்
ஒருநெறியில் எனதுகரத் துவந்தளித்த நாளில்
உணராத உளவைஎலாம் ஒருங்குணர்ந்து
தெளிந்தேன்
தெருணெறிதந் தருளும்மறைச் சிலம்பணிந்த பதத்தாள்
சிவகாம வல்லிமகிழ் திருநடத்தெள் ளமுதே."

தேவாரப்பதிகங்கள், திருநெறித் தமிழ் என்னும், திருநெறிய தமிழ் என்றும் வழங்கப்படும். தமது பாடல்கள் திருநெறிய தமிழ் என்பதை ஞானசம்பந்தரே தோடுடைய செவியன் என்னும் முதற்பதிகத்தின் திருக்கடைக் காப்பிற் கூறுகின்ருர். பதிகத்தின் இறுதிச் செய்யுளுக்குத் திருக்கடைக்காப்பு எனப்பெயர். ஞானசம்பந்தர் தேவாரம் முற்றுமே திருக்கடைக்காப்பென வழங்கப்பெறும். மூவர் பாடல்களும் பொதுவாகத் தேவாரம் என வழங்கப் பெறினும், திருஞானசம்பந்தரது அருளிச் செயல்களைத் திருக்கடைக்காப்பென்பதூஉம், திருநாவுக்கரசரது அருளிச் செயல்களைத் தேவாரமென்பதூஉம், சுந்தரமூர்த்திகளது அருளிச் செயல்களைத் திருப்பாட்டென்பதூஉம் ஒரு வகை வழக்கு.

'திருநெறித் தமிழ் மறையாம் திருக்கடைக்காப்பதனுல்' என இங்கு அடிகளார் கூறுவது, திருஞானசம்பந்தர் தேவாரத்தையே யென்றறிய வேண்டும். தேவாரத் திருமுறையை அடிகள் 'திருநெறித் தமிழ்' திருநெறிமெய்த் தமிழ் மறை, 'தெய்வ மறை' என்றெல்லாம் போற்று வதைக் காண்கிறேம்.

## தேவாரம் (திருநாவுக்கரசர்)

ஆளுடைய அரசுகளருண்மாலையில், அரசுகளைப் போற்றும் அடிகள், 'ஒண்ணுளே ஒன்பதுவாய் வைத்தாய் என்ற உத்தமனே' (பாடல் 5) எனப் போற்றுகின்ருர்கள். 'ஒண்ணுளே ஒன்பதுவாய் வைத்தாய்' என்பது திருநாவுக்கரசர் திருவாக்கு. இதனை எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனே என்று தொடங்கும் திருப்புகலூர்த் திருத்தாண்டகத்திற் காணலாம். அப்பரது திருப்புகலூர்த் திருத்தாண்டகத்தில் ஈடுபட்ட அடிகள், அதிற்காணும் சிறந்ததோர் தொடராகிய 'ஒண்ணுளே ஒன்பதுவாய் வைத் தாய்' என்பதைக்கொண்டு நாவுக்கரசைப் போற்றுகின்ருர் கள்.

நாவுக்கரசர் திருமறைக்காட்டுத் திருப்பதிகத்தில்,

"அரக்கனை விரலால் அடர்த்திட்ட நீர்
இரக்கமொன்றிலீர் எம்பெருமானிரே"

என்று பாடியுள்ளதை, அடிகள், திருவருட்பா இரண்டாந் திருமுறை "திருவருள் வழக்க விளக்கத்தில்"

"நாட்டில் புகழ்பெற்ற நாவுக்கரசர்முன் நாள்பதிகப்
பாட்டிற் கிரக்கம்இல் லீர்எம் பிரான்எனப் பாடஅன்றே
ஆட்டிற் கிசைந்த மலர்வாழ்த்தி அமைத்தமறைக்
காட்டில்கதவம் திறந்தன ரால்எம் கடவுளரே."

என்ற திருப்பாடலில் 'இரக்கம் இல்லீர் எம்பிரான் எனப் பாட' என்று கூறிப் போற்றுகின்றமை காண்க.

## திருப்பாட்டு (சுந்தரர்)

சுந்தரமூர்த்திகளுடைய திருப்பாட்டைத் தினந்தோறும் தான் படிக்கும்போது, தன்னைத்தான் அறியாரென்றும், நா மட்டுமோ, ஊனும், உளமும், உயிரும், உயிர்க்குயிரும் படிக்கும் என்றும் தமது அனுபவத்தை அடிகள் பாடியருளு கின்றனர்.

"தேன்படிக்கும் அமுதாம்உன் திருப்பாட்டைத் தினந்
தோறும்
நான்படிக்கும் போதென்னை நானறியேன் நாவொன்றோ
ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்குயிருந்
தான்படிக்கும் அநுபவங்காண் தனிக்கருணைப் பெருந்
தகையே."

இதனுள் சுந்தரர் தேவாரத்தைத் 'திருப்பாட்டு' என்பதனை யும் 'தினந்தோறும் நான் படிக்கும்போது' என்பதனையும் ஊன்றிக் காண வேண்டும்.

சுந்தரர் திருவாக்குகளுள் 'ஏழிசையாய் இசைப்பயனாய் என்னுடைய தோழனுமாய்' என்னும் திருவாரூர்ப் பதிகப் பாடல பலராலும் எடுத்தேத்தப்படுவதாம்.

தாயுமானவரும் தமது எந்நாட்கண்ணியுள்,

"என்னுடைய தோழனுமாய் என்ற திருப்பாட்டின்
நன்னெறியைக் கண்டுரிமை நாஞ்செய்வதெந்நாளோ"

என இப்பாடலைக் குறிப்பிடுவார். அடிகளும் ஏழிசையாய் இசைப்பயனாய் என்ற திருப்பாடலை அனுபவிக்கத் தவறின ரல்லர். இப்பாடற்பொருளை ஆழ நினைந்திடில் கரணங்க ளெல்லாம் கரைந்து கரைந்து இன்பம் பெருகுகின்றதென இயம்புவர் அடிகள்.

"ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் என்றுமுன்நீ சொன்னபெருஞ் சொற்
பொருளை
ஆழநினைத் திடில்அடியேன் அருங்கரணம் கரைந்து
கரைந்
தூழியல்இன் புறுவதுகாண் உயர்கருணைப் பெருந்
தகையே."
— ஆளுடைய நம்பிகள் அருள்மாலை.

இதனுள் சுந்தரர் திருவாக்கைப் போற்றும்முறை நம்மனோர்க்குப் பேரின்பம் பயப்பதொன்றாம்.

## திருவாசகம்

திருமுறை பன்னிரண்டனுள் இது எட்டாந்திருமுறை யாக விளங்குவது. மாணிக்கவாசகப் பெருமானால் அருளிச் செய்யப் பெற்றது. உள்ளத்தை உருக்குந் தன்மையில் இதற்கு ஒப்பான நூல் வேறொன்றுமில்லை. 'திருவாசகத் திற்குருகார் ஒருவாசகத்திற்குமுருகார்' என்பது பழமொழி. இளமையில் திருஞான சம்பந்தரை வழிபடு குருவாகக் கொண்ட அடிகள், திருவாசகத்தை வழிபடு நூலாகக் கொண்டார்கள். திருவொற்றியூர்த்தியாகப்பெருமான் திரு முன்னர் நின்று அடிகள் திருவாசகத்தைப் பாடியுருகி விண்ணப்பிப்பாரென்றும், அப்படிப்பாடும் திருவாசகப் பகுதிகுள் 'வாழாப்பத்தினை மிகவும் அனுபவித்துப் பாடுவ ரென்றும், அப்பத்தின் முதற்பாடலாகிய,

"பாரொடு விண்ணாய்ப் பரந்த வெம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகே னார்க்கெடுத் துரைக்கே
னாண்டநீ யருளிலை யானால்
வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள் புரி யாயே."

என்ற பாடலைப் பாடுங்காலத்து அடிகள் நாத்தழுதழுக்கக் கண்ணீர் வார, மெய்ம்மயிர் சிலிர்த்து, சோர்ந்து விழுந்து விடுதல் வழக்கமென்றும் அத்திருப்பாட்டிலும், 'ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைக்கேன் ஆண்ட நீ அருளிலை ஆனால் வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்' என்னும் வரிகளைப் பாடும்போது அடிகளுக்கு உவகைக் கண்ணீர் ஊற்றெடுத்தொழுகுமென்றும் தமதாசிரியர் அட்டாவதானம் பூவை கலியாணசுந்தர யதீந்திரர் கூறுவரென மணித்திருநாவுக்கரசு முதலியார் தம் கட்டுரையுள் எழுதியுள்ளார். 'நம் இராமலிங்கம் பெரும்பான்மையும் திருவாசகத்திலே ஊரம் வாய்ந்தவர் என்று என் ஆசிரியர் கூறுவர்' என்றும் அக்கட்டுரையுள் எழுதுவார். இச்செய்திகளை இவருக்குச் சொன்ன இவரதாசிரியராகிய யதீந்திரர் அடிகட்குப் பின்னர்ப் பிறந்தவரேனும் சமகாலத்தவராவார். அவராற் கூறப்படும் இதனை நாம் சற்றும் மிகையென்று கொள்ளுவதற்கில்லை.

திருவாசகத்தை அடிகளார் பாடும் வகையை,

"வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே."

—ஆளுடைய அடிகள் அருண்மாலை 7

என்னும் பாடலாலேயே அறியலாம். 'நான் கலந்து பாடுங்கால் என்பதனை நோக்குக. திருவாசகத்தைப் பாடும்போது நாம் அதிற்கலந்து பாடவேண்டும். கலந்து பாடினால் அது, தேன் கலந்து, பால் கலந்து, செழுங் கனித் தீஞ்சுவை கலந்து, ஊன் கலந்து, உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதாகும்.

அடிகள் திருவாசகத்தைக் காதலித்தார். அதற்கே வாழ்க்கைப்பட்டார். அடிகளின் திருவாசகக் காதலே,

"சேமமிகும் திருவாத வூர்த்தேவென் றுலகுபுகழ்
மாமணியே நீஉரைத்த வாசகத்தை எண்ணுதொறும்
காமமிகு காதலன்றன் கலவிதனைக் கருதுகின்ற
ஏமமுறு கற்புடையாள் இன்பினும் இன்
பெய்துவதே."

— ஆளுடைய அடிகள் அருண்மாலை 6

என்றபாடலாலறியலாம். திருவாசகத்தை எண்ணுந்தோறும் காமமிகு காதலனின் கலவிதனைக் கருதுகின்ற கற்புடையாளொருத்தி எய்தும் இன்பத்திலும் மிகுந்த இன்பத்தைத் தாம் எய்துவதாக அடிகள் பாடுகின்றார். என்னே அடிகளின் திருவாசகக் காதல். திருவாசக அனுபவத்தை முற்றிலும் அனுபவிக்க விரும்பிய அடிகள் அவ்வனுபவத்தைத் தாம் அனுபவிக்கத் தந்தருளுமாறு அவரையே வேண்டுகின்றார்கள். அடிகளின் அவ்வேண்டுகோள்,

"தேசகத்தில் இனிக்கின்ற தெள்ளமுதே மாணிக்க
வாசகனே ஆநந்த வடிவான மாதவனே
மாசகன்ற நீதிருவாய் மலர்ந்ததமிழ் மாமறையின்
ஆசகன்ற அநுபவம்நான் அநுபவிக்க
அருளுதியே.'

— ஆளுடைய அடிகள் அருண்மாலை 1

என்பதாம். இதனுள் திருவாசகத்தைத் 'தமிழ் மாமறை' எனக் கூறுவது காண்க. திருவாசகத்தை எண்ணுகின்ற அனுபவத்தையும், பாடுகின்ற அனுபவத்தையும் கூறிய அடிகள், பாடக்கேட்கின்ற அனுபவத்தையும் கூறியருளுகின்றார்கள்.

"வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்

வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில்இங்கு நானடைதல்
வியப்பன்றே .

—ஆளுடைய அடிகள் அருண்மாலை-10

இங்ஙனம் திருவாசகம் தரும் இன்பத்தையும் அதன் அனுபவங்களையும் பலவாறு பாடும் அடிகள், அத்திரு வாசகத்தில் ஒரு மொழியே தன்னையும், தன்னையுடைய தலைவனையும் ஒன்றுவித்துத் தரும்மொழியாக இருக்கும் போது வேறு சாதகம் எற்றுக்கு? சஞ்சலம் ஏன்? இம் மெய்ம்மொழியிருக்க, வேறு குருமொழிக்கு அலைவதேன்? எனக் கேட்கின்றார்கள். அப்பாடல் பின்வருமாறு:

" வருமொழிசெய் மாணிக்க வாசகநின் வாசகத்தில்
ஒருமொழியே என்னையும்என் உடையனையும்
ஒன்றுவித்துத்
தருமொழியாம் என்னில்இனிச் சாதகமேன் சஞ்சலமேன்
குருமொழியை விரும்பிஅயல் கூடுவதேன் கூறுதியே."

—ஆளுடைய அடிகள் அருண்மாலை 8

மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகத்தின் திரு வண்டப்பகுதியில் 'என்னையும் இருப்பதாக்கினன்' என்று பாடுகின்றார்கள். திருவண்டப்பகுதியின் அப்பகுதிவருமாறு:

"அற்புத மான வமுத தாரைக
ளெற்புத் துளைதொறு மேற்றின னுருகுவ
துள்ளங் கொண்டோ ருருச்செய் தாங்கெனக்
கள்ளூ ரக்கை யமைத்தன னொள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
யென்னையு மிருப்ப தாக்கின னென்னிற்
கருணை வான்றேன் கலக்க
வருளொடு பராவமு தாக்கினன்
பிரமன்மா லறியாப் பெற்றியோனே."

இதனுள் 'என்னையும் இருப்பதாக்கினன்' என்றதன் உட்பொருளைத் தனக்கியம்புமாறு அடிகள் மணிவாசகப் பெருமானையே கேட்கின்றார்கள்.

"உரு அண்டப் பெருமறைஎன் றுலகமெலாம் புகழ்கின்ற
திரு அண்டப் பகுதிஎனும் திருஅகவல் வாய்மலர்ந்த
குருஎன்றெப் பெருந்தவரும் கூறுகின்ற கோவேநீ
இருஎன்ற தனி அகவல் எண்ணம்எனக் கியம்புதியே."

— ஆளுடைய அடிகள் அருண் மாலை. 4

திருவாசகத்தின் முதல் நான்கு அகவல்கள் அதன் நுழைவாயில் போன்றன. அவற்றுள் திருவண்டப்பகுதி மூன்றாவதாக நிற்பது. 'அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்' என இது தொடங்குவதால் 'திருவண்டப்பகுதி' எனப்பெயர் பெற்றது. அண்டம், பிண்டம் ஆகிய இரண்டின் தூல சூக்கும நுட்பங்கள் பலவற்றை இது கூறுவது. இத்திருவண்டப் பகுதியை அடிகள் 'உரு அண்டப் பெருமறை என்றுலகமெலாம் புகழ்கின்ற திரு அண்டப்பகுதி எனும் திரு அகவல்' என்று அப்பாடலிற் கூறுகின்றனர்.

திருவாசகத் தொடர்களை அடிகள் தமது பாடல்களுள் எடுத்தாண்டுள்ள இடங்கள் பலவாகும். 'பாதாளம் ஏழினுங் கீழ்' என்று தொடங்கும் திருவெம்பாவைப் பாடலிலுள்ள 'ஓத உலவா ஒரு தோழன் தொண்டருளன்' என்னும் அடியை ஒரு வெண்பாவின் முதலடியாக வைத்துப் பாடியிருக்கின்றார்கள்.

"ஓத உலவா ஒருதோழன் தொண்டர் உளன்
சாதல் ஒழித்தென்னைத் தாளுக்கிப் — பூதலத்தில்
ஐந்தொழில்செய் என்றே அருட்சோதிக் கோல் அளித்தான்
வெந்தொழில்போய் நீங்க விரைந்து."

— திருவருட்பா.

இவ்வண்ணமே, 'தன்பெருமை தானறியாத் தன்மையன்' என்னுந் திருவாசகத்தொடர், திருவருட்பா அருள் விளக்க மாலைப் பாடலொன்றிலும், 'ஈறிலாப்பதங்கள் யாவையுங் கடந்த' என்னுந் தொடர் அருட்பெருஞ்ஜோதியகவலிலும் அடிகளால் எடுத்தாளப்பட்டுள்ளது. திருவாசகக் கருத்துகள் எடுத்தாளப்பட்ட இடங்கள் மிகப்பல.

இதுகாறும் கண்டவற்றுன் அடிகள் திருவாசகத்தைப் போற்றிய முறைமை விளங்கும். தேவாரத்தையும், திருவாசகத்தையும் இங்ஙனம் போற்றும் அடிகள் நால்வர் தமிழையும் சிறப்பித்துப்பாடியுள்ள ஒருபாடல் ஈண்டு நினைந்தின் புறத்தக்கதாம்.

"சேல்வரும் கண்ணி இடத்தோய்நின் சீர்த்தியைச்
சேர்த்தியந்த
நால்வரும் செய்தமிழ் கேட்டுப் புறத்தில் நடக்கச்சற்றே
கால்வரும் ஆயினும் இன்புரு வாகிக் கனிமனம்அப்
பால்வரு மோஅதன் பாற்பெண் களைவிட்டுப்
பார்க்கினுமே"

— திருமுறை 1 — திருஅருள் முறையீடு 162.

## திருமந்திரம்

அடிகளாற் பெரிதும் போற்றப்படும் இது பத்தாந் திருமுறையாகத் திகழ்வது. மூவாயிரம் பாடல்களையுடையது. ஒன்பது தந்திரங்களாக வகுக்கப்பட்டது. ஒவ்வொரு தந்திரமும் பல அதிகாரங்களைக் கொண்டது. இதனை அருளிச் செய்தவர் திருமூலர். திருமந்திரத்திற்குத் 'தமிழ் மூவாயிரம்' என்றெரு பெயருண்டு. திருமூலரே,

"என்னை நன்ருக இறைவன் படைத்தனன்
தன்னை நன்ருகத் தமிழ் செய்யுமாறே".

எனப்பாடுகின்ருர். சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில்,

'முன்னிய அப்பொருள் மாலைத்தமிழ் மூவாயிரஞ்சாத்தி
மன்னிய மூவாயிரத் தாண்டிப்புவிமேல் மகிழ்ந்திருந்து
சென்னிமதி அணிந்தார் தந்திருவருளால் திருக்கயிலை
தன்னில் அணைந்தொருகாலும் பிரியாமைத்
தாளடைந்தார்.''

என்ற திருப்பாடலில் திருமந்திரத்தைத் 'தமிழ் மூவாயிரம்' எனக்குறிக்கின்றார். திருமந்திரம் எண்ணாயிரம் பாடல்களையுடையதென அடிகளார் கூறியதாக ஓர் அன்பர் குறித்து வைத்துள்ளார். சன்மார்க்கத்தைப்பற்றி உபதேசிக்கும் போது அடிகள் 'இந்த மார்க்கத்தின் உண்மை தெரிய வேண்டில் திருமந்திரத்தைக் கவனிக்கில் விளங்கும்' எனக் கூறியதாக ஓர் அன்பர் குறித்து வைத்திருக்கின்றார். சைவ சாத்திர நூல்களுள் இதுவே முன்னிற்பது. 'சாத்திரத்துக்குத் திருமந்திரம்' என்று இது சிறப்பிக்கப் பெறும்.

இத்திருமந்திரத் திருமுறையால் இறைவன் தனக்கு மெய்ப்பொருளை உணர்த்தினன் என அடிகள் ஒரு பாடலிற் கூறுகின்றனர்.

''திருவளர் திருஅம் பலத்திலே அந்நாள்
செப்பிய மெய்ம்மொழிப் பொருளும்
உருவளர் திருமந் திரத்திரு முறையால்
உணர்த்திய மெய்ம்மொழிப் பொருளும்
கருவளர் அடியேன் உளத்திலே நின்று
காட்டிய மெய்ம்மொழிப் பொருளும்
மருவிஎன் உளத்தே நம்பிநான் இருக்கும்
வண்ணமும் திருவுளம் அறியும்.''
— பிள்ளைப் பெருவிண்ணப்பம்.

திருமந்திரத் திருமுறையால் இறைவன் அடிகளுக்கு உணர்த்திய மெய்ம்மொழிப் பொருள் இன்னதெனத் தெரிந்துகொள்ள இயலவில்லை. இறைவன் இராமலிங்க அடிகட்குத் திருமந்திரத் திருமுறையினின்றும் மெய்ப்

பொருளை உணர்த்தினன் — உபதேசித்தான்—எனின் திருமந்திரத்தின் பெருமை தான் என்னே! அதனைச் செய்த திருமூலரின் பெருமைதான் என்னே.

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்', 'அன்பே சிவம்', 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்', உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்', 'ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்', அகத்திற் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்', எனத் திருமூலரால் இதனுட் கூறப் பெறும் உண்மைகள் எல்லாச் சமயத்தார்க்கும் பொதுவானவையாம்.

# திருவருட்பா வெளிவந்த வரலாறு

அடிகளின் திருவாக்கிற் பிறந்தவை பல்லாயிரக் கணக்கான பாடல்களாம். அவற்றிற் கிடைத்த ஏறத்தாழ ஆறு பிரம் பாடல்கள் தொகுக்கப்பட்டுத் திருவருட்பா எனப் பெயரிடப்பட்டன. அடிகளது பாடல்கள் இனியன; எளியன; பாலெனத் தேனெனச் சுவை பயப்பன கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பை அருளுவன. சாதி சமயச் சழக்குகளைச் சாடுவன. கண்மூடி வழக்கமெல்லாம் மண் மூடிப் போகச் செய்வன. அன்பு நெறியைக் காட்டுவன. இறைவனின் உண்மைத் தன்மையை உள்ளவாறு உணர்த்துவன.

இத்தகைய சிறந்த அருட்பாக்களைத் தொகுத்தும் திருமுறைகளாக வகுத்தும் முதன் முதலில் நூலாக வெளியிட்டவர் அடிகளின் மாணுக்கராகிய தொழுவூர் வேலாயுத முதலியாராவார். பாடல்களின் தொகுதிக்குத் திருவருட்பா என்றும், நூலின் பகுதிக்குத் திருமுறை என்றும் பெயரிட்டவரும் தொழுவூர் வேலாயுத முதலியாரே யாவர். "ஆய அருள் இறை எங்கள் அருட்பிரகாசப் பெருமான், தூய அருளால் பொழிந்த சொல்லமிழ்தாம் தமிழ்ப் பெருக்கு, நேய அருட்பற்றுகி நிறைமனத்துப் பெரியர்க்கும், மாய மயக்கு உழல் என் போல் மறவர்க்கும் உள்ளுருக்கி," "அளவாத பேரன்பு சொரிந்து, அருளை விளைவித்துத் தளவாரும் நகைக்கயற்கண் தையலிடம் கொண்டபிரான் வள்மாறும் கழல் மலரோடு இரண்டறுத்து வாழ்விக்கும் உளவாலே, அருட்பா என்று ஒரு நாமம் பூண்டதுவே" எனத் தொழுவூர் வேலாயுதனுர் தாம் பாடிய திருவருட்பா வரலாற்றிற் கூறுகின்றனர்.

திருவருட்பாவை வேலாயுதனுர் ஆறு திருமுறைகளாக வகுத்தார். அடிகள் இளமைக்காலத்தில் சென்னையிலிருந்த

போது கந்த கோட்டத்தையும் திருத்தணிகையையும் பற்றிப் பாடிய பாடல்கள் திரட்டப் பெற்றுப் பதிப்பதற்குச் சித்த மாக இல்லாமையின் அவற்றைப் பின்னர்ப் பதிப்பித்து வெளியிடக் கருதி அவற்றை ஐந்தாந் திருமுறையாக வைத்தார். முறையாகப் பார்ப்பின் அவை முதற்றிரு முறை யாக வைக்கப்படவேண்டும்.

'பின்னுளைய பாடல்களைப் பின்னர் வெளியிடலாம், தற்போது வெளியிடவேண்டா'வென அடிகள் கட்டளை யிட்டிருந்தனராதலின் அவற்றையும் பின்னர் வெளியிடக் கருதி ஆறுந்திருமுறையின்பாற் படுத்தினர். ஐந்தும் ஆறும் இங்ஙனம் நிற்க முதல் நான்கு திருமுறைகளை 1867ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் முதன் முதலாகத் தொழுவூர் வேலாயுதனார் வெளியிட்டார். 1967ஆம் ஆண்டு திருவருட் பாவுக்கு நூற்றாண்டு விழா ஆண்டாகும்.

தமது பாடல்கள் அச்சேறி நூல் வடிவமாக வருவதை அடிகள் பொருட்படுத்தவில்லை. பாடல்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்பெற்றுத் தம்மிடம் வந்து சேரும் வரை தாம் ஒரு வேளையே உணவு கொள்ளப் போவதாக அடிகளின் அன்பர் இறுக்கம் இரத்தின முதலியார் அடிகட்குக் கடித மெழுதினர். இக்கடிதம் கண்ட அடிகள் தாம் உண்ணும் உணவு பொருந்தவில்லை என்றும், இந்த 'நிர்ப்பந்த ஏற்பாட்டை'த் தவிர்த்து உடனே தமக்குத் தெரிவிக்கு மாறும் அதுவரை தானும் ஒருவேளை உணவுடனிருப்ப தாயும், இரு திங்களுள் பாடல்களை அனுப்புவதாயும் இரத்தின முதலியார்க்கு விடையெழுதினர். இவ்வாறு அரிதின் முயன்று உண்ணுநோன்பிருந்து அடிகளின் இசைவினை இறுக்கம் இரத்தின முதலியார் பெற்றூர். திருவருட்பா வரலாற்றில் இறுக்கம் இரத்தின முதலியார்க்கு இன்றியமையாததோர் இடமுண்டு.

ஐந்தாம் திருமுறை தொ. வே. அவர்களால் 1880ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றது. பின்னர் 1885ஆம் ஆண்டில் ஆறும் திருமுறை சோடசாவதானம் சுப்பராய செட்டியாரால் பார்வையிடப்பட்டு வெளி வந்தது.

# அருட்பா மருட்பா போர்

அடிகளின் பாடற்றொகுதிக்குத் 'திருவருட்பா' எனவும், அதன் பகுதிகளுக்குத் 'திருமுறை' எனவும் பெயரிட்டது ஆறுமுக நாவலர்க்கு உடன்பாடன்று. "தேவார திருவாசகங்களே திருவருட்பா எனத்தக்கன; அவை பழைமை தொட்டுத் 'திருமுறை' என வழங்கப்படுகின்றன. அங்ஙனமிருக்க இன்று புதிதாக எழுந்த இவற்றைத் திருமுறை என வழங்குவதா? என்பதே" நாவலரின் வாதம்.

அடிகளையும், திருவருட்பாவையும் இழித்துரைத்துப் 'போலி அருட்பா மறுப்பு' என்பதை எழுதி மாமண்டூர் தியாகேச முதலியார் என்பவர் பேரால் நாவலர் வெளியிட்டார். இதனை ஆறுமுக நாவலர் பிரபந்தத்திரட்டிற் காணலாம். இப்போலி அருட்பா மறுப்புக்கு மறுப்பாக 'போலி அருட்பா மறுப்பின் கண்டனம் அல்லது குதர்க்காரண்ய நாச மகா பரசு' என்பதை அருட்பா அன்பர்கள் தொழுவூர் வேலாயுத முதலியாரைக் கொண்டு எழுதச் செய்து வெளியிட்டனர். அருட்பாக் கட்சி, மருட்பாக் கட்சி என இரு கட்சிகள் தோன்றின. இதிற் சிலரும் அதிற் சிலருமாகப் பலர் சேர்ந்தனர். வாதங்கள் மலிந்தன. இவ் வாதங்கள் அடிகள், நாவலர் காலத்தோடும் நிற்கவில்லை. இவ்விருவர் காலத்திற்குப் பின்னர் அவர்களது மாணாக்கர்களால் தொடரப்பட்டன. மருட்பாக் கட்சியார் 'இராமலிங்க பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பணம்' என்ற கண்டனத்தை வெளியிட்டனர். ம. தி. பானுகவி என்பார் இதனை மறுத்து 'இராமலிங்க பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பண கண்டன நியாய வச்சிர குடாரம்' என்பதனை எழுதி (1905) வெளியிட்டார். பிற்காலத்தில் அருட்பா மருட்பாப் போரை எழுப்பியவர் ஆறுமுக நாவலரின் மாணாக்கரான நா. கதிர்வேற்பிள்ளையாவர். இவரை மறுத்தவர்கள் சதாவதானி செய்குத்

தம்பிப் பாவலரும் மறைமலையடிகளும் ஆவர். சொற்போர்களேயன்றி நீதி மன்றத்தில் 'தூஷணை பரிகார வழக்கு'களும் இருசாராராலும் தொடுக்கப்பட்டு நடந்தன. நாவலர் காலம் முதல், மறைமலையடிகள் காலம் வரை எங்கணும் பெரு வழக்காயிருந்தது. சொற்போர்களையும் வாத புத்தங்களையும் வழக்குகளையும் விரிக்கின் அதுவே ஒரு தனி நூலாகிவிடும். ஆதலின் விரிவஞ்சி ஆறுமுக நாவலர் சரித்திரத்திலும் திரு. வி. க. வாழக்கைக் குறிப்புக்களிலும் காணப்படும் சில குறிப்புகளை மட்டும் எடுததுக் காட்டுவதோடு அமைகின்றேம்.

> "இப்படியிருக்கும்போது, ஒருமுறை இவரும் இராமலிங்க பிள்ளையும் சிதம்பரத்துக்கு ஓரே காலத்தில் வர நேர்ந்தது. அப்போது, சைவாகம விஷயமாகவும சிவதீக்ஷை விஷயமாகவும் இவரோடு வெறுப்புக் கொண்டிருந்த தீக்ஷிதர் சிலர், அவ்விராமலிங்கபிள்ளையைக் கொண்டு இவரை இகழுவிக்கலாமென்று கருதி, சிதம்பராலயத்தில் பேரம்பலத்திலே அவ்விராமலிங்க பிள்ளையையும்" அழைத்து ஒரு கூட்டம் சுக்கில-ஹு ஆனி-மீ (1869) உத்தரத்தன்று கூட்டினார்கள். அதில் இராமலிங்க பிள்ளை உட்பட எல்லாரும் இவரை வாயில் வந்தபடி தூஷித்து, இவரை அடிக்க வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு போய்விட்டார்கள். இக கூட்டத்தின் வரலாறு "பேரம்பலப்பிரசங்கம்" என்னும் பெயர் கொடுத்து சி. சொ. சண்முகப் பிள்ளை, சி. அ. வேலாயுத பிள்ளை, சி. இரா. ஆறுமுகப்பிள்ளை என்னும் மூவரும் வெளிப்படுத்திய பத்திரிகையிற் காணப்படும். இராமலிங்க பிள்ளை பேசிய தூஷணைகள் அப்பத்திரிகையில் இருக்கின்றன.
>
> இந்தக் கூட்ட விஷயமாகச் சில 'கிறிமினல், வழக்குகள் மஞ்சக்குப்பக்கோர்ட்டிலே தொடுக்கப் பட்டன. இராமலிங்க பிள்ளை தம்மேற்றொடுக்கப்

பட்ட வழக்கில் தாம் இவரை எவ்வாற்றானும் அவமதித்துப் பேசவில்லையென்று அழித்து விட்டார். அவர் சொன்னது முழுதும் பொய் யென்று அறிந்த இவர். பலரெதிரே தாம் பேசியதைப் பேசவில்லையென்று இராமலிங்க பிள்ளை சொல்லி மறுத்ததே போதுமென்றெண்ணி, அவர் மேற்கொண்டு வந்த வழக்கை விடுவித்தார். இராமலிங்க பிள்ளை பேரம்பலத்திலே யிருந்து இவரை அவதூறாகப் பேசியது சுக்கில-ஞு ஆனி-மீ (1869) உத்தர தரிசனத்தன்றும்; அவர் தாம் அப்படிப் பேசவில்லையென்று மஞ்சக்குப்பக் கோர்ட்டிலே அழித்துச் சொன்னது அடுத்த மார்கழித் திருவாதிரைத் தரிசனத்தன்றும். இதிலும் ஏதோ ஒரு தெய்வச்செயல் இருக்கிறது போலத் தோன்றுகின்றது."

—ஆறுமுக நாவலர் சரித்திரம்
நான்காம் பதிப்பு (1955). பக்கம் 87, 88.

"கதிரைவேற்பிள்ளை மீது இராமலிங்கசுவாமி கள் சார்பில் ஜார்ஜ் டவுன் மாஜிஸ்டிரேட் மன்றத் தில் ஒரு வழக்குத் தொடரப்பட்டது. அவ்வழக்கு, கதிரைவேற்பிள்ளையின் நண்பரையும் பகைவரை யும் மன்றத்துக்கு ஈர்க்கும்; என்னையும் ஈர்த்தது. யானும் சில மாணுக்கருடன் அடிக்கடி செல்வேன். சிலசமயம் யான் அரைநாள் பள்ளியில் கழிப்பேன்; மற்ற அரை நாள் மன்றத்தில் கழிப்பேன்.

—திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள் பக்கம் 58

• இராமலிங்க சுவாமிகள் சார்பில் கதிரை வேற்பிள்ளை மீது ஒரு வழக்குத் தொடரப்பட்டது. அவ் வழக்கில் சுவாமிகள் காலத்திருந்த பலர் சான்று கூறப்போந்தனர். அவரையெல்லாம்

என் விழிகள் கண்டன. அவர் தஞ் சான்றுகளை என் செவிகள் கேட்டன. அவைகள் சுவாமி களின் உண்மை நிலையை ஊகிப்பதற்கு ஏதுக் களாயின.''

—திரு. வி. க. வாழ்கைக் குறிப்புக்கள் பக்கம் 155.

'' இராமலிங்க சுவாமிகளின் தமையனர் சபாபதி பிள்ளையின் புதல்வர் வடிவேற் பிள்ளை, கதிரைவேற் பிள்ளை மீது தொடுத்த வழக்கில் சாமிநாத ஐயர் சான்றை முன்னவர் விரும்பினர். ஐயர் ஜார்ஜ் டவுன் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு வந்தனர்; ஓர் அறையில் அமர்ந்தனர். அங்கே ஒரு சிறு கூட்டம் நுழைந்தது. யானும் அதைத் தொடர்ந்தேன். இராமலிங்க சுவாமிகளைப் பற்றியும் ஆறுமுக நாவலரைப்பற்றியும் சில நல்ல குறிப்புக்கள் ஐயர் வாயிலாக வெளி வந்தன. அவைகள் இதுகாறும் எந்நூலிலும் வெளிவரவில்லை. பின்னே ஐயர் சான்று கூறினர். அவர் சான்று கதிரைவேற் பிள்ளைக்கே சாதக மாயிற்று. ஐயர் சான்றுக்கு மாஜிஸ்டிரேட் பெரு மதிப்பளித்ததை யான் நேரே கண்டேன். வழக்கு முடிவில் கதிரைவேற் பிள்ளை வெற்றிக்கு ஐயர் சான்றும் துணையாக நின்றது என்று பேசப் பட்டது.''

—திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள் பக்கம் 161.

''ஈழக்கதிரைவேற்பிள்ளைக்கும் நாகை வேதா சலம் பிள்ளைக்கும் அடிக்கடி நிகழ்ந்த வாதப் போர், மிக இளமையில் இவருடன் கலந்து உற வாட என்னைவிடாமல் தகைந்தது.''

—பக்கம் 163.

" இராமலிங்க சுவாமிகளை யொட்டிக் கதிரை வேலருக்கும் வேதாசலனார்க்கும் பலதிற வாதங்கள் நடந்தன. சிவனடியார் திருக்கூட்டங்கள் இரண்டாகப் பிரிந்தன. ஒரு கூட்டம் கதிரைவேற் பிள்ளையை ஆதரித்தது. மற்றொன்று வேதாசலத்தை ஆதரித்தது. பின்னைய கூட்டம் கதிரைவேற் பிள்ளைக்குப் பலவித தீங்கு செய்ய முயன்றது. கதிரைவேலர் மீது கல்லெறிந்தது. அவரை இழித்து இழித்துத் துண்டுகள் வெளியிட்டது; அவரைப் போன்ற உருவஞ் செய்து அதைப் பாடையிலிட்டுக் கொளுத்தியது; இவைகளெல்லாம் போக மற்றொரு கொடுமை நிகழ்த்த உறுதிகொண்டது. அஃது இராமலிங்க சுவாமிகள் கொள்கைக்கு முற்றும் மாறுபட்டது. அஃதென்னை ? கொலை !

வழக்குக் காலத்தில் கதிரைவேற் பிள்ளை இரவு பத்து மணி வரை சிந்தாதிரிப் பேட்டையி லிருப்பர்; சில சமயம் பன்னிரண்டு மணி வரை இருப்பர். அதற்கு மேல் புரசை நோக்குவர். ஒரு நாள் அவரை வழியிலே கொலை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டதாம். அச்செய்தி வேதாசலனார்க்கு எப்படியோ எட்டியது. வேதாசலனார் இரக்கம் உடையவர்; இராமலிங்க அடிகளின் அருள் நெறியில் நிற்பவர்; அவர் என் செய்தார் ? யாழ்ப்பாணத்து மாணாக்கர் ஒருவர் வாயிலாகக் கொடுமையைக் கதிரைவேற் பிள்ளைக்கு அறிவித்தனர். அன்று கதிரைவேற் பிள்ளை தக்க காவலுடன் சென்றனர். கொலைஞர் கருத்து நிறைவேறவில்லை. இந்நிகழ்ச்சியை எனக்குச் சொன்னவர் மறைமலையடிகளே. "

—திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்
பக்கம் 168, 169.

# அடிகள் நிறுவிய பாடசாலைகளும் பத்திரிகையும்

'சன்மார்க்க போதினி', 'சமரச வேத பாடசாலை', என்ற இரு பாடசாலைகளை அடிகள் ஏற்படுத்தினார்கள், அல்லது ஏற்படுத்தக் கருதியிருந்தார்கள் என அறிகிறோம். அவற்றுள் சன்மார்க்க போதினியைப் பற்றி இவண் சிறிது காண்போம். இப்பாடசாலையைப் பற்றி கிடைக்கும் அடிகளின் குறிப்பொன்று பின்வருமாறு.

> " ஆபால விருத்தர்கள் வரையில் யாவர்க்கும் பயில்விக்கும் சன்மார்க்கப் போதினி என்கிற சாஸ்திர பாடசாலை யொன்று நியமிக்கப்படும் ...... ........ தமிழ் ஆரியம் இங்கிலீஷ் சன்மார்க்க போதினி சாலையில் உபய கலாநிதிப் பெரும்புலவர் தொ. வேலாயுத முதலியார் முதலிய அறிஞர்களால் ......... "

இதுபற்றி இவ்வளவே தெரிகின்றதெனினும் இதனுள் அரிய செய்திகள் இரண்டைக் காண்கின்றோம். ஒன்று, இது இளைஞர் முதல் முதியோர் வரை யாவர்க்கும் கல்வி பயிற்று விக்கும் பாடசாலை என்பது. மேற்குறிப்பில் 'ஆபால விருத்தர்கள் வரையில் யாவர்க்கும் பயில்விக்கும் சன்மார்க்க போதினி என்கிற' என்பதை நோக்குக. பாலர் என்போர் சிறுவர். விருத்தராவார்முதியோர். பாலர்பள்ளிகள் பழைமை தொட்டே உண்டு. ஆனால் முதியோர்க்கும் பாடசாலையில் இடமேற்படுத்தியதுதான் அடிகளின் தனிச்சிறப்பு. தமிழ் நாட்டில் முதியோர் கல்வியை முதன்முதலில் ஏற்படுத்தியவர் இராமலிங்க அடிகளேயாவர்.

இன்னொரு அரிய செய்தி தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும், இப்பாடசாலையிற் பயிற்றுவிக்

கப்படுமென்பதே. மேற்குறிப்பில் 'தமிழ், ஆரியம், இங்கிலீஷ்' என்றதனை நோக்குக. 'தமிழ், ஆரியம், இங்கிலீஷ்' என்ற முறை வைப்பும் அழகாக அமைந்திருக்கின்றது. தமிழ், தாய்மொழியும் நாட்டு மொழியுமாதலின் முதலில் வைக்கப்பட்டது. தமிழோடு ஒரு புடை ஒத்து, தத்துவ நூல்கள் பலவற்றைத் தன்னகத்துக்கொண்டு பழங் காலந்தொட்டே வழங்கிவந்த ஆரியம் அதன்பின் வைக்கப் பட்டது. 'தமிழ்' என்பதன் உரையிலும், மெய்ம்மொழிப் பொருள் விளக்கத்திலும், பெருவிண்ணப்பத்திலும் தமிழின் சிறப்பைக் கூறுமிடத்து, ஆரியத்தின் சிறப்பின்மையும் அடிகள் கூறுவதைக் கொண்டு, ஆரியத்தை அடிகள் அறவே வெறுத்தனரெனக் கருதிவிடலாகாது. தமிழை நோக்க, ஆரியம் சிறந்ததாகாதேயொழிய, ஆரியம் அறவே சிறப்பில்லாததன்று. இதுவே அடிகளின் கொள்கை. ஆதலாற்றான் அடிகள் தமது பாடசாலையில் ஆரியத்தையும் கற்பிக்க ஏற்பாடு செய்தனர். ஆட்சி மொழியாகிய ஆங்கிலம் மூன்றாவதாக வைக்கப்பட்டது. நம் நாட்டவர் முன்னேற்றமடைவதற்கு ஆங்கிலப் பயிற்சி இன்றியமை யாததென்பதைக் கருதியே அடிகள் ஆங்கிலப் பயிற்சி அளிப்பதற்கும் திட்டம் செய்தனர்.

'சன்மார்க்க விவேக விருத்தி', என்னும் ஒரு பத்திரிகையை அடிகள் தொடங்கத் திட்டஞ் செய்திருந் தார்கள். இது திங்களிதழாக இருக்கக் கூடுமெனத் தெரி கிறது. இவ்விதழ் வெளிவந்ததா இல்லையா என்பது தெரியவில்லை. இதனைப் பற்றிய விவரங்களையும் 'சன் மார்க்க போதினி', சமரச வேத பாடசாலை', ஆகியவற்றைப் பற்றிய விவரங்களையும் வடலூர் வரலாறு என்னும் எமது நூலில் விரிவாகக் காணலாம்.

சன்மார்க்க போதினி பாடசாலை அடிகளால் (பிரபவ ஞு) 1867 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டதாகும். இற்றைக்கு நூறு ஆண்டுகட்கு முன்பே முதியோர் கல்விக் கும், நாட்டுமொழியும் தாய் மொழியும் ஆகிய தமிழ், இதனை

ஒருபுடை ஒத்த வடமொழி, அரசாங்க மொழியாகிய ஆங்கிலம் ஆகிய மூன்றையும் விரும்புவோர்க்குப் பயிற்று விக்கும் மும்மொழிப் பாடசாலைக்கும் அடிகள் அடிகோலினார்கள் எனின் அவர்களது பேரறிவுத்திறத்தை என்னென்போம்.

# அடிகள் தமிழ்ச் சிங்கம்

தாவூது யோசேப்பு உபாத்தியாயர் (David Joseph B.A.,) என்பார் எழுதிய (1893) 'தமிழ் இலக்கணத் தெளிவு' (A Grammar of Tamil Grammars) என்ற நூலில் *அடிகளைத் தமிழ்ச் சிங்கம் எனக் கூறுகின்றார். அந்நூலில், 'தமிழ் இலக்கியங்கள் உண்டான காலவரையறை' என்ற தலைப்பில் 445, 446 ஆம் பக்கங்களில் காணப்படுவது பின் வருமாறு:

"இதற்குப் பின்னிட்ட காலத்திற் பிறந்தவை, நளவெண்பா, அரிச்சந்திர புராணம், ஸ்காந்த புராணம், திருவிளையாடற் புராணம், இராம நாடகம் முதலிய பலவித நாடகங்கள், விலாசங்கள், தாயுமானார் பாடல், பட்டினத்தார் பாடல், மீனாட்சிசுந்தரம் பிள்ளையாலும் மற்றவர்களாலு மியற்றப்பட்ட கோவை, ஸ்தல புராணங்கள், பிள்ளைத் தமிழ்கள், இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா, பலவித கதைகள், பஞ்சதந்திரம் விநோதரசமஞ்சரி முதலியன.

"அங்கிலேய அரசு தமிழ்நாட்டில் உண்டாகி பிரபல்லியமாகும்போது அங்கிலேயரால் நன்கு மதிக்கப்பட்டு வந்த தமிழ்ப் பண்டிதர்கள், இராமாநுஜ கவிராயர், விசாகப்பெருமாளையர், தாண்டவராய முதலியார், அ. சபாபதி முதலியார், அ. வீராசாமி செட்டியார், வேலாயுத முதலியார், சரவணப் பெருமாளையர்.

---

* இந்நூலை சென்னை அரசாங்க ரெகார்டு ஆபீசிலுள்ள தமிழ்வளர்ச்சி ஆராய்ச்சி அலுவலகத்தில் பார்வையிட்டேம். அங்கு எமது ஆராய்ச்சிக்கு உதவியவர் அவ்வலுவலகத்தில் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றும் திரு. மு. சண்முகம் பிள்ளை அவர்களாவார்.

> அங்கிலேயரையடுத்துறவாடாதிருந்த தமிழ்ச் சிங்கங்கள் நல்லூர் ஆறுமுக நாவலர், மாயவரம் மீனுட்சிசுந்தரம் பிள்ளை, வடலூர் இராமலிங்கப் பரதேசியார், திரிசிரபுரம் முத்துவீரக் கவிராயர், இவர்கள் கொஞ்சகாலத்துக்கு முன்தான் தேக வியோகமாயினர். இச் சிங்கங்களிடம் கற்றுச் சொல்லிகளாயிருந்தவர்கள் இப்போது கலாசாலை களில் தமிழ் முனிஷிகளாயிருக்கிருர்கள்.''

'இச்சிங்கங்களிடம் கற்றுச் சொல்லிகளாயிருந்தவர்கள் இப்போது கலாசாலைகளில் தமிழ் முனிஷிகளாயிருக்கிருர் கள்' என்று டேவிட் ஜோசப் உபாத்தியாயர் கூறுவது திரிசிரபுரம் மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை, இராம லிங்க அடிகள் ஆகிய இருவரைப் பொறுத்தவரை பேருண்மையாகும். பிள்ளையவர்களின் மாணுக்கர்களான தியாகராசச் செட்டியாரும், டாக்டர் உ. வே. சாமிநைதைய ரும் கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியில் தமிழாசிரியர் களாயிருந்தனர். ஐயரவர்கள் பின்னுளில் சென்னை பிரசிடென்சி காலேஜிலும் தமிழ்ப்பேராசிரியராயிருந்தார். அடிகளின் மாணுக்கர் தொழுவூர் வேலாயுத முதலியார், அடிகளின் மறைவுக்குப் பின்னர் சென்னை பிரசிடென்சி காலேஜில் இரண்டாம் நிலைத் தமிழாசிரியராக (Second Tamil Pandit) விளங்கிஞர்.

மொழிகளுக்கெல்லாம் வடமொழியே தாய்மொழி என்று சங்கராசாரியர் கூறியதைப் பொறுக்கப் பெருது, அப்படி யாயின் எல்லா மொழிகளுக்கும் தந்தைமொழி தமிழே என்றுகூறி சங்கராசாரியர் கூற்றைப்புறந்தள்ளிய அடிகளை, 'தமிழ்' என்ற சொல்லுக்குத் தத்துவ உரை செய்து அதன் உண்மைப்பொருளை விளக்கிய அடிகளை, தம்மைத் தமிழ் நாட்டிற் பிறப்பித்தமைக்கும், தமக்குத் தமிழ்ப்பற்றைத் தந்தமைக்கும் இறைவனுக்கு நன்றி கூறும் அடிகளை, தமது அருளிச்செயல்களிளெல்லாம் ஆங்காங்கே தமிழின் தனிச் சிறப்புகளை எடுத்தெடுத்துக் கூறிச் செல்லும் அடிகளைத் தமிழ்ச் சிங்கம் என்னலும் ஒரு வியப்போ.

# சமகாலப் புலவர்களும் பெரியோர்களும்

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் (6—4—1815 - 1—2—1876), ஆறுமுக நாவலர் (18—12—1822 - 5—12—1879), தொழுவூர் வேலாயுத முதலியார் (1832 - 22—2—1889), முன்சீப் வேதநாயகம் பிள்ளை (11—10—1826 - 21—7—1889), காஞ்சிபுரம் சபாபதி முதலியார் (1792 - 1871), அட்டாவதானம் புரசைச் சபாபதி முதலியார் (? - 1886), சித்தாந்த சரபம் அட்டாவதானம் பூவை கலியாணசுந்தர யதீந்திரர் (10—5—1854—1918), நரசிங்கபுரம் வீராசாமி முதலியார், பொன்னேரி சுந்தரம் பிள்ளை, முருகதாச சுவாமிகள் என்னும் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் (28—11—1839 — 5—7—1898), கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள், தாண்டவராய சுவாமிகள், மதுரையாதீனம் சிதம்பர சுவாமிகள், மதுரைத் திருஞானசம்பந்த ராதீனம் 288-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகத் திருஞான சம்பந்த தேசிகர், முத்து கிருஷ்ண பிரம்மம் (1815—?), ஆகியோர் அடிகளின் சம காலப் புலவர்களும் பெரியோர்களுமாவர். அடிகள் காலத்தில் புகழ்பெற்று விளங்கிய புலவர்களும் பெரியோர்களும் பலராயினும், அடிகளோடு தொடர்புடையவர்களே ஈண்டுக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இவர்களுள் ஆறுமுக நாவலர் ஒருவரே அடிகளோடு மாறுபட்டுத் திருவருட்பாவையும் அடிகளையும் தூற்றிப் 'போலியருட்பா மறுப்பு' என்னும் கண்டனச் சிறு நூலை எழுதி வெளியிட்டார். மற்றையோர் அடிகளையும், திருவருட்பாவையும் போற்றி வழிபட்டோராவர். நாவலரின் மாணக்கராகிய சபாபதி நாவலர் (1844—1903) தாமியற்றிய திராவிடப் பிரகாசிகை என்னும் நூலுள் திருவருட்பாவை

மறுத்தும் அடிகளைத் தூற்றியும் எழுதுகிறார். நாவலரின் மாணாக்கரின் மாணாக்கரான நா. கதிரைவேற் பிள்ளை (1874—1907) நாவலர் விட்டுச்சென்ற அருட்பா மருட்பா வாதத்தை மீண்டும் பெரும் போராகத் தொடங்கி நடத்தித் தோல்வியுற்றார். கோட்டாறு சதாவதானி செய்குதம்பிப் பாவலர் (31—7—1874—13—2—1950) அருட்பா மருட்பா வாதத்தில் கதிர்வேற் பிள்ளைக்குப் பேரெதிரியாக விளங்கி 'எதிர்வேற்பிள்ளை' என வழங்கப் பெற்றார்.

இருபதாம் நூற்றாண்டுப் புலவர்களுள் மறைமலையடிகள், திரு. வி. கலியாணசுந்தரனார் முதலியோர் திருவருட்பாவைப் போற்றிச் சிறப்பித்தோராவர். மருட்பாக் கட்சியை மறுத்து அருட்பாக் கட்சிக்குப் பெருவெற்றி தேடித்தந்தோருமாவர்.

இவர்கள் அனைவரது வரலாற்றுக் குறிப்புகளையும், தொண்டுகளையும், அடிகளுடன் தொடர்பு கொண்டவகைகளையும் கூறவேண்டுமென்பது எமது விருப்பமாயிருந்தும் இந்நூலை விரைவில் அச்சிட்டு முடிக்கவேண்டி நேரிட்டதால் அங்ஙனம் செய்யக்கூடவில்லை. இரண்டாம் பதிப்பில் இவை விரிவாகக் கூறப்பெறும்.

# நாம் செய்யவேண்டுவன

இதுகாறும் கண்டவற்றால் அடிகளின் தமிழ்த்தொண்டுகள் இனிது விளங்கும்.

அடிகள் ஞானியாதலாலும் அவர்களது திருவருட்பாவும் பிறவும் ஆன்மிக நூல்களாகவே கருதப்பட்டுவிட்டபடியாலும் இலக்கிய உலகில் அவை பெரிதும் பயிலப்படவில்லை. ஆன்மிக நூல் என்பது ஒருபுறமிருக்க அவற்றை இலக்கியங்கள் என்று கொண்டாலுங்கூட அவற்றுள் இலக்கியக் கண்ணோட்டத்தில் செய்யவேண்டிய ஆராய்ச்சிகள் நிரம்ப உள்ளன. திருவருட்பாவுக்கு ஒரு நல்ல பதிப்பு வெளிவராதிருந்த நீண்ட காலக்குறையைக் காலஞ்சென்ற திரு. ஆ. பாலகிருஷ்ணபிள்ளை பி. ஏ., எம். எல்., அவர்கள் பன்னிரண்டு பகுதிகளாக ஒரு சுத்தப்பதிப்பை வெளியிட்டதன் மூலம் நீக்கினார்கள். அதைப்பின்பற்றி ஒரு ஆராய்ச்சிப்பதிப்பு பல பகுதிகளாக வெளிவரவேண்டும். திருவருட்பாவின் பல பதிகங்களுக்கும் மாலைகளுக்கும் உரை எழுதப்படவேண்டும். அடிகளாரது வரலாறு, கொள்கைகள், அனுபவங்கள் முதலியவை ஆராய்ந்து சிறந்த வகையில் எழுதப்பெறவேண்டும். திருவருட்பாவுக்குச்சொல்லடைவு, பொருளடைவு முதலியவைகள் தொகுக்கப்படவேண்டும். அடிகளது ஒழிவிலொடுக்கப்பதிப்பு, தொண்டமண்டல சதகப்பதிப்பு, சின்மய தீபிகைப் பதிப்பு ஆகிய மூன்றையும் மறு அச்சுக்குக் கொண்டுவரவேண்டும். இவற்றைப் பல்கலைக்கழகங்கள் செய்யலாம். அல்லது தமிழ் வளர்ச்சிக்கழகம், தமிழ் வரலாற்றுக்கழகம் போன்ற ஒரு தனி அமைப்பை ஏற்படுத்தி அதன் வாயிலாகவும் செய்யலாம். அறிஞர்கள் இவற்றைச் சிந்திப்பார்களாக.

வளர்க தமிழ்! வாழ்க வள்ளலார் புகழ்!

வள்ளலாரின் திருக்கரத்தாலெழுதப்பெற்ற
மூல ஏட்டின் படம்



இதன் மூல ஏடு நூலாசிரியரிடத்திலுள்ளது

வள்ளலாரின் திருக்கரத்தாலெழுதப்பெற்ற
மூல ஏட்டின் படம்



இதன் மூல ஏடு நூலாசிரியரிடத்திலுள்ளது

# ஆசிரியரின் நூல்கள்

வெளிவந்தவை

1. வடலூர் வரலாறு
2. இராமலிங்கரும் தமிழும்

இனி வெளிவர இருப்பவை

1. வள்ளலார் வரலாறு
2. திருவருட்பா வரலாறு
3. சன்மார்க்க விளக்கம்
4. இராமலிங்கரும் நால்வரும்
5. வாதவூரடிகளும் வடலூரடிகளும்
6. இராமலிங்கரின் ஒற்றியூர் அனுபவங்கள்
7. இராமலிங்கரின் சிதம்பர அனுபவங்கள்
8. திருவருட்பா—நூல் விவரத் தொகுப்பு (Bibliography)
9. திருவருட்பா திறவு
10. இராமலிங்க ஆராய்வுகள்